102

மலா 18
இதழ் 12

ஜகன்மோகினி

ஆசிரியை:
வை. மு. கோதைநாயகி அம்மாள்

102.
OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
10 APR 1942

PHONE:
86019.

* JAGANMOHINI * MONTHLY *

அடுத்த இதழில் புதிய மலர்

ஞானதீபம்

● கமலாவும் சோமநாதனும் இணைபிரியாத அன்புக் களஞ்சியம்போன்ற தம்பதிகள். அவர்கள் ஆயுளில் ஒருவரையொருவர் பிரியப் போவதே இல்லையென்றுகூட நினைத்து இன்புறுகிறர்கள். ஆனல் விதி செய்யும் கூற்றின் வேகத்தைத் தடுக்க யாரால் முடியும்?

● சிறுமி ஜெயலக்ஷ்மியின்வாழ்க்கைச் சித்திரத்தின் பரிதாபம் என்ன!

● காமாக்ஷியின் கணவன் கதி என்னவாகிறது?

● சாமியார்களில் உண்மைச் சாமியாரின் மகிமை என்ன! போலிச் சாமியாரின் கபடமென்ன?

● சோமநாதனின் எதிர்காலவாழ்வில் மறைந்துகிடக்கும் பயங்கரமான மர்மமென்ன?

யார்யாருடைய இதயத்தில் ஞானதீபச் சுடர் ப்ரகாசிக்கின்றது?

தொடர்ந்து படியுங்கள்.

JL
2021, N22 39
M41.18.12
183062

தயாநிதி
[முடிவு]

அணா 2
காசு 12

ஜகன்மோகினி காரியாலயம், சென்னை



தஞ்சாவூர்

OFFICE OF THE REGISTRAR
10 APR 1942
MADRAS

ஸ்ரீராமஜெயம்.

ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து. —ஸ்ரீ வீரராகவ கவி.

மலர் 18	விஷ ௵ கார்த்திகை மீ டிஸம்பர் 1941	இதழ் 12

திருமொழி

ஒருகுறளாய் இருநிலம் மூவடி மண்வேண்டி
உலகனைத்தும் ஈரடியா லொடுக்கி ஒன்றும்
தருகவென மாவலியைச் சிறையில் வைத்த
தாடாளன் தாளணைவீர்! தக்ககீர்த்தி
அருமறையின் திறள்நான்கும் வேள்வியைந்தும்
அங்கங்க ளவையாறும் இசைகளேழும்
தெருவில் மலிவிழா வளமும் சிறக்கும் காழிச்
சீராம விண்ணகரே சேர்மினீரே.

—திருமங்கையாழ்வார்.

19-வது ஆண்டுக் கொண்டாட்டம்

டிசம்பர் 26-ந் தேதிக்குள்
சந்தா அனுப்புவோருக்குப் பரிசுகள்.

டிசம்பர் கடைசி வரை
புது நாவலுக்குக் குறைந்த விலை.

5 வருஷங்கள் சந்தாதாரரா
யிருப்போருக்கு இனும் நாவல்கள்.

3 புது சந்தா சேர்த்துக் கொடுப்போருக்கு
ஒரு வருஷ சஞ்சிகை இனும்.

முழு விவரங்களுக்கு உள்ளே படிக்கவும்.

திருப்பதி யாத்திரை

3

வை. மு. ஸ்ரீநிவாஸன்.

"உலகம் பலவிதம்" என்னும் சொல்லின் உண்மை அப் பிச்சைக்காரர்களின் குணத்தினாலும் நடத்தையினாலும் நன்கு தெரிந்தது. துர்ப்பாக்கியத்தால் கஷ்ட நிலையிலுள்ள இவர்கள் ஏன் பெருந்தன்மையாக நடந்துகொண்டு ஆயிரக்கணக்கான யாத்ரீகர்களின் ஆதரவை அன்புடன் பெறலாகாது? அருவருப்பும் ஆத்திரமும் கொள்ளும்படி ஏன் நடந்துகொள்ள வேண்டும்?"என்று நாங்கள் பேசிக்கொண்டே செல்வதைக்கேட்ட பிரயாணி ஒருவர் "தங்களுக்கு எது நல்லது என்று தெரிந்துகொள்ளக்கூட சாமர்த்தியம் இல்லை சார், அவர்களில் பெரும்பாலோருக்கு" என்று தானாக ஆரம்பித்தார். "ஆமாம் சார்! அதைப்பற்றித்தான் நாங்களும் பேசிக்கொண்டிருக்கிறோம். நேர்முகமாக நடந்துகொண்டால் நாலுபேர் நல்லதைச் செய்வார்கள். அது தெரியவில்லையே இவர்களுக்கு!" என்றேன். அவர் மேற்கொண்டு சொன்ன விஷயம் எனக்கு ஆச்சரியம் உண்டுபண்ணிற்று. "இவர்களுக்குள்ளே ஒரு பெரிய கட்டுப்பாடு இருக்கு சார்! தலைவன், நாட்டாண்மைக்காரன் என்றெல்லாம் சொல்வதில்லையா, அதுமாதிரி இவர்களுக்குள்ளேயும் உண்டு. மழை பெய்யும்போதுதான் அவர்கள் செய்யும் வேலை தெரியும். மொண்டி, முடம், குருடு முதலியவர்களை ஒரு நொடியில் திடகாத்திரமுள்ள பிச்சைக்காரர்கள் மழையில் நினையாது அகற்றிவிடுகிறார்கள். அம்மாதிரி வியாதியஸ்தர்களுக்கு அந்த 'தலைவர்கள்' வேளாவேளைக்கு கஞ்சியோ கூழோ ஊற்றுகிறார்கள். அத்தகைய உதவி புரிவதற்காக அவர்களுக்கு அந்த அங்கஹீனர்கள் தங்களது வரும்படி முழுதையும் கொடுத்துவிடவேண்டும். வருவாய் மிகவும் குறைவாகவிருந்தால் அவர்களை சரியானபடி நடத்துவதில்லையென்பதால்தான் எப்படியாவது நிறைய 'தட்டு' அகப்படவேண்டுமென்று இந்த பிச்சைக்காரர்கள் தங்களுக்குத் தோன்றியபடியெல்லாம் கத்துகிறார்கள்" என்றார்.

"அப்படியானால் இவர்களுடைய நடத்தைக்கு இவர்களுடைய 'லீடர்கள்' தான் காரணம் என்கிறீர்களா?" என்று கேட்டேன். "நான் அறிந்தமட்டில் அப்படித்தான் இருக்கிறது" என்றார். "இதுவும் பகவத்ஸங்கல்பம்தான். மலை ஏறி இறங்குவதற்குள் பலவித கஷ்டங்களையும் கண்ணால் பார்த்துவிடவேண்டும் என்பது பகவத் ஆக்ஞைபோலிருக்கிறது. அப்படியிருந்தால்தான் அவரவர் மனது எப்படி உள்ளது என்பதைச் சோதிக்கலாம் என்றுதானோ என்னவோ!" என்றேன்.

* * * * *

இப்படி பேசிக்கொண்டே செல்கையில் "டபார்" என்று பலத்த சப்தம் கேட்டது. சில விநாடிகளுள் சற்று தூரத்தில் எங்கள் முன் ஐந்தாறு கல் துண்டுகள் வேகமாகப் பறந்து வந்து விழுந்தன. திடீரென்று இவ்வாறு நடந்தது எங்களுக்குப் பெருத்த ஆச்சரியத்தையும் திகிலையும் உண்டுபண்ணியது. இதன் காரணம் எதுவாயிருக்குமென்று சற்று யோசனை செய்துகொண்டு ஓரமாகச் சென்று கண்ணுக் கெட்டியவரை உற்றுப் பார்த்தோம். கொஞ்ச தூரத்தில் நிறைய வேலைக்காரர்கள் ரோட் போடும் வேலையில் ஈடுபட்டிருந்தது தெரிய வந்தது. பெரிய கற்களை

வெடி வைத்து உடைத்தும், சிறிய கற்களை உளியால் உடைத்தும் தரையை மட்டமாக்கி வண்டிகள் போவதற்கான பாதையை ஏற்படுத்துவதில் முற்பட்டிருந்தார்கள் அவ்வேலைக்காரர்கள். பல விடங்களில் தனித் தனி பிரிவாக அவர்கள் வேலை செய்துகொண்டிருந்ததை அங்கங்கு நின்று நின்று பார்த்துக்கொண்டே சென்றோம். ஓரிடத்தில் மலைச் சரிவில் உயரமான விடத்தில் ஒட்டில் நின்று கொண்டு சிலர் கஷ்டப்பட்டு வேலை செய்வதைப் பார்க்கையில் மயிர்க் கூச்செறிந்ததென்றால் அக்காட்சி எங்ஙனமிருந்திருக்கும் என்று நினைத்துப் பாருங்கள். "உயிருக்கும் துணிந்தே அவ்வளவு அபாயகரமான விடத்தில் நின்று கடினமான வேலையைச் செய்கிறார்கள் பாவம்! வயிற்றுப்பிழைப்புக்காகத்தானே இந்த கஷ்டம்?" என்றேன்.

இதைக் கேட்ட டோலிக்காரன் ஒருவன் "ஸ்வாமி! அவர்கள் கஷ்டப்பட்டு வேலை செய்வதைப் பார்த்து இவ்வளவு கலங்குகிறீரே! அவர்களது வேலை முடிந்து வண்டி போகும் பாதை ஏற்பட்ட பிறகு எங்கள் பிழைப்பில் மண் விழுந்து நாங்கள் வேலையில்லாது திண்டாடப்போகிறோமே, அதைப்பற்றி யோசிக்கிறீங்களா?" என்றான். (அவன் பேசினது தெலுங்கும் தமிழும் கலந்திருந்தது.) "யோசிக்காமலென்ன? ரோட் ஏற்பட்ட பிறகு உங்களுக்குக் கஷ்டம் அதிகம்தான். இவ்வளவு வருஷங்களாக இல்லாத சௌகரியத்தை இப்போது ஏற்படுத்தும் யோசனையைப் பிறப்பித்த பகவான், உங்களுடைய நன்மைக்கும் கட்டாயம் வழி தேடுவார் என்ற நம்பிக்கையுடன் இரு" என்றேன்.

அவனுடைய கூட்டாளியான டோலிக்காரன் "என்ன ஸ்வாமி தாங்கள் கூட இப்படி சொல்றீங்க. மோட்டார்காரிலே உட்கார்ந்து மலை ஏறுவது தான் புண்ணியமோ?" என்று தனக்குத் தோன்றியதைக் கேட்டான். "புண்ணியம் என்பதை மாத்திரம் பார்த்தால் காலாற நடந்து செல்வது தான் உத்தமம். டோலியில் செல்வது ஒன்றும் உசிதமில்லை. பிறருடைய உதவியின்றி தானே சிரத்தையுடன் மலை ஏறி இறங்குவதுதான் விசேஷம்" என்று நான் கூறியது அவர்களுக்குச் சிறிதும் ரஸிக்கவில்லையென்பது மேற்கொண்டு ஒன்றும் பேசாமல் வேகமாகச் சென்றதிலிருந்து தெரிந்தது.

"உண்மையில் அவர்களுக்கு கஷ்டந்தானே, பாவம்" என்றார் ஸ்ரீமான் வேங்கடம். "செடி வைத்தவர் தண்ணீர் கொட்டுகிறார். அவர்களுக்கு வழி தேடாமலா போய் விடுவார். எல்லாம் நல்லதற்கே என்று எண்ணித் திருப்தி யுடையவேண்டும்" என்றேன். "இப்போது சொல்வதற்கென்ன? சுலபமாகச் சொல்லிவிடுகிறீர். அந்த டோலிக்காரன் நிலைமையில் உம்மை வைத்துப் பார்த்தீரானால் இம்மாதிரி பேசுவீரா? ரோட் போடும் வேலை முடிந்து வண்டிகள் போக ஆரம்பிக்கும் நாளை திகிலுடனும், நம்பிக்கைக் குறைவுடனும் அதன் பிறகு என்ன நடக்குமோ என்ற ஏக்கத்துடனும் எதிர்நோக்குவீரா அல்லது எது எப்படியானால் என்னவென்று அசட்டை செய்வீரா. சற்று யோசித்துப் பாரும்" என்று ஒரு 'போடு' போட்டார் ஸ்ரீ வேங்கடம். "வாஸ்தவந்தான். டோலியில் செல்வதை விட பஸ்ஸில் செல்வதில் செலவும், சிரமும் குறையும் என்பதால் நடந்து செல்ல வேண்டுமென்ற பிரதிக்ஞை இல்லாத பெரும்பாலோர் பஸ்ஸில்தான் செல்வார்கள். தனவந்தர்கள் சொந்த மோட்டாரிலோ, டாக்ஸியிலோதான் செல்வார்கள். டோலிக்காரர்களை லக்ஷியம் செய்யமாட்டார்கள். அதற்கென்ன செய்வது?

(தொடரும்.)

"உண்மையில் அந்த நாளை மறக்கவே முடியாது. ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் சில சம்பவங்கள் என்றென்னும் மறக்கமுடியாதவாறு நிகழ்கின்றனவல்லவா? அதேபோலதான் அன்றைய தினத்தில் எனக்கேற்பட்ட அனுபவம். அன்று சில மணி நேரத்திற்குள் நான் அடைந்த ஆனந்தத்தை என்னென்று சொல்வது!...இம்மாதிரி அனுபவம்—அதுவும் நான்கு மணி நேரத்திற்குள்—உங்களுக்கு ஏற்பட்டிருந்தால் அதை உங்களால் மறக்கமுடியுமா?..." என்று "மறக்கமுடியாத நாள்" என்ற தலைப்பில் தில்லையில் கழிந்த ஒரு தினத்தைப்பற்றி எழுதியிருந்ததை 1-6-1941 "யோகினி"யில் படித்திருப்பீர்கள். இவ்விதழில் அத்தகைய மற்றொரு அனுபவத்தை விவரிக்கிறார் "ஸ்ரீவத்ஸன்."

"ஸ்ரீவத்ஸன்"

• தஞ்சையில் ஒரு நாள் •

"பூலோக வைகுண்டம்" என கொண்டாடப்படும் ஸ்ரீரங்கத்தில் காவேரியில்—அதுவும் அம்மா மண்டபத்துறையில்—ஸ்நானம் செய்வதில் ஒரு தனி ஆனந்தம் உண்டல்லவா? அத்தகைய ஆனந்தத்தை நானும் எனது நண்பர் பராதாழ்வாரும் அனுபவித்துக்கொண்டிருக்கையில் சென்ற வருடம் ஸ்ரீரங்கப்பட்டினத்தில் நாங்கள் கோஷ்டியாகக் காவேரியில் இரண்டு மணி நேரம் துளைந்து துளைந்து ஸ்நானம் செய்ததும், கோவிலுக்கும், கோட்டைக்கும், பாழடைந்த கட்டிடங்களுக்கும், நந்தவன அரண்மனைக்கும் சென்றதும் நினைவுக்கு வந்தது. பழங் கதைகளைப்பற்றி நினைக்கையிலோ அல்லது பேசுகையிலோ ஒரு விசேஷ இன்ப உணர்ச்சி ஏற்படுவது சகஜமல்லவா? திரும்பவும் அம்மாதிரி பிரயாணம் எப்போது எந்த ஊருக்கு செய்யலாமென பேசிக்கொண்டே ஸ்ரீ. பராதாழ்வார் இல்லத்தை அடைந்தோம். 'கூப்பிடு தூரத்திலுள்ள' தஞ்சாவூருக்குச் சென்று வரலாமென அவர் யோசனை கூறினர். ஆனல் அந்த சமயம் தனக்கு வருவதற்கு ஒய்வில்லாததைப்பற்றி வருந்தினர். தஞ்சையிலுள்ள தனது நண்பர் மிராசுதார் ஸ்வாமி அய்யர் அவர்களுக்குக்கடிதம் தருவதாயும், அவரது உதவியில் சிறிது நேரத்திற்குள் தஞ்சையில் முக்கியமாகப் பார்க்கவேண்டிய இடங்களையெல்லாம் பார்த்துவிட்டு அன்றைய மாலையே திரும்பிவிடலாமெனத் தெரிவித்தார். ஏற்கெனவே மணி 9 ஆகிவிட்டது. தஞ்சைக்கு வண்டி 10-20க்குப் புறப்படுவதால் உடனே தீர்மானம் செய்யவேண்டியிருந்தது. 'நண்பர் ஒருவரும் வாராது முன்பின்னறியாத ஊருக்குத் தனியே செல்வதில் என்ன ஆனந்தம்?' என்று சற்று யோசித்தேன். 'ஸ்வாமி அய்யரைப்பற்றி உமக்குத் தெரியாததால் இப்படி யோசனை செய்கிறீர். தங்கக்கட்டியென்றால் அவருக்கே தகும். என்னுடைய கடிதத்தைக் கொடும். அதன்பிறகு உமக்கு நடக்கும் உபசாரத்தைப் பாருமே. உடனே புறப்படும். நேரமாகிறது. இந்த வண்டிக்கே போனல்தான் மாலையிலேயே திரும்பிவிடலாம்' என்று உற்சாகமளித்தார். கடிதத்துடன் புறப்பட்டேன் என்று சொல்லவும்வேண்டுமோ?

*   *   *   *   *

சுமார் 12 மணிக்கு தஞ்சை ஸ்டேஷனை அடைந்தேன். "வாயிலிருக்கிறது வழி" என்றபடி விசாரித்துத் தெரிந்துகொண்டு ஸ்ரீ. ஸ்வாமி அய்யர் வீட்டிற்குச் செல்லலாமென்று ஸ்டேஷனைவிட்டு வெளியேவந்தேன்,

பிரயாணிகளின் முகத்தைப் பார்க்கையிலேயே அவர்கள் உள்ளூர் விவரமறிந்தவராயில்லையாயென்பதை அறியும் சாமர்த்தியம் சில வண்டிக்காரர்களுக்கு உண்டு அந்த கோஷ்டியைச் சேர்ந்த ஒருவன் "யார் வீட்டுக்கு சாமி போகணும்? நம்ம வண்டிலே வாங்க. ரவெ நேரத்துலேகொண்டு வுட்டுடரேனுங்க" என்ருன். "மிராசுதார் ஸ்வாமி அய்யர் வீட்டுக்குத்தான் போகணும். என்ன கேக்கறே" என்றேன். "அவுங்க வூட்டுக்குத்தான் தனீயம் யாரையாவது கொண்டு வுட்டுக்கிணே இருக்கிறேனே. அதனலே பேரம் பேசவேண்டிய அவசியம் இல்லீங்க சாமி! மாமூலா குடுக்கிற கூலி மூணணவே நீங்களும் குடுத்துடுங்க. அதுக்கு மேலே வாங்கிண்டா அந்த அய்யா என்னை சும்மாவிடுவாரா?" என்ருன். அவன் கேட்ட கூலி கொடுப்பதாக ஒப்புக்கொண்டு ஏறி உட்கார்ந்தேன்.

கூலி குறைவாகவிருக்கிறபடியால் நான் செல்லவேண்டிய இடம் வெகு சமீபத்தில் இருக்குமென நினைத்தேன். உண்மையிலேயே அந்த கூலி மலிவு என்று சொல்லும்படி அவ்வளவு தூரத்திலுள்ளது ஸ்ரீ. ஸ்வாமி அய்யரின் வீடு என்பது பிறகுதான் தெரியவந்தது. கொஞ்சதூரம் சென்றதும் கோட்டையின் பிரம்மாண்டமான மதில் தென்பட்டது. அதனருகில் சென்றபோது அதையடுத்துள்ள மைதானத்தில் ஆயிரம் பேருக்குக் குறையாமல் அக் கடும்பகலில் கூட்டம் கூடியிருந்ததைக்கண்டேன். விசாரித்ததில் அன்று அந்நகரின் தலைவர் ஒருவர் சத்தியாக்கிரகம் செய்யப்போவதாயும், அவரது சொற்பொழிவைக் கேட்கவே ஜனங்கள் திரள் திரளாகக் கூடியிருக்கிருர்களென்றும் தெரியவந்தது. ஸ்ரீ. ஸ்வாமி அய்யரும் அக் கூட்டத்திற்கு வந்திருப்பார் என்று வண்டிக்காரன் சொல்லியபோதிலும், அவரை எனக்கு அடையாளம் தெரியாதாகையால் அவர் வீட்டிற்குச்சென்று காத்திருந்தே அவரை சந்திக்கலாமெனத் தோன்றியதால் அங்கு இறங்காமல் அவர் வீட்டையடைந்தேன். எதிர்பார்த்ததுபோல அவர் வீட்டிலில்லை.

* * * * *

சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேல் வாசலிலேயே காத்திருந்தேன். கூட்டம் கலைந்து ஜனங்கள் கும்பல் கும்பலாகப் போகவாரம்பித்தார்கள். சுமார் 2 மணிக்கு ஸ்ரீ. ஸ்வாமி அய்யர் வீடு திரும்பினர். அவரிடம் கடிதத்தைக் கொடுத்தேன். அதை வாசலிலேயே படித்துவிட்டு அவர் செய்ததைக் கேட்டால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். உள்ளே கூடப்போகாமல் கார் ஷெட்டிற்குப் போகலாமென கூப்பிட்டார். "நல்ல வெய்யிலில் இவ்வளவு நேரம் நின்றுவிட்டு வந்திருக்கிறீர்களே. சற்று இளைப்பாருங்கள். பிறகு போகலாம்" என்று தெரிவித்தேன். "பரவாயில்லை சார்! நீங்கள் இன்று சாயங்காலமே திரும்புவதாக அவர் கடிதம் எழுதியிருக்கிருர். இப்போது புறப்பட்டால்தான் அரண்மனையையும், கோவிலையும் நிதானமாகப் பார்க்க நேரம் இருக்கும். அவசர அவசரமாகப் பார்த்தால்கூட திருவாடிக்குப் போய்5-30க்குள் திரும்பமுடியாது. தியாகராஜர்உத்ஸவத்தின்போது வாருங்கள். அப்போது திருவையாற்றில் வெகு சந்தோஷமாகப் பொழுதைக் கழிக்கலாம். இப்போது கோவிலையும், அரண்மனையையும் பார்த்துவரலாம்" என்று கூறியவாறு கார்ஷெட்டிற்கு அழைத்துச்சென்ருர். சாப்பாட்டிற்குச் சென்றிருந்த ட்ரைவர் இன்னும் திரும்பி வரவில்லை. சிரமத்தைப் பாராட்டாமல் தானே காரை ஓட்டலானர். கொஞ்ச தூரம் சென்றதும் தனது நண்பரையும் அழைத்துக்கொண்டு காரை அரண்மனைக்குச் செலுத்தினர்.

* * * *

அரண்மனையை யடைந்ததும் தான் காரிலேயே ஓய்வெடுத்துக்கொள்ளுவதாயும், தனது நண்பர் என்னை அரண்மனைக்குள் அழைத்துச் சென்று முழுதும் காட்டுவார் என்று ஸ்ரீ ஸ்வாமி அய்யர் தெரிவித்தார். "என்ன அருமையான குணம்! தான் களைப்புற்றிருக்கையில், ட்ரைவர் வரவைகூட எதிர்பார்க்காது தானே காரை ஓட்டி வந்து இப்போது காரிலேயே ஓய்வு எடுத்துக்கொள்கிறாரே! என்றால்தானே அவருக்கு இந்த கஷ்டம்!" என்று மனதிற்குள் நினைத்துக்கொண்டு அவரது நண்பர் ஸ்ரீ ஜீவாஜீ அவர்களுடன் உள்ளே சென்றேன். கொஞ்சதூரம் சென்றதும் பெரிய ராமர் பட்டாபிஷேகப் படம் ஒன்றிருந்தது. அதனருகில் நின்றிருந்தவர் தட்டைக் காட்டி சில்லரை போடும்படிக் கேட்டார். "ஒரு காலணு போடுங்கள் சார்!" என்றார் ஸ்ரீ. ஜீவாஜி. காலணுவாக இல்லாததால் ஓரணுவைப் போட்டுவிட்டு மிகுதி சில்லரையை எடுத்துக் கொள்ளலாமென தட்டில் ஓரணுவைப் போட்டேன். "தட்டில் ஓரணுவைப்போட்டால் அது மொத்தமும்தான் கொடுத்ததாக அர்த்தம், அதிலிருந்து முக்காலணு எடுத்துக்கொள்ளக்கூடாது. இந்த முக்காலணுவில் நீங்கள் ஏழையாகிவிடப் போகிறீர்களா?" என்று ஆரம்பித்தார் அந்த யாசகர்! அவருடன் வாதாட நேரமும் இல்லை. மனதும் இல்லை. யாசகத்தில் இது ஒரு அதிகாரதோரணை போலிருக்கிறது என்று சொல்லிக்கொண்டு நகர்ந்தோம்.

* * * *

அரண்மனை முழுவதும் தான் அழைத்துச் செல்வதாயும் சிப்பாய்கள் காவல் புரிந்த கோபுரத்தின் ஏழாவது அடுக்குக்கு அழைத்துச் செல்வதாயும், அங்கிருந்து பார்த்தால் ஊர் முழுவதும் நன்றாகத் தெரியுமென்றும், எத்தனையோ பேரைதான் அம்மாதிரி அழைத்துக் காட்டி சன்மானம் பெற்றிருப்பதாயும் ஒருவன் தானாக வலுவில் தெரிவித்தான். அவனை அழைத்துக்கொண்டு சென்றோம். சில விடங்களில் தீட்டப் பெற்றிருந்த ஓவியங்களும், அழகாகச் செய்யப்பட்டிருந்த சிற்ப வேலையும் கண்ணைக் கவரும் வண்ணமும், அக்காலத்தில் எவ்வளவு சாமர்த்தியமும் மேன்மையும் இருந்து பிரகாசித்தன வென்று ஆச்சரியப்படும் வண்ணமும் இருந்தன. ஏழாவது அடுக்கிலிருந்து பார்த்தால் ஊர் முழுதும் ஓர் தோப்புக்குள் அடங்கியது போலத் தென்பட்டது. அந்த அரண்மனைக்குள் சில காட்சிகளை காமெராவிலும், பல காட்சிகளை மனதிலும் பதிவு செய்துகொண்டேன்' புராதன புத்தகங்களும், கையெழுத்துப் பிரதிகளும், சுவடிகளும், ஏடுகளும் வெகு சிரத்தையுடன் சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் அரண்மனை புத்தகாலயத்தை மாத்திரம் பார்க்கமுடியவில்லை. அது அச்சமயம் மூடப்பட்டிருந்தது. வழி காட்டிக்கு ஸ்ரீ. ஜீவாஜி சொல்லியபடி சன்மானம் செய்துவிட்டு வெளியே வந்தோம். காரில் ஸ்ரீ ஸ்வாமி அய்யர் தூங்கிக்கொண்டிருந்தார். சௌகரியமாக வீட்டில் படுத்துக்கொண்டு தூங்கவேண்டியவர் என்னால் காருக்குள் இக்கட்டான விடத்தில் படுத்துத் தூங்க நேரிட்டதேயென்று ரொம்பவும் கஷ்டப்பட்டேன். அவர் எழுந்ததும் என்னால் ஏற்பட்ட அசௌகரியத்திற்காக மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டேன். 'இதெல்லாம் ஒரு கஷ்டமா சார்! ஒருவருக்கொருவர் உதவுவதுதானே மனித சுபாவம்' என்றார் பெருந்தன்மை ததும்ப. பிறகு அவர் வீட்டை யடைந்தோம்.

* * * * *

சிற்றுண்டிக்குப் பிறகு சிறிது நேரம் ஓய்வெடுத்துக்கொண்டோம். தமது குழந்தைகளை எனக்கு ஸ்ரீ ஸ்வாமி அய்யர்வாள் அறிமுகப்படுத்தினர்.

அவரது குமாரி எனது காமெராவைக் காட்டி "அது என்னது ? அதை என்ன பண்ணுவது ?" என்றெல்லாம் தன் குழந்தை சுபாவத்துடனும், மழலைச் சொல்லுடனும் கேட்டாள். போடோவென்றால் என்ன தெரியுமா வென்று கேட்டதற்கு அங்கு மாட்டப்பட்டிருந்த தன் போட்டோவைக் காட்டி "அதுமாதிரி பொம்மை எடுக்கறதுன்னு அர்த்தம்" என்றாள். "அதே மாதிரிதான் இதிலேயும் படம் பிடிக்கலாம். வரயா ஒன்னே போடோ எடுக்கிறேன் ?" என்று கூறி முடிப்பதற்குள் "இது என்ன மாமா சின்னதா யிருக்கே ? அன்னிக்கு கம்பெனிலே பெரிசா கொம்பு மேலே நிக்கவச்சிருந் தான். கரப்பா துணிபோட்டு மூடினான். அதெல்லாம் ஒன்னும் காணமே ! இதுலேகூட போடோ எடுக்கமுடியுமான்னா ?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள். பார்த்ததைப்பார்த்தபடி, உள்ளதை உள்ள பிரகாரம் சொல்வது குழந்தைகளின் சுபாவமில்லையா ? அதுபோல தனது முதல் போட்டோ அனுபவத்தையே கூறினாள் அச்சிறுமி. "நன்னா அழகாக சின்ன போடோ எடுக்கலாம். இந்த காமெராவிலேகூட. நீ வரயா ?" என்று திரும்பவும் சொன்னதற்கு "எங்க அம்பியைக்கூட சேர்த்து போடோ பிடியுங்கோ மாமா" என்று கொஞ்சலாகத் தெரிவித்தாள். அப்போது மணி நான்கு. நல்ல வெயில் காய்ந்துக்கொண்டிருந்தது. குழந்தைகளை சில போட்டோக் கள் எடுத்த பின்னர் நேரமாகிவிட்டபடியால் கோவிலுக்குக் கிளம்பினோம்.

* * * * *

பிரகதீசுவரர் கோயிலுக்குச் செல்லும் வழியில் ஒரு குளத்திற்கு அழைத்துச் சென்றார். அதன் தீர்த்தம் வெகு ருசியாகவிருந்தது. அதன் தோற்றமும் மிக அழகாக மேற்புறத்தில் கோபுரத்துடன் விளங்கிற்று. அதைப் படம் பிடித்துக்கொண்டு கோயிலுக்குள் சென்றோம். அக்கோவி லில் பிரம்மாண்டமான கோபுரமும், மகத்தான லிங்கேசுவரரும், நந்தீசு வரரும் தனிப் பெருமையுடன் விளங்குவதுதான் தஞ்சையின் பெருமை என்று கூறினால் மிகையாகாது. அங்கு எடுத்த படங்களுள் சில வற்றை இவ்விதழின் அட்டை யுட்பக்கத்தில் காணலாம். மேல் வரிசையில் முதலிலுள்ள படம் பிரவித்திபெற்ற கோபுரத்தின் இரு பக்கத்தோற்றம்; தென் மேற்கில் நின்று எடுத்தது. மூன்றாவதாக உள்ளபடம் அதே கோபுரத்தின் நேர் தோற்றம். கோபுரத்தின் அடி வாரத்தில் மேற்கில் நின்று எடுத்தது. நடுவில் உள்ளதுதான் நந்தீசுவரரின் தோற்றம். உற்று கவனித்தால் நந்திக்குப் பக்கத்தில் நிற்கும் மனிதன் அதன் பாதி உயரத்திற்குமேல் எட்டவில்லை யென்பது தெரியவரும். கீழ் வரிசையில் இரண்டாவதாகவுள்ள படம் வெளிச்சத்திற்கு எதிராக எடுத்த தோற்றம். கோபுரமும், நந்திமண்டபமும் அதில் வெளிச்சத்திற்கெதிராக கம்பீரமாக நிற்பதைக் காணலாம். அதே இடத்தில் நின்று காலையில் படம் பிடித்தால் நிழலுக்குப் பதிலாக முழுவிவரங்களும் மிக அழகாகத் தெரியும். கீழ் வரிசையில் முதலிலிருப்பதுதான் குளத்தின் தோற்றம்.

* * * * *

கோயிலுக்குள்ளிருக்கையில் நேரம் போனதே தெரியாது போய்விட் டது. மணி 5-15 ஆகிவிட்டதை உணர்ந்ததும், நேராக ஸ்டேஷனுக்கு விரைந்து சென்றோம். நண்பருக்கு வந்தனம் கூறி ஓடிப்போய் ரயிலில் உட்காருவதற்குத்தான் சில நிமிடங்களிருந்தன. அவ்வளவு சீக்கிரம் பிரிய வேண்டி வந்ததே யென்று வருத்தத்துடன் பிரிந்தோம். உண்மையில் அவர் தஞ்சாவூர் தங்கக் கட்டிதான் !



மதிப்புரை

TRUE CONFESSIONS OF INDIAN GIRLS.

லாகூரிலுள்ள அகில இந்திய ஸ்திரீகளின் சமூக முன்னேற்ற சங்கத்தின் ஆதரவில் வெளியிடப்பட்ட இச் சிறிய புத்தகம் (ஆங்கிலம். 111 பக்கங்கள் அணா 12.) உயர்ந்த கருத்துடன் சிறந்து விளங்குகின்றது. கள்ளங்கபடற்ற இளங்கன்னிகள் எப்படிப் பல நீதிநெறியற்றவர்கள் கையில் சிக்கி, அனேக இன்னல்களுக்கு ஆளாகிறார்களென்பதை நன்றாய் எடுத்துக்காட்டுகிறது. பல கஷ்டங்களுக்குட்பட்ட சில பெண்மணிகள் தங்களது சுயசரிதையை உண்மையை ஒளிக்காது—தங்கள் பெயரைமாத்திரம் தெரிவிக்காது—எழுதியிருக்கின்றதைப் படிக்கையில் நமது மனதில் பல்வேறு உணர்ச்சிகள்—ஆச்சரியம், ஆத்திரம், வருத்தம், பச்சாத்தாபம்—மாறிமாறி ஏற்படுகின்றன.

எப்பேர்ப்பட்ட அக்கிரமங்கள் நாம் சிறிதும் எதிர்பாராத—சந்தேகிக்காத—இடங்களில் தற்காலத்தில் நடக்கின்றனவென்பதை உண்மையை ஒளிக்காமல் அவஸ்தைப்பட்டவர்களே எடுத்துக்கூறியிருக்கிறார்கள். இம் மாதிரியான பிரசுரம் ஒன்றை வெளியிடவேண்டுமென முன்வந்ததற்கும், இது விஷயமாக பெரிய முயற்சி எடுத்துக்கொண்டு அவதியுற்றவரிடமிருந்தே உண்மை வாழ்க்கைக்குறிப்புகளைத் திரட்டி வெளியிட்டதற்கும் ஷை சங்கத்தாரைப் பாராட்டவேண்டியது நமது கடமை.

இப்பிரசுரத்தை சமூக முன்னேற்றத்தில் ஆர்வமுள்ள ஒவ்வொருவரும் கட்டாயம் படிக்கவேண்டும். அதிலுள்ள சில விஷயங்களைக் கவனியுங்கள். (1) அழகாயுள்ள பெண்களை எப்படியாவது கெடுத்து தாங்கள் இன்புறுவதே தங்கள் வாழ்க்கையின் லக்ஷியமாகவுள்ள சில கலியாணமான முரடர்கள் எத்தகைய கொடுமைகளை இழைக்கிறார்கள்; (2) காலேஜ் கன்னிகளின் கற்பை எங்ஙனம் குரு ஸ்தானத்திலுள்ள சிலர் அபகரிக்கிறார்கள்; (3) அன்யோன்யமாகவுள்ள தம்பதிகளை எப்படி நல்ல நடத்தையற்ற ஒரு ஸ்திரீ பிரித்து குடும்ப வாழ்க்கையை அழிக்கிறாள்; (4) பதிவிரதையான இளம் விதவையை எப்படி கோயில் பூசாரி துராக்ருதம் செய்து பாழ்படுத்துகிறான்; (5) பல கோவில்களில் எவ்வளவு தூரம் விபசாரம் பரவியிருக்கிறது; (6) 'சாது' 'சந்நியாசி' யென்று சொல்லிக்கொள்பவர்களில் எவ்வளவு பேர் கெட்ட நடத்தையிலிருக்கிறார்கள்; (7) எப்படி பணத்திற்காக சொந்த பெண்ணையே துரோகம் செய்கிறார்கள்; (8) ஆதரவற்ற அனாதைப் பெண்களை எப்படி தூர்த்தர்கள் (ஆணாயினும் சரி, பெண்ணாயினும் சரி) நய வஞ்சக சூழ்ச்சிச்செய்து பாழ்படுத்துகிறார்கள். இதுபோன்ற பல சமூக ஊழல்களை எடுத்துக் காட்டி சீர்திருத்த விஷயமாகப் பொது ஜனங்களின் ஆதரவைக் கோருகிறார்கள் ஷை சங்கத்தார்.

பிரசாரத்திற்கென்றே வெளியிடப்பட்ட புத்தகமாகையால், பிரசுரகர்த்தர்கள் எதிர்பார்க்கும் பலனையும், பிரபல்யத்தையும் அடையவேண்டுமானால் மிகுந்த குறைந்த விலைக்கு—எவ்வளவுக்கு கட்டுப்படியாகுமோ அவ்வளவுக்கு—விற்கவேண்டும். பல பாஷைகளிலும் மொழி பெயர்க்கவேண்டும். அப்போதுதான் எளியோரும் வாங்கி பல திடுக்கிடும உண்மைகளை அறிய சௌகரியப்படும். — *V. M. S.*

மங்களம்:—என்ன கல்யாணி! கார்த்திகை மாதம் பிறந்துவிட்டது. பெண்ணை புக்ககத்திற்குக் கொண்டு விடவில்லையா!

கல்:—கார்த்திகை தீபத்திற்கு இரண்டு நாள்முன்புதான் போகப் போகிறேன். தட்டானிடம் பாத்திரங்கள் செய்யக் கொடுத்துவிட்டு நான் படும் அவஸ்தை போதும் போலிருக்கிறது. சிவனே என்று ஷாப்பில் ரெடிமெட் வாங்காது போய்விட்டேன். அவன் வீட்டிற்கு தினம் நாலுவேளை லோட்டி கழுதை மாதிரி நடக்கிறேன்.

சுமதி:—லோட்டி கழுதைமாதிரி நடக்கறேனென்றால் அது பொருத்தமாயில்லை. லோட்டி கழுதைமாதிரி ஓடுகிறேன் என்றால் பொருத்தமாய் இருக்கும். இம்மாதிரி பேச்சுகளிலும் பொருத்தம் இருக்கிறது பார்த்தாயா!

பானு:—வாஸ்தவம். சாதம் சாப்பிட்டாயா என்றால் பொருத்தமாய் இருக்கிறது. சாதம் தின்னாயா... என்றால் நன்றாக இல்லை. சோறு தின்னாயா! என்றால் பொருந்தும். அதேபோல் பிண்டங் கொட்டிக் கொள்வது, திண்டியடிப்பது, அன்னம் புசிப்பது, போஜனம் செய்வது, உணவு உண்பது, இப்படி ஒற்றுமையான பதப்ரயோகம் இல்லாது பிண்டம் புசிப்பது, திண்டி உண்பது, என்றால் காதுக்கே நன்றாக இல்லை அல்லவா?

இந்து.—உண்மைதான்! பொருத்தமும் அழகும் பார்த்துதான் எல்லோரும் பேசுகிறார்களா! எது வாய்க்கு வருகிறதோ அதைப் பேசுகிறார்கள். புஷ்பம் அணிவது, பூச் சூட்டுவது, என்றால் அழகாயிருக்கிறது. லிகிதம் வரைதல், கடுதாசி-காகிதம் - எழுதுதல், என்றால் பொருத்தமாயிருக்கும். ஊருக்குப் போதல், பிரயாணம் செய்தல், என்றால் பொருத்தம்.

மங்க:—சரி! சரி! இந்த பொருத்த வார்த்தைகள் ஒரு பக்கம் இருக்கட்டும். அப்படி அழகும் பொருத்தமும் பார்த்துப் பேச ஒருவராலும் முடியாது. அதைப் பிடித்துக் கொண்டு வீண் வாதம் செய்வதில் லாபமில்லை. கார்த்திகைப் பண்டிகைக்கு யார் யார் என்ன புதிய பக்ஷணம் செய்யப் போகிறீர்கள் சொல்லுங்கள்.

காவேரி:—என்ன மங்களம்! நீ புதிய பக்ஷணங்களில் பித்து பிடித்து அலைகிறாய். திருப்பித் திருப்பி என்ன பக்ஷணம் புதிதாகப் பிறந்து கொண்டே இருக்கும்? கடலைமாவும் மைதாமாவுந்தானே வரப்போறது.

மங்:—ஆமாம். அவைகள்தான் வரப்போகிறது. திரும்பத்திரும்ப, தோடி, கல்யாணி, காம்போதி, பைரவி முதலிய ராகங்களில் பல பாட்டுக்களை நாம் சலிக்காமல் அனுபவிக்கவில்லையா! அதுபோல் பதார்த்தம் ஒன்றாகவிருந்தாலும் உருவம், செய்யும் முறை, ருசி இவைகளின் வித்யாஸத்தைத்தான் நாம் சுவைக்க வேண்டும்.

கல்:—சரியான போடு போட்டாய். ரேடியோ வந்தாலும் வந்தது. இந்த கல்யாணி ராகமும் சங்கராபரணமும் காதைத் துளைத்துவிடுகிறது. கல்யாணி ராகத்திற்கே கொஞ்சநாளைக்காவது ரேடியோக்காரர்கள் லீவு கொடுக்கமாட்டார்களாயென்றுகூடத் தோன்றுகிறது. அதோடு சிலர் பாடும்போது கல்

யாணி ராகத்தைப் பாடாதுபோனல் தலை வெடித்துவிடுவதாக அவர்கள் நினைக்கிறார்களோ என்னவோ! இன்னார் பாட்டு என்று புத்தகத்தில் பார்த்தவுடனே கல்யாணி அதில் பிரத்யக்ஷ ஸேவை கொடுக்கும், அந்த ராகத்தை விட்டால் அவர்களுக்கு வேறு ராகம் பாடத் தெரியாதா! என்றும் தோன்றுகிறது.

பானு:—என்ன கல்யாணி! ஏதோ புதிய பக்ஷணங்கள் வரப்போகிற தென்று எதிர்பார்க்கையில் நீ உன் ராகத்தையே எடுத்துக்கொண்டு குறுக்கே வருகிறாயே! கல்யாணி ராகம் உனக்குப் பிடிக்கவில்லை என்றால் ரேடியோவை நிறுத்திவிட்டு சிவனே என்று பேசாமலிரு. ஒரு நாளைக்குப் பத்துபேர் பாடவேண்டு மென்றால் என்ன செய்வது? புதிய புதிய ராகங்களைக் கண்டுபிடித்து ஏதோ ஒரு சிலர் பாடுகிறார்கள். அதைக்கேட்டு இன்புற அந்த ராகங்களும் சிலகாலம் பழகிவிட்டால் கல்யாணி கதியைத்தான் அடைந்து விடும். பழய ராகங்களில் உள்ள இன்பம் ஒருநாளும் குறையாது. என்றாலும் தினம் கேட்டதையே கேட்பது மட்டும் தலைநோவாகத்தானிருக்கும். அதுபற்றி பிறகு பேசிக்கொள்ளலாம். நீ எடுத்ததை முடி மங்களம்! ஏதாவது புதிய பக்ஷணம் உண்டா? சொல்லு.

மங்:—உண்டு அம்மா! உண்டு. அதற்குப் பெயர்,

கோவா சுஹியன்

கால் படி கடலை மாவை நெய்விட்டு மணக்க வறுத்துக் கொள்வது. அதற்கு ஒருபடி பாலை கோவா காய்ச்சிக் கொள்வது. இரண்டிற்கும் சேர்த்து மூன்று ஆழாக்கு சர்க்கரையைப் பாகு வைத்துக் கொள்வது. கொப்பரைத் தேங்காய் ஒரு மூடி துருவிக்கொள்வது. பாதாம் பருப்பு, முந்திரி பருப்பு துண்டம் செய்து வறுத்துக் கொள்வது. ஏலப்பொடி செய்துகொள்வது. பாகு திட்டமாகக் கொதித்ததும், மேற்குறித்த சாமான்களைச் சேர்த்து நன்றாகக் கிளறி அல்வாப் பதம் வந்ததும் இறக்கிவிடுவது. குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம்கூட போடலாம். நன்றாக ஆறிய பிறகு அவைகளை சிறிய எலுமிச்சம் பழ அளவு உருண்டைகள் செய்துகொள்வது. மைதா மாவை தோசை மாவு பதத்திற்குக் கெட்டியாய்க் கரைத்துக் கொண்டு அதில் இந்த உருண்டைகளைத் தோய்த்து, காயும் நெய்யில் போட்டு நன்றாய் சிவக்க வெந்ததும் எடுத்துவிடுவது. இதுதான் கோவா சுஹியன் என்பது. இதையே போளிபோல் மைதா மாவைத் தட்டி, உருண்டைகளை வைத்து மூடி, தட்டி தோசைக்கல்லில் நெய் தடவி போளிபோல் சுட்டு எடுத்தாலும் நன்றாக இருக்கும். இதற்கு கோவா போளி என்று திருநாமம் சூட்டலாம்.

கும:—நெய்யிக்குப் பஞ்சமான காலத்தில் போளியாகச் செய்யலாம். நெய் நிரம்ப உள்ள காலத்தில் சுஹியன் செய்யலாம். ருசியாய்த்தானிருக்கும்போல் தோன்றுகிறது. நீ செய்து பார்த்தாயா!

மங்:—செய்து பார்க்காமல் நான் சொல்லவே மாட்டேன். நேற்றுக்கூட எங்க மாமாவுக்கு விருந்து வைத்தேன். இதுதான் செய்து பரிமாறினேன்.

இந்து:—உப்பு பக்ஷணம் ஒன்றுமில்லையா! 2 நாட்களுக்கு வைத்துக் கொண்டு சாப்பிடும்படியானதாகச் சொல்லு. அப்பவே செய்து அப்படியே தின்பதாகச் சொல்லாதே.

கோதாவரி:—நீ தேவலையேம்மா! பக்ஷணம் சொல்லும் புண்ணியம் போதாதென அதிகாரத்துடன் கேட்கிறாயே! அப்பவேசெய்து அப்படியே தின்பதுதான் அதிகமாக உபயோகப் படுகிறது. டிப்பனுக்குச் சுடச்சுடக்

கொடுப்பதற்கு நன்றாயிருக்கிறது. ஒருநாள் திடீரென்று எங்க எஜமானர் பகல் ரெண்டு மணிக்கு ஆபீஸிலிருந்து இரண்டு நண்பர்களுடன் வீட்டிற்கு வந்தார். மூன்று மணிக்குள் திரும்பிப் போகவேண்டும். 'சீக்கிரம் சுடச்சுட டிப்பன் காப்பிதயார் செய்துகொண்டுவா...கடுக்கு முடுக்கென்று கடிப்பதும் வேண்டாம். உருட்டி உருட்டி விழுங்கும் உப்புமாவும், மோர்க்களியும் வேண்டாம்' என்று கூடவே சொல்லிவிட்டார். என்ன செய்வது? உள்ளேபோய் பார்த்தால் வகையானபதார்த்தங்கள் எதுவுமே இல்லை. மாதக் கடைசியாகையால் எல்லாம் அப்படியும் இப்படியுமாகவிருந்தது. கடலை மாவு, தேங்காய், இரண்டும் கண்ணெதிரில் காக்ஷி கொடுத்தன. உடனே ஒரு புதியமாதிரி தோன்றியது. இப்படித்தான் செய்து பார்க்கலாம் என்று தீர்மானித்தேன். தேங்காயைத் துறுவிக்கொண்டு, பச்சைமிளகாய், கொத்தமல்லிக் கீரை, இஞ்சி, பெருங்காயம், உப்பு முதலிய எல்லாவற்றையும் உரலில் போட்டு நன்ருக அரைத்து அதுடன் கடலை மாவைச் சேர்த்து கொஞ்சம் அரிசி மாவும் கலந்து கரைத்துக்கொண்டேன். இரும்பு தவ்வாவில் நெய் கொஞ்சம் விட்டுத் தோசை வார்ப்பதுபோல் மாவைக் கரண்டியினுல் வார்த்து நன்ருக ஓரங்கள் கறகற வென்று முறுவலாக வரும் பதம் வரையில் நெய் விட்டு இரண்டு புறமும் திருப்பிப் போட்டு தோசைபோல் செய்தேன். மணம் வீட்டைச் சுற்றிக்கொண்டது. ஏற்கெனவே சொல்லிய உசிலி லாடு செய்திருந்ததில் நான்கு மிச்சமிருந்தது. இந்த தோசையும் அந்த லாடுமாக டிப்பன் கொடுத்து காப்பியுங் கொடுத்தேன். தோசை நிரம்பவும் ருசியாயிருந்ததோடு சாப்பிட ஆங்கியும் இருந்தது. ஆளுக்கு 5, 6 தின்று விட்டார்கள். என் பாடுதான் சூன்யமாயிற்று. இது எத்தனை சவுக்யமாயும், ருசியாயுமிருக்கிறது பாரு.

கல்:—கேட்கும்போதே நன்ருக இருக்கிறது. இதற்குப் பெயர் ஒன்றும் வைக்கவில்லையா!

கோதா:—ஏன் வைக்காமல்,

'திருவல்லிக்கேணி தோசை'

என்றதைக்கேட்டதும் எல்லோரும் கொல்லென்று நகைத்தார்கள்.

கூம:—நீ தேவலையம்மா! திருவல்லிக்கேணி தோசை, மைலாப்பூர் இட்லி, அடையாறு அப்பம் என்று கூட புதிதாக செய்வாய்போல் இருக்கிறதே.

கோதா:—அடேயப்பா நம் உள்ளூர் பெயர் உனக்கென்னவெட்கமாயிருக்கிறதா! மைசூர் போண்டா, மைசூர் பாக்கு, மைசூர் ரசம், டில்லி கண்டு, பாம்பே ஹல்வா, காசி ஹல்வா! என்றெல்லாம் சொன்னுல் வெகுவாய் ருசிக்கிறதுபோலிருக்கிறது. ஏன் நம்ம ஊர்கள்மட்டும் ருசியில் குறைந்துவிட்டதா! இன்னும் கேட்டால் எந்தெந்த முக்கிய பண்டிகைகளில் எதெது கடமையாகச் செய்கிறோமோ அதற்கு அந்த பண்டிகையின் பெயரே வைக்க வேண்டும். அந்தந்த மாதங்களின் பெயர்கூட வைக்கலாம்.

இந்து:—சரி! சரி! உனக்கேதோ பித்து பிடித்ததுபோலிருக்கிறது. மாதங்களின் பெயராவது, வருஷங்களின் பெயராவது...நீ சொல்லிய படி ஊர்களின் பெயரே தேவலை... எங்கோ மேளச்சத்தம்கேட்கிறதே...

மங்:—நாலாவது வீட்டில் இன்று வளைகாப்பு. அதான் மேளம். மேளம் என்கிறபோது எனக்கொன்று நினைவுக்கு வருகிறது. அதாவது நாட்டுப் புறங்களில் மட்டும் புதிய வருஷம் பிறக்கும் தினமாகிய சங்கராந்தியன்று அந்தந்த கிராமத்து மேளக்காரர்கள் வீடு

வீடாக வந்து மங்களகரமாக மேளம் வாசித்துச் செல்கிருர்கள். நமது நாகரீகம் நிறைந்த பட்டினவாஸத்தில் அந்த வழக்கம் ஏன் இல்லேயோ தெரியவில்லே. தீபாவளிப் பண்டிகைக்கு மட்டும் வாசிக்கிருர்கள். சங்கராந்தியன்று ஏன் மங்களகரமாக இங்கும் வாசிக்கச் செய்யக்கூடாதா! தீபாவளிக்குக் கொடுப்பதுபோல் ஒன்ரே, இரண்டோ சக்தியானுசாரம் கொடுத்தால் போகிறது. வருஷம் முழுவதும் மங்களகரமாக இருக்க வேண்டுமென்பதற்குச் சூசிகை தானே இது. இம்மாதிரி வருகிற சங்கராந்தியன்று நாம் செய்தால்என்ன?

சும:—பேஷாய்ச் செய்யலாம். பண்டிகைக்குள் சிறந்த பண்டிகை பொங்கல் பண்டிகையாகும். அன்று கட்டுப்பாடாக எல்லோருடைய வீட்டிலும் மேளம் வாசிக்கும்படி ஏற்பாடு செய்தால் நல்லதுதான். தை பிறந்தவுடனே கல்யாண மாதம் தொடங்கியது என்று உத்ஸாகத்துடன் அறிவூட்டுவதாகும். நாம் நமது நாதஸ்வர வித்வானிடம் இதைத் தெரிவித்து தீபாவளிக்கு வழக்கமாக வாசிக்கும் வீடுகளுக்கெல்லாம் சென்று வாசிக்கும்படிச் சொல்லுவோம். கொடுத்தமட்டில் வாங்கிக்கொள்ளட்டும் போதும், இதுவே வழக்கத்தில் வந்துவிட்டால் வெகு ஆனந்தமாயிருக்குமே...

கல்:—இது சரியான யோசனே தான். நான்கூட இதைப்பற்றி எண்ணியதுண்டு. எங்கள் வீட்டிலும் பேசிக்கொண்டோம். எந்த காரியத்திற்கும் முதலில் ஒருவர் முயற்சி எடுத்துக்கொண்டு செய்தால்தானே முடியும். இந்த விஷயத்தை நாம் தெரிந்தவர்கள் ஒவ்வொருவருக்கும் சொல்லி வாய் பிரசாரம் செய்வோம். பட்டினவாஸத்திலேயே இது புதிய காரியமாகையால் அடுத்த பொங்கலன்றே இதை ஆரம்பிப்போம். நானே இன்று நமது நாதஸ்வர வித்வானிடம் சொல்லுகிறேன். அவர்களுக்கும் புதிய வருஷ ஆரம்ப தினத்தன்று வாசிப்பது பெருத்த சந்தோஷமும் லாபமுமாகவிருக்கும். அதோடு நமக்கும் மங்களகரமாக விருக்கும். ஆகையால் நீங்கள் எல்லோரும் முயற்சி எடுத்துக்கொள்ளுங்கள். சரி. நேரமாகிறது. குங்குமம் கொடு. நான் வருகிறேன்.

மங்:—அப்படிசொல்லு ராசாத்தி! இந்தா குங்குமம்!

விகட வெடிகள்

"விருச்சிகம்"

துப்பன்:—சார். இவர் மகா கெட்டிக்காரர். சினிமாவுக்காக இவர் பலதரம் உயிர் துறந்தவர்......

சுப்பன்:—ஓய். அசமஞ்சம்போல் பேசாதேயும். மனிதன் கொட்டாப் புளிமாதிரி எதிரில் நிற்கும்போது உயிர் துறந்தவர் என்று உளறுகிறீரா!

துப்:—சார்! கோபிக்காதீர்கள். இவர் நடித்துள்ள நான்கு படங்களிலும் இவர் உயிர் துறந்திருக்கிருர் சார்! நான் பொய்யே சொல்லவில்லே.

* * * * *

உபாத்தியாயர்:—டேய்! மாத்ருபூமி என்ருல் என்னடா அர்த்தம்.

சிறு பையன்:—பித்ரு பூமிக்கு மனேவி என்று அர்த்தம் சார்!

1. விடாமல் மழை பெய்தால், "ஐயோ ! உபத்திரவம் சகிக்கமுடியவில்லையே இதைவிட வெய்யில் காய்ந்தாலே தேவலை. விசிறிக்கொண்டாவது பொழுதைக் கழிக்கலாம்" என்கிறோம். சகிக்கமுடியாது வெய்யில் காயும்போது "ஐயோ ! பொறுக்கமுடியவில்லையே! மழையே தேவலையே ! போர்த்துக்கொண்டு படுத்திருக்கலாமே" என்கிறோம். நாக்குக்கு நாணயமில்லை என்பதற்கு அத்தாக்ஷி இதுவே போதுமல்லவா !

2. சென்ற வருஷம் ரேடியோவில் பாடிய ஒரு அம்மாளின் சாரீரம் பிரமிக்கத்தக்கவிதமான இனிமையிலிருந்தது; அதே அம்மாள் இன்று பாடும்போது கேட்டால் தூக்கிவாரிப்போடுகிறது. பாகவதர்களைப்போல் ஒன்னரைகட்டை ச்ருதிக்குக் குரல் தாவியதும், இனிமை என்பது திவிலையும் இல்லாது இன்னொரு இடத்தில் அடைக்கலமாகிவிட்டதையும் கேட்க வியப்பு உண்டாகாமலிருக்குமா !

3. ரேடியோ வாங்குவதற்குமுன்பு ஆவலே வடிவாய் பதைத்த மனது சில வருஷம் ஆவதற்குள்ளேயே அதற்கு லீவு கொடுத்துவிடப் பறக்கிறது. காரணம் ? கேட்டதையே கேட்டுக் கேட்டுப் புளித்துப்போனதுதான்.

4. சினிமாக்களில், கணவனை மனைவி அடிப்பதும் திட்டுவதும், கணவன் மனைவிக்குத் தோப்புக்கரணம் போடுவதுமான ஒரு ஆபாஸக் குப்பையை ஹாஸ்யமென்கிற பெயரால் காட்டி ஜனங்களின் அறிவைக் கெடுப்பதுபோல சில எழுத்தாளர்கள் ஒரு பிரமுகரின் வாழ்க்கைக் குறிப்பு எழுதுவதாகக் கூறி கன்னுபின்னுவென்று புளுகுமூட்டையை ஒவ்வாதவிதம் கொட்டியளந்துவிடுகிறார்கள். இவர்கள் பெரிய ஹாஸ்யக் கட்டுரையாளர்களாம். இதை ஜனங்கள் எப்படி மதிப்பார்கள்?

5. அதிக ஆசையுடன் ஒரு காரியத்தை நன்றாகச் செய்யவேண்டும் என்று நினைக்கும்போது அக்காரியத்திற்கு எதிர்பாராத விக்கினங்களும் தடைகளும் உண்டாகின்றன. கோடிக்காமலிருக்கவேண்டும் என்று நினைத்தால் மட்டும் தடை நின்றுவிடுமா ! எல்லாம் காலத்தின் கோலம்.

6. விளம்பரத்தின் பகட்டைக் கண்டு சினிமாவுக்குச் சென்று ஏமாறுவதைப்போன்ற முட்டாள்தனம் வேறில்லை. அப்படி பணத்தையும் செலவிட்டு மனத்ருப்தியுமில்லாது திரும்புவதைவிட பார்த்த மனிதர்களின் அபிப்ராயத்தை நன்கறிந்தபிறகு போவதே உசிதம்.

7. நூற்றுக்கணக்கில் புத்தகங்களைப் படித்தும் நம்பர் கணக்கில் பாஷைகளைக் கற்றும் உள்ள சிலருக்கு ஒரு கடிதத்தை அழகாக, கோர்வையாக எழுதுவதற்கும் தெரிவதில்லை. ஒன்றுமே படிக்காது இருக்கும் சாதாரண மனிதர்கள் சிலர் எழுதும் எழுத்து பிரமிக்கத்தக்கவிதம் இருக்கிறது.

8. சிக்கனத்திற்கும் ஆசை ; சிறப்புக்கும் ஆசைப்பட்டால் முடியுமா ! சிறப்பும் பெருமையும் வேண்டுமானால் கை தாராளமாக நீண்டால்தான் முடியும். சிக்கனம், புகழையும் சிக்கனமாகத்தான் செய்துவிடும்.

9. பேசுவதில் தாம் வெகு சமர்த்தர் என்று எண்ணி சிலர் தத்துபித்து என்று பேசித் தாமே சிரிக்கிறார்கள். பிறத்தியார் சிரிக்கும்படியான வழியில் சாதுர்யமாய், ஹாஸ்யமாய் பேசினால்தானே பிறர் சிரிக்கமுடியும்.

சித்திர ரகளை "கார்த்திகை."

பாகவதர்:—இப்படியாகத்தானே! கும்பகர்ணனாகப்பட்டவன். தூக்க மாகப்பட்ட சுகத்தில் தானே அழுந்திக்கிடந்தான். யானையாகப்பட்டதும்... குதிரையாகப் பட்டதும் கும்பகர்ணனாகப்பட்டவனை மிதித்தாலும் தூக்க மாகப்பட்டது கலையாதுதானே இருந்தது. தொதரின...ன...தோம்.



("வை. மு. ஸ்ரீ", M.A., B.L. அட்வகேட்.)

நித்தியானந்தர்:—சர்மாஜீ! வருக வருக! உமது வரவு நல்வரவாகுக! நீவிர் இவ்வாசனத்தை அலங்கரியும். அடியேன் குடிசைக்குத் தேவரீர் பொன்னடி சாற்றியது இவ்வேழையின் பாக்கியம்!

லாவண்யசர்மா:—மிஸ்டர் ஆனந்தம்! என்ன ஏதாவது நாடகத்திற்குப்பாடம் பண்ணுகிறீரா அல்லது என்னுடன் பேசுகிறீரா? எனக்கு ஒன்றும் புரியவில்லையே!

நி.—உம்முடன் தான் பேசுகிறேன். நாடகத்திற்காக ஒன்றும் கற்றுக்கொள்ளவில்லை. நேற்று இரவு 'அவ்வையும், அதிகமானும்' என்ற நாடகத்தை ரொம்பவும் சிரத்தையுடன் கேட்டதன் பலன் இது. என் இப்படி மிரளுகிறீர்?

லா:—அவ்வையின் காலத்தைச் சித்திரிக்கையில் இலக்கணத் தமிழ் உபயோகிக்கவேண்டியது அவசியந்தானே. அதைக் கேட்டுவிட்டு சாதாரண சம்பாஷணைகளில் ஏன் அசாதாரண பதங்களை உபயோகிக்கிறீர்?

நி:—எமக்கு அது மிகவும் பிடித்தமாகவுளது என நீவிர் கவனித்தல் வேண்டும். அதன் ரஸனையில் யாம் மிகவும் ஈடுபட்டுவிட்டதால் எம்மை விட்டகல்வது கடினமே.

லா:—போதும், போதும். ரொம்பவும் அலட்டிக்கொள்ளாதீர். வாய் வலிக்கும், தலை சுழலும்.

நி:—நண்ப! நீவிர் இங்ஙனம் புகல்வது தமர்க்கு அழகாகாது. நம் போன்றவர் சுத்தமான, புராதன, ஜீவன் மிகுந்த உயரிய தமிழையே பேசுவது கடமை.

லா:—சரி. நீர் உம்முடனேயே அல்லது இந்த கம்பத்துடனாவது பேசிக்கொண்டிரும். என்னைப் போன்றவர்க்கு இன்று நீர் புதிதாகப் பேச ஆரம்பித்திருக்கும் தமிழில் ஜீவனோ, இனிமையோ இல்லை.

நி:—இவ்வளவு சீக்கிரம் பொறுமையை இழந்துவிடுகிறீரே! அரை மணி நேரம் சேர்ந்தாற்போல இதைவிட உயர்ந்த செந்தமிழ் நேற்று கேட்டுக்கொண்டிருந்த எனக்கு ஒரு சலிப்பும் ஏற்படவில்லையே! நேற்றைய நாடகம் எப்படி இருந்திருக்குமென்று யோசித்துப்பாரும். உமக்கு எப்படி இருந்திருக்குமோ? எனக்கு ரொம்பவும் பிடித்திருந்தது. பாவம் ததும்பும் உச்சரிப்பும், உயிருள்ள நடிப்பும் கலந்திருந்தது.

லா:—அவ்வளவு நன்றாயிருந்ததா! மற்ற நிகழ்ச்சிகள் எப்படி இருந்தன?

நி:—ஸ்ரீமதி. எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் 'ஏ ஒன்' கச்சேரியுடன் நவம்பர் மாதம் துடங்கிற்று. நல்ல ஆரம்பத்துடன் இம்மாதம் துடங்கியதன் பலனோ என்னவோ, இம்மாதம் முழுதும் பல கச்சேரிகள் நன்றாயமைந்தன. பல புது பாடகர்கள் எதிர்பார்த்ததைவிட திருப்திகரமாகப் பாடினார்கள். சிலரின் பெயரை கேளும். டி. என். கங்காபாய் (தி 1உ); ஸரஸ்வதி பலராமன் (ம 2உ); எஸ். ஜயலக்ஷ்மி (ம 5உ); குமாரி ரத்னம் (ம 11உ); வேதம்மாள் சிங்கராச்சாரி (ம 15உ); கங்காபாய் சுப்ரமணியம் (ம 16உ); கோலார் ராஜம்மாள் (ம 18உ); என். எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் (ம 19உ); கே.

என். ராஜம், கே. என். கமலம் (ம 23வ); தஞ்சாவூர் ஸ்ரீதாலக்ஷ்மி (தி 23வ); ஜி. ஸுப்புலக்ஷ்மி (ம 26வ); குமாரிகள் கே. லக்ஷ்மி, கே. வேதம் (தி 27வ). தடபுடலில்லாமலடக்க மாகவும் அழகாகவும்—சிலர் அபார மாகவும்—பாடினார்கள். பிரபல வித்வான்களின் கச்சேரிகளைப்பற்றி தனியாகக் கூறவேண்டியதில்லை. இளம் பாடகர்களுள் சேலம் ஜி. தேசிகன் பாட்டைப்பற்றிப்ரத்யேகமாகக் குறிப்பிடவேண்டும்: நாளுக்குநாள் அபாரமாக விருத்தியடைந்துவருகிறது.

லா:—நீர் குறிப்பிட்ட புது பாடகர்களில் அனேகமாக எல்லோரும் சென்னையிலேயே பாடியிருக்கிறார்கள் போலிருக்கிறதே! நன்றாகப் பாடக் கூடியவர்களைத் தெரிந்தெடுத்து மைக்குக்கு முன்கொண்டு நிறுத்துவதில் அவ்வளவு சிரத்தையும் உத்ஸாகமும் இந்நிலையத்தில் காட்டுவது சமீபத்தில்தான் அல்லவா? முன்பு...

நி:—சமீபத்தில் அதிகரித்திருக்கிறது வாஸ்தவந்தான். ஒரு வேளை திருச்சியிலிருந்த "பெரிய கைகள்" சமீபத்தில் இந்நிலயத்துக்கு மாற்றப்பட்டதன் பலனாயிருக்கலாம்.

லா:—இருக்கலாம்; இருக்கலாம். திருச்சி நிலயத்துக்கு தங்களால் எவ்வளவு நல்ல பெயர் ஏற்பட்டதோ அதேமாதிரி இந்த நிலயத்திற்கும் நல்ல பெயரை சம்பாதிப்பதற்கு முயற்சி செய்வது இயற்கைதானே.

நி:—நிகழ்ச்சிகளை நிறுவுவதில் சமீபகாலத்தில் "ஆர்ப்பி" யின் கற்பனைகளுக்கும்; "சிட்டி" யின் சிறு நாடகங்களுக்கும்; "சோமு"வின் சிறு கதைகளுக்கும் தகுந்த ஸ்தானம் கொடுக்காதிருப்பது பெரிய குறையாக விருக்கிறது.

லா:—முன்பெல்லாம் ஆர்ப்பி, சிட்டி, சோமு முதலியவர்களின் பெயரை அடிக்கடி சொல்வீரே, இப்போது அடியோடு காணோமே! தோண்டத்தோண்ட கிணற்றில் நீர் சுரப்பதுபோல, திரும்பத்திரும்ப சந்தர்ப்பமளித்தால் அவர்களது கற்பனை ஊற்று கிளம்பாதா?

நி:—கிளம்பாதென்ன? வழிந்து கூட ஓடிவிடும். அத்தகைய ரஸமான நிகழ்ச்சிகளைக்குறைத்துவிட்டார்கள் பகவத்கீதை விளக்கமும் தாற்காலிகமாக நிறுத்தியிருக்கிறார்கள். அதன் காரணம்தான் புரியவில்லை.

லா:—ஏன் இப்படிப் பண்ணிவிட்டீர்களென்று நாலுபேர் எழுதினால் தான் கவனிப்பார்களோஎன்னமோ?

நி:—இந்த கஷ்டகாலத்தில் யார் ஸ்வாமி ஒவ்வொன்றுக்கும் கடிதம் எழுதிக்கொண்டிருக்கிறார்கள்? அப்படி எழுதினால்தான் ஒவ்வொரு நேயரின் வேண்டுகோளும் த்ருப்தி செய்யப்படும் என்று எப்படிசொல்ல முடியும்? உதாரணமாக எனக்கு ஜலதரங்கக் கச்சேரி மாதத்திற்கு ஒரு முறையாவது கேட்கவேண்டுமென்று விருப்பம். அதேபோல ஸோலோ ஹார்மோனியம்—மற்றெந்த வாத்தியமோ, வாய்ப்பாட்டோ சேராமல்—வாசித்தால் எனக்குப் பிடிக்கும். ஹார்மோனியத்தை பக்கவாத்தியங்களுள் ஒன்றாகவிருக்கக்கூடாதென்று பிரஷ்டம் செய்திருப்பது மிகவும் சரியான காரியம். ஆனால் ஸோலோ ஹார்மோனியம் கூட ஒலி பரப்பக்கூடாதென பிரஷ்டம் செய்திருக்கிறார்களே! சுப்பிரமணிய தீக்ஷிதரைப்போன்று அந்த கருவியிலும் நன்றாக வாசிப்பவர்களுக்கு ஏன் சந்தர்ப்பங்கள் அளிக்கக்கூடாது? இவ்விரண்டு விஷயங்களைப்பற்றியும் கடிதமெழுதினால் என்ன பலன் கிடைக்குமென நினைக்கிறீர்?

லா:—நினைப்பதென்ன? அவர்களுடைய திட்டத்திற்கும், கொள்கைகளுக்கும் உட்பட்டதாயின் கட்டாயம் நீர் விரும்பும் சங்கீதத்தைக் காற்றில் அனுப்புவார்கள் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது.

57-வது "மோகினி" பிரசுரம் : துப்பறியும் நாவல்

கலா நிலயம்

"ஆத்மசக்தி" "கருணாலயம்" போல பல அழகிய கலர் படங்களுடன் 1—1—1942-ல் வெளிவரும்.

விலை ரூ. 1—4—0.

உள்நாட்டு நேயர்களுக்கு 31-12-1941 வரை அணா 12.
வெளிநாட்டு ,, 31-1-1942 ,, 5 கூபன்

நாதியற்றப் பேதைகளிடம் அளவுகடந்த செல்வமிருந்தால் அவர்கள் படுந்துன்பத்திற்கும், அவர்களுக்கு நேரும் விபத்திற்கும் ஒரு எல்லை கூறமுடியுமா? கலாவதி மகா பரிசுத்த வனிதை. அப்பழுக்கற்ற அவளுடைய தூய இதயத்தில் கலைத் தேவியின் பக்தியே நிறைந்து ததும்புகிறது. அவள் கலைப் பித்து பிடித்தவள். அந்த அபாக்யவதிக்குள்ள போக்கிஷம்:—ஒன்று தன் கிழத் தாய்; மற்றொன்று கலைகளுக்கெல்லாம் நிலயமாக விளங்கும் கலா நிலயம், ஸரஸ்வதியின் பிம்பம்; இரண்டேதான். தன்னுடைய பொருளின் போஷணைக்காக குலசேகரனைப் பரிபூரணமாக நம்புகிறாள்....ஆனால் அவள் கண்ட பலன்? கலாவதியின் காதல் தெய்வம் யார்?...அவள் முடிவு என்ன?

அனாதைக்குழந்தை வழி தப்பிவந்து கதறுகிறதே அது யார்?...அந்த துர்ப்பாக்யக்குழந்தையின் கதி என்ன?...புஷ்பக்காரி பாக்யம் வெகு நல்லவள். உத்தமி. கைராசிக்காரி... ஆனால் அவள் வாழ்க்கையின் விநோத மர்மம் என்ன?... உத்கிருஷ்டமான பகவத் ஸன்னிதானத்திலுள்ள பூஜாரி பகவானுக்குப் பூஜை செய்கிறானா அல்லது...? நமது துப்பறியும் நிபுணரான ராஜாராம் நாயுடு என்ன அற்புதமான வேலை செய்யப்போகிறார்? எல்லா விவரங்களுக்கும்

கலா நிலயத்தைப் படித்து இன்புறுங்கள்.

"ஜகன் மோகினி"

19-வது ஆண்டு ஆரம்பம் ஜனவரி 1942.

புதிய வருடத்தில் அம்சங்களுடன் நூபத்தில் மோகினி

● அதிக பக்கங்கள்; ஆனால் இதே விலை ●

தாமதமின்றி உங்கள் பிரதிக்கு முன்னதாக ஆர்டர் செய்யுங்கள்.

க்ஷேமலாபங்கள்

சகோதர சகோதரிகளே !

எம்பெருமானின் திருவருளாலும், உங்களுடைய அன்புமிக்க ஆசியினாலும் நமது மோகினிச் செல்விக்கு இந்த டிஸம்பருடன் **18** ஆண்டுகள் பூர்த்தியாகி ஜனவரியில் **19**-வது ஆண்டு பிறக்கப்போகிற சந்தோஷத்தை உத்ஸாகத்துடன் தெரிவிக்கின்றேன். சாக்ஷாத் தயாநிதியின் திருவருளால் நம் மோகினியில் வெளியான தயாநிதியும் முடிவடைந்தது. அதே தயாபரனின் கருணையை முன்னிட்டும், உங்களுடைய பேராதரவை எதிர்பார்த்தும் நம் ''மோகினி''ச்செல்வி ஜனவரிமாதத்தில் 'ஞானதீபம்' என்கிற புதிய நாவலைத் தாங்கி உங்களை மகிழ்விக்க வரப்போகிறாள்.

இன்னொரு முக்யமான விஷயம், புதிய வருஷத்தில் அனேக புதிய மாறுதல்களுடன் ''மோகினி'' நூதன முறையில் பல அரிய அம்சங்களுடன் வெளியாகப்போகிறாள். ரஸமான கட்டுரைகள், சிறுகதைகள், வாழ்க்கைக் குறிப்புகள், உண்மைச் சம்பவங்கள் முதலியன தொடர்ந்து வெளியாவதுடன், அனேக படங்களுடன் பிரகாசிக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். பேப்பர் பஞ்சத்திலும், பலருடைய வேண்டுகோளின்படி நமது 'மோகினி' இன்னும் நிறைய பக்கங்களுடன் வெளிவரும்.

தற்கால நிலைமையை உத்தேசித்து நமது 19-வது வருஷத்திய முதல் பிரதியை சந்தா செலுத்தியவர்களுக்கு மட்டுந்தான் அனுப்பமுடியும் என்று சென்ற இதழில் அறிவித்ததைத் தயவுசெய்து கவனிக்க வேண்டுமாய் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

'கலா நிலயம்' எனும் புதிய துப்பறியும் நாவல் ஜனவரி 1உ வெளியாகும். நாம் ஏற்கெனவே தெரிவித்தபடி அதன் விலை 1-4. (ஒன்றேகால் ரூபாய்) இருப்பினும் **12** அணுவுக்கு டிஸம்பர் முடிவு வரையில் அன்பர்களுக்குக் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறோம். பலவித வர்ணங்களில் அழகிய படங்களுடன் அதிகமான செலவில் ''ஆத்மசக்தி'' ''கருணாலயம்''போல் தயாராகிறது. அதில் வெளியாகப் போகும் படம் ஒன்றை இவ்விதழின் மேலட்டையில் காணலாம்.

நமது மோகினியின் புதிய வருஷத்துச் சந்தாவையும் புதிய நாவலின் கிரயத்தையும் சேர்த்து ஏற்கனவே அனுப்பியுள்ள அன்பர்களுக்கெல்லாம் எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன். மற்ற நேயர்களும் அவ்வாறே அனுப்பி ஆதரிக்கக் கோருகிறேன்.

19-வது வருஷத்திய சந்தா செலுத்தியவர்களுக்கே ஜனவரி மாதத்திய பத்திரிகை அனுப்பப்படும் என்பதை மீண்டும் தாழ்மையுடன் ஞாபகப்படுத்துகிறேன் **26**உக்குள் அனுப்பவும்.

நன்றியுள்ள,

1-12-1941. வை. மு. கோதைநாயகி.

TO ADVERTISERS.

We have pleasure in announcing that we have appointed The Madras Publicity, Advertising Consultants, Triplicane, Madras, as our Sole Advertising Agents for "Jaganmohini".

1/12/41. MANAGER.

அலைகாற்றில் அகப்பட்டுத் தத்தளிக்கும் பஞ்சைப்போல் சுதாவின் இதயம் தத்தளிக்கின்றது. "ஐயோ! இந்த சொல்ப வருஷத்திற்குள் எத்தனை மாறுதல்கள், எத்தனை பயங்கரங்கள், எத்தனை விபத்துகள்? எந்த துரோகி என் அன்னையின் கையைத் துணிந்து குத்தியிருப்பான்? ஐயோ! நினைக்கவும் பயமாயிருக்கிறதே! கையை இழந்த என் அன்னையின் உள்ளம் எவ்விதம் துடிக்கின்றதோ, யார் அவருக்குப் பணிவிடைகள் செய்கிறார்களோ! யார் அவர்களுக்கு முகங்கோணாது நடக்கிறார்களோ, ஒன்றுமே தெரியவில்லையே! என் தாயின் தத்தளித்த நிலைமையில்கூட நான் உதவாக்கட்டையாக இங்குஅவதிப்படும்படி நான்என்னபாவம்செய்தேனோ!

என் தந்தையின் இதயம் அத்தனை கடினமானதா! அவர் அவ்வளவு துன்மார்க்கரா! கிழம் என்பதை அறிந்தும் தனக்கு மாலையிட்ட ஒரு விலையிலாமாமணியின் உள்ளத்தை இப்படியா சிதறவடிப்பது? அந்தோ! தன் தாயாரும் இறந்து, சகோதரியின் கையும்போய் தானும் தெருவில் பிச்சைக்காரனாக அலையும்படி நேர்ந்தபிறகு மாமா என்மீது கோபமாகவிருப்பதில் என்ன வியப்பு?

ஐயோ! அவருடைய உருண்டு திரண்டு கண்கவரத்தக்க வனப்புடன் பிரகாசித்த மேனியின் பொலிவு எங்கு மறைந்ததோ! காண்போரின் உள்ளத்தை காந்தம்போல் இழுக்கும் சக்தி வாய்ந்த கண்களின் வசீகரம் எப்படி மாறியதோ! சிவந்த ரோஜா புஷ்பத்தைப் போன்று ஜ்வலித்த தேக காந்தி எவ்வாறு அழிந்ததோ! அவருடைய இந்த கோலத்தில் கண்டு சகிக்க யாரால்தான்முடியும். நெஞ்சம் பகீறென்கிறதே...இத்தனைக்கும் காரணம் என் தகப்பனார்தானே...

அத்தகைய பாபாத்மாவின் வயிற்றில் பிறந்த பாபப் பிண்டத்தை அவர் கண்ணால் பார்ப்பதும் தகாது. நான் கேட்ட கேள்விகளுக்கு இம்மட்டும் பதில் சொல்லியதே என் பாக்யமாகும். என்னைப் பார்த்தவுடனே அவர் காறியுமிழ்ந்துவிட்டுத் திரும்பிப் பார்க்காதுபோயிருக்கவேண்டும். அதில்லாது பேசியதே அவருடைய உயர்ந்த குணத்தின் அழகை எடுத்துக்காட்டுகிறது.

அவருடைய மதுர கண்டத்தின் அம்ருததாரைபோன்ற த்வனியைக் கேட்டதும், அவருடைய தரிசனத்தைக் கண்டதும், எனக்கு விமோசனம் உண்டாகிவிட்டதாயும் அவருடைய உதவியால் நான் இந்த நரக வாழ்க்கையிலிருந்து போய்விடலாம் என்றும் ஒரு வினாடிக்குள் எண்ணாததும் எண்ணிவிட்டேனே! எண்ணமெல்லாம் கனவில் கண்ட கோட்டையைப் போலாய்விட்டதே. இந்த கொடிய நரகத்திலிருந்து எனக்கு விமோசனமே இல்லையா! நான் இப்படியேதான் சாகவேண்டுமா!

ஏதோ மரியாதைக்குக் கட்டுப்பட்டு இதுகாறும் இருந்தேன். இனி அரைக்ஷணங்கூட இருக்கமுடியாது. தலைவியை நல்லதன

மாகக் கேட்கப்போகிறேன். அனுப்பினால் போயிற்று; இல்லையேல் 'சொல்லாமல் ஓடிவிட்டாள்' என்கிற பெயர் வந்தாலும் வரட்டும். நான் என் அன்னையிடம் போயேதீருவேன். அப்படி அதற்கும் தடுத்து ஏதாவது உபத்திரவம் செய்தால் தற்கொலை செய்துகொள் வது நிச்சயம். இனி யாருக்கு நான் பயப்படவேண்டும்?

என் இன்பதுரையின் அன்பு இருக்கும் என்று எண்ணி மனப்பால் குடித்துவந்தேன். மக்களுக்குச் சத்ரு மாதாபிதா என்பது எனக்கே சரியாகிவிட்டது. என் தகப்பனாரின் அபாரமான புண்ணியத்தில் அவரும் என்னை வெறுத்தாகிவிட்டது. இனிமேல் எதற்காக பயப்படவேண்டும்? எதைக்கண்டுதான் உயிர் வாழவேண் டும்? இத்தனை தூரம் செய்த என் தகப்பனார் எனக்கு விவாகத்திற்கு ஏற்பாடு செய்யாது இருக்கமாட்டார். நான் தனியாக ஊருக்குச் சென்றுவிட்டால், 'அடேயப்பா! தனியாய் ஓடிவந்துவிட்ட பெண்ணை எப்படி கட்டுவது?' என்று சிலர் சந்தேகித்து அருகில் வராது இருப் பார்கள்...இதுதான் சரியான உபாயம்'' என்று தனக்குள் எண்ணி தீர்மானித்துக்கொண்டாள். எங்குமில்லாத மூர்க்கத்தனமும் துணிச் சலும் எப்படியோ உண்டாகியது.

உடனே எழுந்து தன்னை ஊருக்கு மரியாதையாக அனுப்பி விடவேண்டுமென்று ஒரு கடிதம் எழுதி தலைவிக்கு அனுப்பினாள். இன்னும் இரண்டு நாட்களில் பதில் சொல்வதாகவும் பொறுமையா யிருக்கும்படிக்கும் தலைவியிடமிருந்து பதில் கிடைத்தது. இத்தனை வருஷங்கள் பொறுத்தவளுக்கு இரண்டு நாள் இரண்டு யுகம்போல் தோன்றினாலும் அதையும் பொறுத்துப் பார்த்துவிடுவோம் என்று துணிந்தாள்.

இதற்குள் தலைவி ஹரிஹரனுக்கு, சுதாவின் பிடிவாதத்தைப்பற்றிக் கடிதம் எழுதி உத்திரவு கேட்டதற்கு 'அவளை அனுப்பவேண்டாம். பிறகு நான் எழுதுகிறேன்' என்று கண்டிப்பான பதில் வந்துவிட்ட தால், தலைவி சுதாவிடம் வந்து "இப்பொழுது நீ போகக்கூடாதாம். உன் தகப்பனாரே நேரில் வந்து அழைத்துக்கொண்டு போகிறாராம். கடிதம் வந்திருக்கிறது. ஆகையால் பேசாமலிரு'' என்று உத்திரவு போட்டுவிட்டுப் போய்விட்டாள்.

ஐயோ பாவம்! சுதாவின்பாடு தத்தளிப்பாகிவிட்டது. "என்னை வேண்டுமென்றே இம்மாதிரி அலக்ஷியம் செய்து கொடுமை படுத்து கிறதற்காகவே இம்மாதிரி செய்கிறார்கள். இனி நான் அரைக்ஷணங் கூடப் பொறுக்கமாட்டேன். என் அன்னையை உடனே போய் பார்க்காவிட்டால் என் மனது தாங்காது. என்ன அபகீர்த்தி வந் தாலும் வரட்டும் நான் போய்பார்ப்பதே சரி'' என்று ஒருவைராக்ய மான முடிவு செய்துகொண்டாள்.

யாருடைய தீர்மானத்திற்கும் முடிவிற்கும் நாட்கள் காத்திருக்குமா! அது தன் கடமைப்படி உருண்டுகொண்டே பின்னும் ஒருவாரமாகிவிட்டது. சுதா சமயம் பார்த்துக்கொண்டிருந்தாள்.

இது இங்ஙனமிருக்க, ஹாஸ்டலில் சுதாவைப் பார்த்துவிட்டுச் சென்ற தாமோதரனுக்கு மனது ஒரு வகையிலும் கட்டுக்கு அடங்காமல் தவிக்கிறது. சுதாவை வேண்டுமென்று சிறையில் வைத்திருப்பதுபோல் வைத்திருந்தும் அவள் தன் மீதுகொண்ட ப்ரேமையைச் சற்றும் மறக்காதிருப்பதைக் கண்டு வியப்பும் உண்டாகியது. தனக்கு வலுவில் வரப்போகும் அதிர்ஷ்டத்தைக் கை விடுவதா! அப்பழுக்கற்ற ப்ரீதியுடனிருக்கும் சுதாவைக் கை விடுவதா! அவளுக்கு த்ரோகம் விளைவிப்பதா! ஒன்றும் மனத்திற்குப் பிடிக்கவில்லையே! ஏ பகவானே! ஏன் என்னை இம்மாதிரி வைத்து ஆட்டுகிறாய்! ஒரு மனிதனுக்கு ஒரே வழியைக் காட்டாது பல வழிகளைக் காட்டிக் குழம்பவைப்பதா உனக்கழகு? என் மனத்திற்கோர் தீர்மானத்தைக் கொடுத்து என்னைத் தேற்றமாட்டாயா!" என்று தனக்குள் குழம்பிப்போய் தூக்கமின்றி புரண்டான்.

மூர்:—தாமூ! இன்னும் நீ தூங்கவில்லையா! உடம்புக்கென்ன செய்கிறது? அங்கு யாரோ உன்னை மாமா! மாமா! என்றழைத்தார்களே! அது யாரு?

இக்கேள்வி தாமோதரனைத் திடுக்கிடச்செய்தது. 'குரலிலிருந்து நன்றாகத்தெரிந்திருக்கும்; ஒளிப்பதில் பயனில்லை' என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டு 'அதுவாப்பா! சுதாமதி. அந்த ஹாஸ்டலில் படிக்கிறாளாம்...

மூர்த்தி அலறியவாறு 'யாரு! நம் குழந்தை சுதாவா! ஐயையோ அவள் எதிரிலா நாம் பிச்சை எடுத்தோம்?' என்று விசனத்துடன் கேட்டார்.

தாமோ:—(ஒருவிதமான அலக்ஷியச் சிரிப்பு சிரித்தபடியே) ஏம்பா பிச்சை எடுத்ததற்காகவா வருத்தப்படுகிறீர்கள்? எத்தனையோ பட்டேபட்டே மனிதர்களின் முன்பு பிச்சை எடுப்பதற்கு யாதொரு பேச்சுமில்லை. அந்த தூர்த்தனுக்குப் பெண்ணைக் கொடுத்து பெண்ணின் கையொடிந்து முண்டமாயிருப்பதில் எவ்வித சங்கடமும் இல்லை. அந்தப் பெண்ணின் முன்பு பிச்சை எடுத்ததுதானா வெட்கம்? சாக்ஷாத் பகவானே பிக்ஷாண்டவர் வேடத்தில் காட்சியளிக்கும் போது மனிதப் புழுகிற்குச் சமமான நாம் பிச்சை எடுப்பதில் என்ன அவமானம்?...

மூர்:—தம்பி! ஞானத்தை அஞ்ஞான இருள் மறைக்கின்றது. அந்தக்கொடிய அஞ்ஞானத்தை விலக்க ஓர் குரு வேண்டாமா! இனி நான் கவலைப்படமாட்டேன்; சுதாவானால் என்ன! அவள் அப்பனானால் என்ன! சரி! அது கிடக்கட்டும். அந்தம்மாளுக்கு என்ன பதில் சொல்லப்போகிறாய்? அதைப்பற்றித் தீர்மானம் செய்தாயா

தாமோ:—எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. மனது குழம்பித் துடிக்கிறது. நீங்கள்தான் ஒரு முடிவு சொல்லுங்கள்.

மூர்:—கடவுள் நமக்கு திடீரென்று அவர்களின் மூலம் நல்ல காலத்தைக் காட்டியிருக்கிறார். அதை நாம் ஏன் கைவிடவேண்டு மென்றுதான் தோன்றுகிறது. ஏழ்மை நிலை தானே நம்மை இம் மாதிரி செய்தது. இனி நம்மை யாரும் ஜாதியில் சேர்த்துக்கொள்ள வேண்டாம். நாம் இப்படியேபிச்சைக்காரர்களாகத் திரிந்துசாவதை விட ஒரு சொல்ப காலமாவது பசியாமலிருந்துச் சாகலாமே என்று தான் தோன்றுகிறது. அவளுக்குச் சட் புட்டென்று பதில் சொல்ல வேண்டுமேயன்றிக் கால தாமதம் செய்வதில் பலனில்லை.

தாமோ:—நித்யா ஏதாவது நினைப்பாளா!

மூர்:—போடா பயித்தியமே! நித்யா நினைப்பதற்கு என்ன இருக்கிறது? நீ மட்டுமாவது சந்தோஷமாக விருக்கிறாயே என்று சந்தோஷப்படுவாள். நம் பசிப்பிணியும் பிச்சைக்கார வேஷமும் ஒழிந்திருப்பதற்குக் கட்டாயம் அவள் உள்ளம் குளிரும். ஒன்று வேண்டுமானால் பகவானின்பேரில் பாரத்தைவைத்து ஒருதிருவுள்ளச் சீட்டுப் போட்டு பார்த்து விடு. அதிலிருந்து நமது அதிர்ஷ்டமும் துரதிருஷ்டமும் தெரிந்துவிடுகிறது. போடு; உடனே எழுதிப்போடு.

இந்த யோசனை தாமோதரனுக்கு வெகு உசிதமாகத் தோன்றியதால் உடனே சீட்டுக்கள் எழுதி ஆண்டவனின் பேரில் பக்தி செய்தவாறு குலுக்கிப்போட்டுவிட்டு 'அப்பா! இதோ உங்கள் முன்பே போட்டிருக்கிறேன். நீங்களே ஒன்று எடுங்கள்' என்றான்.

குருடன் கீழே கையால் தடவினான். முதலில் கையில் பட்டச் சீட்டை கடவுளை நினைத்தபடியே எடுத்து தாமோதரனிடம் கொடுத்தான். தாமோதரன் அதைப் பிரித்ததும் தன்னையும் மறந்து உரத்த குரலில் "அப்பா! ஒப்புக்கொள்ளு என்று வந்திருக்கிறது" என்றான்.

கிழவனின் இதயம் பூரிப்பையடைந்து "தாமூ! நம் கஷ்ட காலம் துலைந்தது. வறுமை இருள் நீங்கி அதிர்ஷ்டச் சூரியன் உதய மாகிவிட்டான்; நாம் இப்போதுகூட வீணாக இந்தப் பிச்சைக்காரச் சாவடியில் படுத்து கிடக்கவேண்டாம். இப்போதே எழுந்து போய் விடுவோம். வா! எழுந்து வா...உம்...எழுந்திரு" என்று வெறி பிடித்தவன்போல் கூறினான்.

தாமோதரன் எத்தனை வைராக்யம் அடைந்து துணிந்தபோதி லும் தான் சுதாவுக்கு த்ரோகம் செய்கிறோம் என்கிற ஒரு உணர்ச்சியும் அதனால் ஒரு அதிர்ச்சியும் அவனை வாட்டிக்கொண்டே இருக்கிறது. அதைத் தகப்பனாரிடம் வெளியிடவும் முடியவில்லை. தர்மசங்கடத்திலகப்பட்டுக்கொண்டு சற்று நேரம் தத்தளித்தான். மனச்சாட்சி யொருபுறம் குத்திக் காட்டுகிறது. சுதாவை நம்பி யிருப்பதில் இனி உபயோகமில்லை என்பதுவும் நன்கு தெரியும். அதற்காகத் தான் ஆயுள் பரியந்தம் இப்படியே தரித்திர இருளில்

மூழ்கிச் சாவதா! அன்றி எதிர்பாராது வந்திருக்கும் அதிர்ஷ்ட தேவதையை ஸ்வீகரித்து இன்புறுவதா" என்ற பிரச்னை பலமாக எழுந்தது. திருவுள்ளச்சீட்டுப்போட்டு கடவுள் சம்மதத்தை வாங்கிய பிறகுகூட பின்வாங்குவதும், குழம்புவதும் சரியா !" என்றும் தோன்றியது.

சில நிமிஷங்கள் இதே யோசனையில் மூழ்கித் தத்தளித்தான். மனச்சாட்சி இடங்கொடுக்கவில்லை. பணத்திற்காக ஒரு பெண்ணை மணப்பதாகவிருக்கிறதேயன்றி மனது கொஞ்சங்கூட சம்மதப்படவில்லையே! என் சுதாவுக்கு பரிபூர்ணமாக இடங்கொடுத்த இதயத்தில் வேறு ஒரு பெண்ணுக்குக் கொடுப்பதா! சீ! இது நியாய விரோதமானது மட்டுமின்றி மனச்சாட்சிக்கும் பொருந்தாது. எது எப்படியிருப்பினும் என் தலை எழுத்துப்படி நடக்கட்டும். பணத்தாசைக்குப்பறந்து ஒரு காரியத்தைச் செய்வதில் பலனென்ன?

சுதாவோ என்னை மறக்கவே இல்லை என்று தெரிகிறது. என்னுடைய இந்த பேராசைச் செய்கையை அவளறிந்தால் அவள் மனது எப்படித்தான் துடிக்கும்? ஐயோ பாவம்! தாயில்லாத குழந்தை. இப்போதும் உள்ளன்புடன் ஆதரிப்பாரற்றுப் பரதேசி போல் இருப்பதைக்கண்டால் மனது குழம்புகிறதே. அன்று கடைசியாகப் பிரிந்த கொடிய நாளில் அவள் பேசிய பேச்சையும், அவள் பரிசுத்தமான பிரேமையை அள்ளி யளித்ததையும் மறந்து நாம் இப்படிச் செய்வது சற்றும் சரியில்லை. நான் பிச்சைக்காரனாகவே இருந்தாலும் சரி. பிரம்மசாரி கட்டையாகவே காலம் முடிந்தாலும் சரி. பகவானின் திருவுள்ளச் சீட்டின்படி அவர் திருவுள்ளத்திற்கே சமர்ப்பித்துவிடுகிறேன்" என்று தனக்குள் ஒரு முடிவு செய்துகொண்டான்.

18262

உடனே தகப்பனரை நோக்கினன். தனக்கு திடீரென்று எதிர்பாராது அதிர்ஷ்டம் வந்துவிட்டதை எண்ணிப் பூரித்து மலர்ந்த முகத்துடன் உட்கார்ந்திருப்பதைக்கண்டு சற்று தயங்கினன். "இரு கண்களும் தெரியாத அந்தகரின் சந்தோஷத்தைக் கெடுத்தால் அவர் மனம் நோகுமே!...என்ன செய்வேன்?" என்று சிறிது மீண்டும் குழம்பியபிறகு "அப்பா!" என்று மெல்ல கூப்பிட்டான்.

மூர்த்தி ஆனந்தத்துடன் "ஏண்டாப்பா! புறப்படலாமா! இன்னும் இருட்டவில்லையே!" என்று ஆவலேவடிவாய்க் கேட்டபடி எழுந்திருப்பதற்கு ஆயத்தமாகத் தன் கைத்தடியை எடுத்தான்.

தாமோதரன் தியங்கிய குரலில், அப்பா! என்னை மன்னிக்க வேண்டும். என்மீது தயை செய்யவேண்டும். செல்வம் இன்று வரும் நாளைபோகும். நாளை நம்மையறியாமல் திரும்பவும் திடீரென்றும் வரும். அப்பா! நான் இதுபரியந்தம் ஒரு முக்யமான விஷயத்தைத் தங்களிடம் தெரிவிக்காது மறைத்தது மகா குற்றமாகும்.

குற்றமென்பது தெரிந்தும் ஒன்றன்பின் ஒன்றாகவந்த கஷ்டத்தினால் இதைத் தெரிவிக்க அஞ்சினேன். இப்போது தெரிவித்தாலும் நீங்களே பரிகஸித்துச் சிரிக்கலாம். ஆனால் இனியும் நான் ஒளிப்பது சரியல்ல. நடந்ததைச் சொல்வதில் நாணமென்ன இருக்கிறது? ஒரு காலத்தில் நாம் அக்கா வீட்டிலிருந்தோமல்லவா!...

மூர்:—ஆமாம்...அதற்கென்ன?

தாமோ:—தெய்வச்சம்மதமில்லாது எந்த காரியமும் நடக்காது. சுதாவுக்கும் எனக்கும் எந்த விபரீத சோதனையின் பொருட்டோ அபரிமிதமான பிரேமையை உண்டாக்கிவிட்டார். அந்த ரகஸியம் அக்காவுக்கும் தெரியும். என் கர்மாவின் பலனால் மத்தியில் இத்தனை கோளாறுகள் நேர்ந்துவிட்டன. மனத்தை எத்தனைதான் சமாதானம் செய்துகொண்டாலும் நிம்மதி அடையமாட்டேன் என்கிறது. சுதாவுக்கு இப்போது நடந்துள்ள விஷயங்கள் ஒன்றுமே தெரியாதாம். இந்த ஹாஸ்டலில் படிக்கிறாள் என்பது எனக்குத் தெரியாது. அவள் என்னை ஒரு சிறிதும் மறக்கவில்லை என்பதும் அறிந்தேன். அப்படிக்கிருக்க இந்த அல்ப பணத்திற்கு ஆசைப்பட்டுக்கொண்டு என் மனச்சாக்ஷிக்கு விரோதமாய் நடக்க நான் பிரியப்படவில்லை. நம் தலையெழுத்துப்போல் எல்லாம் நடக்கட்டும். இதற்காக நீங்கள் வருத்தப்படவேண்டாம்.

இந்த வார்த்தைகளைக் கேட்கக்கேட்க மூர்த்தியின் வியப்பும் திகைப்பும் கரைபுரண்டன. "என்ன தாமு! நீ சொல்வதெல்லாம் உண்மையா! சுதாவை நீ நேசிக்கிறாயா!"...என்று வெகு ஆச்சரியத்துடன் கேட்டான்.

தாமோ:—அப்பா! நான்தான் முதலிலேயே சொன்னேனே! பரிகஸிப்பாகத்தான் இருக்கும். உங்கள்மீது சாக்ஷியாக நேசித்தது உண்மை. நான் மட்டுமில்லை. சுதாவும் என்னைப் பரிபூர்ணமாக நேசித்தாள். இன்னமும் நேசிக்கிறாள். கடவுளின் சித்தம் அம்மாதிரி ஒரு தெய்வீகமான பிரேமை ஜனித்ததேயன்றி மனிதர்களின் செய்கையாலோ, மற்ற எதினாலோ நேர்ந்த சம்பவமல்ல. ஆகையால் என் தலையெழுத்தின்படி நடக்கட்டும். நாம் இன்றே இவ்வூரைவிட்டுப் போய்விடலாம். பணம் எனக்கு த்ருணமாகத் தோன்றுகிறது. பிரேமைக்குத்தான் என்னிதயத்தில் பிரதானம் உண்டாகிறது. ஆதலால், நாம் போய்விடலாம். கிளம்புங்கள்" என்று ஒருவிதமான ஆவேசத்துடன் கூறினான்.

இதைக்கேட்ட மூர்த்தி அப்படியே அசைவற்றுவிட்டான். "பணமென்றால் பிணமும் வாய்திறக்கும்" என்கிற பழமொழியைக் கூட இவன் இத்தனை தரித்திர நிலையிலிருந்தும் உடைத்தெறிந்துவிட்டானே! என்ன ஆழமான அன்பு! எத்தனை உயரிய தியாகம்! என்ன உத்தம குணம்!" என்று தனக்குள் வியந்து பூரித்தான்.

மகனைத் தடவிக் கொடுத்தபடியே, "தாமு! என் வயிற்றில் பிறந்த இரண்டு திலகங்களும் இரண்டுவிதமான தியாகத்தைச் செய்து உலகிற்குக் காட்டிவிட்டீர்கள். உன்னுடைய இஷ்டத்திற்கு மாறாக நான் என்ன சொல்லப்போகிறேன்? சன்யாசினியாக ஒரு பெண்ணும், சன்யாசியாக—பரதேசியாக—ஒரு பிள்ளையும் பெற வேண்டிய வரன் நான் வாங்கிவந்தேன். என் பாக்யம் அது. சரி.... புறப்படு" என்று கூறியபடியே தட்டுத்தடுமாறியவாறு தன் கைத் தடியை எடுத்துக்கொண்டு முதலில் கிளம்பிவிட்டான்.

தாமோதரனுக்கு இன்னது பதில் சொல்வதென்றே தெரியாது துடித்தான். தந்தையின் ஆசை நிராசையானதுபற்றி ஒருபுறம் துக்கம் வருகிறது. ஒருபுறம் தன்னால் அவர் ஒருவிதமான சுகமும் அடையவில்லையே! தள்ளாதகாலத்தில் தானாக வரும் அதிருஷ்டத் தையும் நாம் கெடுத்துவிட்டோம் என்று அவர் மனம் நோகிறதே. இதற்கென்ன செய்வது?" என்று குழம்பிவிட்டான். ஒரு வகை யிலும் செல்லமுடியாது தவிக்கிறான் என்ன செய்வது?

42

"நான் எந்தவிதமாகத் தப்பித்துக்கொள்ளலாம்? ஒரு மார்க்க மும் கிடைக்கவில்லையே! சிறையிலிருப்பவர்களுக்காவது விடுதலையுண்டு. இந்த சிறைக்கு அக்கேடுமில்லையே! என்ன செய் வேன்" என்று சுதா அனலிடைமெழுகென உருகிக்கொண்டே ஒவ் வொரு விநாடியையும் ஒவ்வொரு யுகமாகக் கழித்துவந்தாள்.

தலைவியின் கண்டிப்பான பதிலுக்குப்பிறகு அவள் நிலைமை முற்றிலும் மாறியது. ஊண் உறக்கம் அடியோடு ஒழிந்தது. அந்த ஹாஸ்டலில் நடக்கும் அக்கிரமத்தை அவளால் பொறுக்கவேமுடி யாது ஒருபுறம் உடம்பே பற்றி எரிகிறது. தலைவியின் கொழுப்பை எப்படியாவது அடக்கி அவளை அவமானப்படுத்துவதோடு இந்த ஹாஸ்டலின் அக்கிரமத்தையும் வெளியிட்டுவிட வேண்டுமென்று ஒரு தீவிரமான எண்ணமும் வைராக்கியமும் உண்டாயின.

உடனே அங்கு நடக்கும் சகலமான ஊழல்களையும் விவரமாக எழுதி, இதை உடனே கவனித்து ஹாஸ்டல் என்கிற பந்தலின்கீழ் நடக்கும் பிராத்தல் ஹவுஸ் அநியாயத்தை ஒழிக்கவேண்டும் என்றும் நேரில் தான் இவைகளை நிரூபித்துக் காட்டமுடியும் என்றும் இரவு ஒரு மைனரைப்போல் வேஷமணிந்து ஒரு இன்ஸ்பெக்டரை ஹாஸ் டலுக்கு எதிரிலுள்ள ஓட்டலுக்கு அயலூர் பிரயாணியைப்போல் அனுப்பினால் சகலமும் புரியும் என்றும் துணிபுடன் எழுதி அதை வெகு ஜாக்கிரதையாக மடியில் சொருகிக்கொண்டாள்.

பார்ப்பவர்களுக்குப் பகட்டாகவும், மகா பக்தசிகாமணி தலைவி என்று புகழ் சம்பாதிக்கும் பொருட்டும் மாணவிகளைக் கோவிலுக்கு மட்டும் மாதம் ஒரு வெள்ளிக்கிழமை அழைத்துச்செல்வது வழக்கம். அன்று வெள்ளிக்கிழமையாதலால் அப்படியே போகும்போது 'கவரில் போட்டுத் தயாராக வைத்திருந்த கடிதத்தை எப்படி தபாலில் போடுவது' என்று சுதா கண்குத்திப் பாம்புபோல் பார்த்துக்கொண்டிருந்தாள்.

இதற்காகவே இவள் பின்னால் தங்கித் தங்கி நடந்தாள். வீதியில் பீட்கான்ஸ்டேபில் நின்றிருப்பதைக் கண்டதும் சுதாவுக்கு அவனிடமே கொடுத்து கமிஷனரிடம் சேர்த்துவிடவேண்டும் என்று தோன்றியது. அஸ்தமித்துவிட்டதால் இருட்டு சூழ்ந்திருந்தது. சுதாவிடம் வெறுப்பும், கோபமும் கொண்டுள்ள சில மாணவிகள் அவளைப்பற்றியே எப்போதும் கண்ணோட்டம் செலுத்திக் குறும்பாகப் பார்ப்பது வழக்கம். குத்தலாகப் பேசி பரிகஸித்தபடியே சுதா அறியாதபடி அவளைக் கவனித்துவந்தார்கள்.

சுதா இதை அறியவில்லை. அவர்கள் முன்னால் நகர்ந்ததும் அவள் மட்டும் சற்று பின்னடைந்தபடியே மடியிலிருந்த கடிதத்தைக் கையில் எடுத்துக்கொண்டு போலீஸ் சேவகனை அணுகப் போகும் சமயம் இதைக் கழுகுபோல் பார்த்துக்கொண்டிருந்த ஒரு பெண் சுதாவின் பின்புறமாக சடக்கென்று ஓடிவந்து அவளை திடீரென்று கீழே தள்ளிவிட்டாள். பார்ப்பவர்களுக்குத் தடுக்கி விழுந்த பாவனையில் தள்ளிவிட்டுத் தான் தூக்கப்போகிறவள் போல் அருகில் சென்று தூக்கும் பாவனை செய்து கடிதத்தை வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டு தலைவியிடம் ஓடினாள்.

அந்தோ! அதிர்ஷ்டஹீனமென்றால் இப்படியா இருக்க வேண்டும்? கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லையே! பாவம். தான் ஒன்று நினைத்தால் கடவுள் ஒன்று நினைத்துவிட்டாரே! என்ன செய்வது? கீழே விழுந்த வேகத்தில் அடி வேறு பட்டதையும் பொருள்படுத்தாது எழுந்தாள். வீதியில் போகும் ஜனங்கள் தடுக்கி விழுந்துவிட்டதாக எண்ணி, "ஐயோ பாவம்! பார்த்து நடக்கக் கூடாதா!" என்று அனுதாபம் கூறிச்சென்றார்கள்.

தலைவியின் கையில் கடிதம் சேர்ந்துவிட்டதை அறிந்த சுதாவின் உயிர் பறக்கிறது. இனி தனக்கு இவ்விடத்திலிருந்து ஒரே முடிவு கட்டாயம் ஏற்பட்டுவிடும் என்ற ஒரு பயங்கரம் அவள் மனத்தில் தோன்றி வதைக்கின்றது. எரியும் அடுப்பில் எண்ணெயை வார்ப்பது போல் தலைவியே மேலே வந்து வெகு உபசாரனை காட்டும் உத்தமி போல் சுதாவின் கையைப் பிடித்து அழைத்துச்செல்லும்போது பாவம்....பேதைப் பெண்ணின் இதயம் எப்படித்தான் துடிக்காது?

ஹாஸ்டலின் அக்கிரமங்களையெல்லாம் அப்படியே தத்ரூபமாக எழுதியிருப்பதைப் பார்த்தபிறகு, தனக்கு எக்கதி கிடைக்கும் என்

பதை அவள் நினைக்கும்போது இதயம் அப்படியே வெடித்துவிடக் கூடாதா என்றும் ஒடுங்கினாள். ஆகாயமும் பூமியும் ஒன்றாகச் சுற்றியது. இவளுடைய நிலைமையைக்கண்ட மற்ற பெண்கள் குசு குசுவென்று பேசிச் சிரித்தார்கள். தலைவிமட்டும் வாய் திறக்கவே இல்லை. மௌனம் சர்வார்த்த சாதகம் என்பதுபோல் ஒரே மௌனத்துடன் ஹாஸ்டல் வந்து சேர்ந்தார்கள். சுதா தடதட வென்று தன்னறைக்கு ஓட முயன்றாள்.

தலைவி ஒரு கர்ஜனை செய்தவாறு "உம். ஓடாதே. என்னறைக்குப் போ!" என்று சட்டமிட்டாள். வேடனைக்கண்ட மான்போல் சுதா நடுங்கியவாறு உள்ளே ஓடிப்போனாள். "இன்றோடு நம்பாடு முடிந்துவிட்டது" என்று அவளை யறியாது ஒரு எண்ணம் உண்டா கியது. பூச்சியைப்போல் ஒடுங்கிப்போய் அவ்வறையில் கிடந்தாள்.

ஹாஸ்டல் மாணவிகளின் சாப்பாடு முடிந்து படி மடங்கும் வரையில் தலைவி சுதாவிடம் போகவே இல்லை. ஹாஸ்டல் வேலை முடிந்த பிறகு தன்னுடைய முக்யமான திருப்பணியிலீடுபட்டு யார் யாருடனோ பேசிக்கொண்டிருந்தாள். அதன் பிறகு உள்ளே வருவ தற்குள் மணி நடுநிசி வேளையாகிவிட்டது.

அதுவரையில் சுதா இருக்கிறாளா செத்தாளா! என்றும் கேட்க வில்லை. சாப்பாட்டிற்கு அவளைப்பற்றி கவனிப்பாரே இல்லை. அவள் மனம் படும் வேதனையில் பசிகூடவா எடுக்கப்போகிறது? தான் எப் படியும் இறந்துவிடப்போவது நிச்சயம். அதற்குள் தன்னருமை சிற்றன்னையையும் தம்பி தங்கையையும் பார்த்துவிட்டால் போதும் என்றுதான் அவள் மனது துடித்தது. தம்பி தங்கைகளைக்கூட பார்க்காவிட்டாலும் பரவாயில்லை. அன்னையைப் பார்க்காவிட்டால் ஆவி தரிக்காதுபோல் தோன்றுகிறதே! என்ன செய்வேன்? இப் படியே பறந்து ஓடிவிடக்கூடிய சக்தி திடீரென்று வாக்கூடாதா! நான் ஒரு பக்ஷியாக மாறிவிடும்படி ஒரு மாயம் ஏற்படக்கூடாதா! என்று தத்தளித்தவாறு இருந்தாள்.

ராக்ஷஸியைப்போல் உக்ரகத்துடன் தலைவி அட்டகாஸமாய் உள்ளே வந்து சுதாவை ஒரு முறைப்பு முறைத்துப் பார்த்தாள். "சுதாமதி! இப்படி வா! நில்லு. இந்த பூனையும் இந்த பாலைக் குடிக் குமா என்று நினைக்கும்படி நாடகம் நடித்த நீயா கடிதம் எழுது கிறாய்! கடிதமா எழுதுகிறாய்! அத்தனை குண்டுதைரியமா வந்திருக் கிறது? கடிதம் எழுதிய கையை இப்படி நீட்டு" என்று அகம்பாவத் துடன் கர்ஜித்தாள்.

எங்கிருந்துதான் சுதாவுக்கு அத்தனை துணிவு வந்ததோ தெரிய வில்லை. 'இதோ நீட்டினேன். சொல்லக்கூடாதுநடக்கும் அக்ரமத்தை வரைந்த கைக்கே இத்தகைய தண்டனையை மனிதர்கள் கொடுப்ப தென்றால் அக்ரமத்தைச் செய்துள்ள மனிதர்களுடைய ஒவ்வொரு அங்கத்திற்கும் கடவுள் எப்படித்தான் தண்டனை விதிக்கப்போகி

ளுரோ! உம்...இதோ நீட்டினேன். இஷ்டம்போல் செய்துகொள் ளுங்கள்' என்று ஓர் ராஜபுத்திர வீரரமணியைப்போல் கூறி தனது அழகிய கரத்தை நிர்ப்பயமான துணிந்த தோற்றத்துடன் நீட்டினுள்.

சுதா இத்தனை தைரியமாய் திடுக்கிடும்படிக்குக் கையை நீட்டு வாள் என்று தலைவி எதிர்பார்க்கவே இல்லை. தான் அவ்வாறு கேட்ட உடனே சுதா நடுநடுங்கி பயந்துப்போய் அப்படியே தன் காலில் விழுந்து தான் செய்ததெல்லாம் குற்றந்தான். மன்னிக்கவேண்டும் என்று கெஞ்சுவாள். ஏதோ சிறிது தண்டனையை விதித்துப் பின் மன்னித்துவிடலாம் என்றே எண்ணி மனப்பால் குடித்துவந்தாள்.

''ஊரை விழுங்குகிற மாமியாருக்கு அவளையே விழுங்குகிற மரு மகள் வந்தாளாம்'' என்கிற பழமொழி இவ்விடத்தில் மிகவும் பொருத்தமாயும் நிதர்சனமாயும் ஆய்விட்டதுகாண தலைவிக்கே ஒருபுறம் வியப்பு தாங்கமுடியாது பொங்கியது. சுதாவின் தைரி யத்தைக் கண்டு ஒருபுறம் கோபமும் ஒருபுறம் ஆச்சரியமும் பொங்கினவுடனே பல்லைக்கடித்தபடியே 'ஆஹ்ஹா! உன் மண்டைத் திமிரின் முடிவை இதோ பார்' என்று கூறியபடியே ரூல்கட்டையை எடுத்து சுதாவின் கையில் பளார் பளார் என்று நாலறை வைத்தாள்.

சுதா கையை இழுத்துக்கொள்ளவே இல்லை. ''கர்வம் பிடித்த தலைவிப் பிசாசே! பாபப் பர்வதமே! இந்த நடுநிசியில் உலகமே உறங்கிவிட்டதாக நீ நினைத்து என்னைக் கொலைசெய்தாலுங்கூடச் செய்யலாம். ஆனுல் உன்னுடைய அதியற்புதமான ஹாஸ்டலில் நடக்கும் அக்ரமங்களை எல்லாம் ஒன்றுவிடாது பார்த்துக்கொண் டிருக்கும் கடவுள் ஒருபோதும் தூங்கவில்லை. அவனையும் தூங்கி விட்டதாக எண்ணி நடக்கும் உன்னறிவுதான் தூங்கிவிட்டது. அழிந்துவிட்டது...மதிகெட்ட மூதேவிக்குத் தலைவிப்பட்டம் வந்து இப்படி தறிதலையாகிவிட்டாளே என்று பகவான் வருந்திக்கொண்டு தானிருக்கிருர்'' என்று வெடுக்கு வெடுக்கு என்று கூறினுள்.

இதுகேட்ட தலைவியின் ஆத்திரம் அதிகரித்துவிட்டது. கண்ணு மண்ணு தெரியாது சுதாவைப் பிடித்து இழுத்து அவ்வறையிலுள்ள ஜன்னல் கம்பியுடன் சேர்த்து ஒரு கயிற்ருல் கட்டிவிட்டு மற்ருெரு கயிற்றின் நுனியால் அடித்தபடியே ''நான் செய்தது தப்பு. இனிமேல் செய்யவில்லை. இதோடு இதை மறந்து விடுகி றேன். என்னை மன்னித்துவிடு'' என்று உரக்கக்கூறி மன்னிப்புக் கேட்டாலன்றி உன்னை விடப் போவதில்லை. அதோடு உன்னுடைய பிரிய காதலனுக்குக் கடிதம் எழுதுவதுபோல் ஒன்று எழுதிக்கொடு. உம்...சொல்லு...சொல்லு'' என்று விறுவிறென்று விறினுள்.

சுதாவா இதற்கு மசிகிறவள்! 'சீச்சி! பாதகி! என் காதலனுக்குக் கடிதம் எழுதும் புத்தி நீ சொல்லிக்கொடுக்கவேண்டாம். அப்படிப் பட்ட புத்திமதியைக் கேட்டு சந்தோஷப்படும் மாணவிகளைப் போய்க் கேளு. உன்னிடம் நான் கடிதம் எழுதிக்கொடுத்து அதை

வைத்துக்கொண்டு என்மீதே பழியைப்போட்டு நீ தப்பித்துக் கொள்ளப் பார்க்கும் தந்திரத்தை நான் அறியாமல் உன்னைப்போல் முட்டாளாக இல்லை. தெரிந்ததா! என்னை நீ இதோடு கொலை செய்யப்போகிறாய் என்பதும் எனக்குத் தெரியும். என்னுடைய கடைசி மூச்சு போகும் வரையில்கூட நான் உன் அக்ரமத்தை வெளியிட்டு விட்டே போவேன். உயிருக்குப் பயந்தவர்கள்தான் உன் உக்ரகத்திற்கும்....அனியாய அட்டகாஸத்திற்கும் பயப்படுவார்கள். இந்த சுதாமதி ஒன்றுக்கும் பயப்படவில்லை என்பது நினைவிருக்கட்டும். உம்...அடி...நன்றாக அடி....கடவுளே! அக்கிரமத்தைப் பார்த்துக் கொள்ளு"...என்று அலறுகிறாள்....தலைவியோ தான் சொல்லியவற்றையே சொல்லு, சொல்லு என்று பின்னும் மூர்க்கத்தனமாக அடித்தாள்.

சுதாவும் சளைக்காமல் 'முடியாது. சொல்ல முடியாது. நீ செய்வதெல்லாம் அக்ரமம். நீ சொல்வதெல்லாம் அனியாயம்! உன்நடத்தை எல்லாம் மகா மோசம். ஓட்டல்காரப் பாவியும் நீயும் சேர்ந்து ஊர் பெண்களை எல்லாம் கெடுத்துக் குட்டிச்சுவராடிக்கும் சண்டாளத்தை மறைக்கமுடியாது...முடியாது' என்று அலறினாள்.

அச்சமயம் தலைவியின் அறைக் கதவைத் தடதடவென்று இடித்தது ஓசை கேட்டதுகண்டு, தலைவி "யார்? ஓட்டல் மானேஜரா! என்று அவள் வழக்கப்படிக் கேட்டாள். இதைக் கேட்டவன் 'ஆமாம்' என்று குரல் கொடுத்தான். தலைவி சந்தோஷத்துடன் "ஓ! வாருங்கள். புதிய வேட்டை உண்டா!" என்று கூறியபடியே கதவைத் திறந்தாள்.

அவ்வளவுதான் தீயை மிதித்தவள்போல் "ஆ...போலீஸ்... போலீஸா...போலீஸா!"...என்று அலறித் துடித்தாள். அப்படியே எரிமலை அவள் தலைமீது புரண்டதுபோல் தோன்றியது. சுதாமதிக்கு ஆச்சரியம் கூறவே திறமில்லை. பகவானே நேரில் வந்திருப்பது போல் அவளுக்குத் தோன்றியதால் சந்தோஷம் பொங்கியது. "ஹா...ஆபத்பாந்தவா...தயாநிதி!...தயாநிதி!...தயாநிதி"...என்று வாய்விட்டு ஆவேசத்துடன் கூவினாள். அவள் இதுகாறும் பட்ட அடியின் வலிகூடப் பறந்துபோயிற்று. கண்களில் கட்டுக்கடங்காத ஆனந்த உணர்ச்சி பொங்கி ஜ்வலித்தது.

43

கன்னத்திலறைந்த வேகத்தில் சுருண்டுவிழுந்த கமலா எழுந்திருக்க முடியவேயில்லை. ரங்கநாதனுக்கு அந்த ஓட்டலில் நிற்கவும் பிடிக்காது நேரே தான் வந்த மோட்டாரில் ஏறிக்கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றார். இன்ஸ்பெக்டரைத் தனியே அழைத்து "சார்! ஒரு முக்யமான விஷயம். இந்த ஊரில் ஒரு ஓட்டலும் ஒரு

ஹாஸ்டலும் சேர்ந்து பிராத்தல் ஹௌஸாக நடத்தும் அக்ரமத்தை நீங்கள் கவனிக்காதிருப்பது மிகவும் மோசமானதாகும். இப்போதே நீர் என்னோடு வாரும். நான் கையும் களவுமாகப் பிடித்துத் தருகிறேன். எத்தனை குடும்பப் பெண்கள் இம்மாதிரி அக்ரமத்திற்கு இலக்காகிப் பாழாகிவிட்டார்களோ!'' என்று பெரிதாக கர்ஜனையுடன் கூறினார்.

இது கேட்ட இன்ஸ்பெக்டர் மிக்க சந்தோஷமும் வியப்பும் அடைந்து 'சார்! நாங்கள் சிலதினங்களுக்கு முன்புதான் இந்த அக்ரமத்தைக் கேள்விப்பட்டோம். பிடிப்பதற்குப் பிரயத்தனம் செய்துகொண்டுதானிருக்கிறோம். தக்க ஆதாரம் கிடைக்காததால் தாமதமாகிறது. இந்த சமயம் உம்முடைய உதவியால் பிடித்துவிடலாம்'' என்று கூடவே வந்தார்.

ரங்கநாதன் ஏற்கெனவே அங்குள்ள சகல வழிகளையும் பார்த்துக்கொண்டு போனதால் அடையாளம் வைத்துக்கொண்டு இறங்கியவழியே ஏறினார். இன்ஸ்பெக்டர் சாதாரண பெரிய மனிதன் போல் உடையிலிருந்ததால் ரங்கநாதன் ஓட்டல் மானேஜரிடம் "இவரும் என்னோடு வந்திருக்கிறார். இவருக்கும் கொஞ்சம் சௌகரியம் செய்யவேண்டும்'' என்று அறிமுகப்படுத்திவிட்டுத் தான் முன்பு சென்ற இடத்திற்கே போனார்.

இன்ஸ்பெக்டரிடம் ரங்கநாதன் சகல விவரமும் சொல்லியிருப்பதால் அவர் தனக்காகவே நடந்துகொண்டார். அவருக்கும் தடபுடல் உபசாரத்துடன் வரவேற்பும் பெண்களளிப்பும் நடந்தன.

இதைக்கண்ட இன்ஸ்பெக்டரின் உள்ளம் சந்தோஷத்தால் பூரித்தது. கட்டாயம் தனக்கு இந்த கேஸில் ரிவார்டும் உத்யோக உயர்வும் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் உண்டாயிற்று. இவருக்கும் ஒரு பெரிய மனிதரின் வீட்டுப் பெண்தான் கிடைத்தது. ரங்கநாதனைக் கண்ட கமலா பெரிதாக அழுதுகொண்டே "என்னை மோசம் செய்வதற்காகவா இங்கு வந்தாய்? நீ என்ன ஒரு பெரிய மனிதனா!'' என்று திட்டவாரம்பித்தாள்.

ரங்க:—பேமானீ! உன்னை அவமானப்படுத்துவதாக நான் வரவில்லை. உன்னை அவமானத்திலிருந்து மீட்பதற்காகவே வந்தேன். என் பெண்ணை நான் இந்த நிலைமையில் கண்டிருந்தால் கண்டதுண்டமாக வெட்டி கழுகுக்கு எறிந்திருப்பேன். உயர்தரமான பொது ஸ்தாபனத்தில் உயர்தரக் கல்வியைக் கற்று மேன்மையடையாவிடினும் இங்குள்ள சூழல்களை உடனே பிறரறியச்செய்து இவ்வாபத்திலிருந்து தடுக்காமல் இப்படியா நீ பேமானிப் பிழைப்பு பிழைக்கிறாய்? உங்கப்பனுக்குத் தந்தியடித்துவிட்டு வந்தேன். உனக்கு மரியாதை செய்ய பின்னால் அனேகர் வந்திருக்கிறார்கள்— என்று கூறிக்கொண்டே வெளியே வந்தார்.

இன்ஸ்பெக்டர் வரும்போதே சகல ஏற்பாடுகளும் செய்துவிட்டு வந்திருப்பதால் இங்கு இருக்கும்போது ஓட்டல் மானேஜருக்கு ஒரு டெலிபோன் வந்தது. அதில் "கோவிந்தஸாமி என்று ஒருவர் இப்போது வந்தாரே அவரைக் கூப்பிடுங்கள்" என்றார்கள். இன்ஸ்பெக்டர் கோவிந்தசாமி என்று தன் பெயரைக் கொடுத்திருந்ததால் அவரைக் கூப்பிட்டான்.

ஓட்டல் சௌகரியங்களைப்பற்றிப் பேசுவதுபோல் கோவிந்தசாமி "இங்கு சகலமான சௌகரியங்களும் இருக்கின்றன. வெகு அருமையான ஓட்டல். நீங்கள் உங்கள் சிநேகிதர்களுடன் இங்கு வந்து தங்கலாம். இப்போதேகூட வரலாம்" என்று கூறினன். இதைக்கேட்ட ஓட்டல் மானேஜர் சந்தோஷத்துடன் "சார்! நம்ம ஓட்டல் பெருமையைப்பற்றி நன்ருகச் சொல்லுங்கள்; இப்போதே வரச்சொல்லுங்கள். மறுபடியும் கூப்பிட்டுச்சொல்லுங்கள்" என்று பெருமையாகக் கூறினர்.

இன்ஸ்பெக்டரிடம் பேசும் ஆசாமி போலீஸ்கமிஷனர்என்பது இந்த ஹீனபுத்தியுடைய மனிதனுக்கு எப்படித்தெரியும்? மறுபடியும் அவன் விருப்பப்படியே போன் செய்து "சார்! வெகு மேன்மையான ஹோட்டல். நீங்கள் உங்கள் சிநேகிதர்கள் உள்பட இங்கு இருப்பதுபோல் தயாராக வாருங்கள். வெகு விநோதமான சௌகரியங்கள் இங்கு இருக்கின்றன" என்ருன்.

கமிஷனரும் 'சரி. நான் ஆயத்தமான முறையோடு வருகிறேன்' என்று ரகஸிய வார்த்தையில் கூறினர். 'சரி. இப்போதே வாருங்கள்' என்று மறுபடியும் இன்ஸ்பெக்டர் கூறினர். இதைக்கேட்ட ஓட்டல்காரனின் உள்ளம் பூரித்தது. இன்ஸ்பெக்டரின் இதயமும் மலர்ந்தது. கமிஷனரும் பரிவாரத்துடன் கிளம்பிவிட்டார். ரங்கநாதனுக்கு அளப்பரிய சந்தோஷம் உண்டாகியது.

குறித்த சில நிமிஷங்களுக்குள் கமிஷனர் ஓர் சிற்றின்ப பித்து பிடித்த கனவான்போல் வேஷமணிந்துகொண்டு தம் சகாக்களுடன் வந்துசேர்ந்தார். பல வேஷங்கள் அணிந்து பல அருமையான காரியம் செய்து நற்க்யாதியும் பட்டங்களும் பெற்றுள்ள கமிஷனர் ஸ்ரீமான் அச்சுதன் வெகு பொருத்தமாகவும் சந்தேகத்திற்குச் சிறிதும் இடமில்லாமலும் நடந்துகொண்டு 'தனக்கு ரூம் எது' என்று கேட்டார். உடனே மானேஜர் 17 முதல் 22 நெம்பர்வரையில் காலியாகவிருந்த விடுதிகளைத் திறந்து கொடுத்து இவருடன் வந்திருந்த ஆட்களுக்கும் இவருக்கும் சரியான வசதிகள் செய்துக்கொடுத்தார். உயர்ந்த குடும்பத்தில் படிக்கும் பெண்கள் ஒவ்வொரு அறையிலும் தேவமாதர்கள்போல் வந்து நின்ருர்கள்.

அச்சுதனின் குடல் கொதிக்கின்றது. "இத்தகைய அக்ரமங்கள் கூடவா நடக்கின்றன? கற்பிற்குச் சிகரம்போன்ற பாரதநாட்டிலா இத்தகைய விபசாரம், அதிலும் கல்விக்கழகம் என்று பெயர் வைத்

துக்கொண்ட இடத்திலா இத்தகைய அக்ரமம்? அடாடா! இது காறும் இங்கு இருந்தவர்களுக்கு ஒன்றும் தெரியாமலாபோயிற்று. நாம் இவ்வூருக்கு மாற்றலாகிவந்த மறுவாரத்திலேயே இம்மாதிரி ஒரு கேஸ் வந்து அதன் புகழை நான் அடைவதற்காகத்தான் பகவான் இதுகாறும் இந்தப் பாழாப்போன விடுதிகளை உயர்ந்த உணவளிக்கும் ஓட்டலாகவும், தேவியின் அருள் சுரக்கும் கலா நிலயமாகவும் நினைத்தார்போலிருக்கிறது.

அந்தோ! மயிர் சிலிர்க்கிறதே. எத்தனை பெற்றோர்கள் இந்த ஆபாஸக் கழகத்தின் ரகஸியமறியாது தம் தம் மக்கள் படித்துப் பட்டம் பெற்று பரம மேதாவிகளாய், கலாவதிகளாய், வித்யாவதிகளாய், புகழுடன் வரப்போகிறார்கள் என்று மனப்பால் குடிக்கிறார்களோ!" என்று நினைக்கும்போது அச்சுதனின் அங்கமே பற்றி எரிந்தது.

அவ்வறையில் வந்த பெண் இவர் யோசனை செய்வதைக்கண்டு பெரிதாக நகைத்தபடியே, "அடேயப்பா! எந்தக் கோட்டையைப் பிடிப்பதற்காக இத்தனை ஆழ்ந்த யோசனை?" என்று கேட்டபடியே அருகில் வந்து பன்னீரைத் தெளித்தாள்.

அச்சுதனின் அருவருப்பு தாங்கமுடியவில்லை. "நீ மகா புத்தி சாலி என்பது இந்த ஒரு வார்த்தையிலிருந்தே தெரிகிறது. சரியான போடுதான் போட்டாய். உண்மையில் பலமானதொரு பெரிய கோட்டையைப் பிடித்துவிட்டேன்" என்று கூறிக்கொண்டே தன் ஜேபியிலிருந்த ஊதுகுழலை ஊதினார்.

அந்தப் பெண்ணுக்கு இவர் குழந்தையைப்போல் பிகில் ஊதுவதானது விளையாட்டாகவும் நகைப்பாகவும் இருந்தது. கடகட வென்று நகைத்தபடியே "கோட்டையைப் பிடித்ததற்காக சங்க நாதம்செய்கிறீர்களா! அன்றி எனக்கு இந்தவிளையாட்டுக்கருவியைப் பரிசாக அளிக்கப்போகிறீர்களா!" என்றாள்.

அச்:—அச்சா! நீ மகா கெட்டிக்காரியாயிருக்கிறாயே! சங்க நாதமட்டுமல்ல. ஜயபேரிகையே முழங்குவதுபோலாகும். "இதோ உனக்குப் பரிசு வேறு உயர்ந்த பொருள் தருகிறேன். இந்தா" என்று கூறிக்கொண்டே தன் சட்டைப் பையிலிருந்து விஸிடிங் கார்டை எடுத்துக்கொடுத்தார். அதில்,

திவான்பகதூர் அச்சுதன்
போலீஸ் கமிஷனர்

என்று இருந்ததைப் பார்த்ததும் 'கூ' என்று ஒரு சத்தமிட்டபடியே அலறித்தவித்தாள்'ஐயோ...நீங்கள்...போலீஸ்கமிஷனரா'...என்றாள்.

அச்சுதன் கலகலவென்று நகைத்துக்கொண்டே முன்பு தன் சிப்பந்திகளுக்கு எச்சரித்திருந்தபடி சமிக்ஞை செய்து குழலை மீண்டும் சங்கேதம்போல் ஊதினார்.

அச்சுதன் யார்? "ஆத்மசக்தி" யைப் படியுங்கள்.

அவ்வளவுதான். அந்தஹோட்டலை அப்படியே போலீஸார் முற்றுகை யிட்டதோடு இன்ஸ்பெக்டர் மானேஜரை கைவிலங்கிட்டுக் கைதி யாக்கினர். அந்த ஹோட்டலில் எத்தனை ஜோடிப் பறவைகள் இருந்தனவோ, அத்தனையும் ஒரு நொடியில் ஜோடி ஜோடியாகப் பிடிக்கப்பட்டுவிட்டன. அந்தோ பரிதாபம்! எத்தனை மைனர்கள், எத்தனை பெரிய மனிதர்கள் கானல்நீரைக்கண்டு ஓடிவந்த மானைப் போல் சந்தோஷத்திற்காகப் பணத்திமிருடன் வந்தவிடத்தில் பேரா பத்து நேர்ந்துவிட்டதை எண்ணிக் கதிகலங்கினார்கள்.

அந்த கோஷ்டியில் எத்தனையோ உத்யோகஸ்தர்கள் இருந் தார்கள். அவர்கள் அப்படியே தீயை மிதித்ததுபோலாகியதோடு எப்படியாவது தப்பித்துக்கொண்டு ஓடிவிட்டால் போதும் என்று சுவர் ஏறிக் குதிக்கவும் தயாராக ஓடினார்கள். சிலர் ஓடவிடாது பிடிக்கப்பட்டார்கள். சிலர் இடறி விழுந்து அடிபட்டுக்கொண்டு ஓட்டம் பிடித்தார்கள்.

அனேகமாக எல்லோரும் பிடிபட்டுவிட்டார்கள். சிலரே தப்பி னார்கள். மானேஜரின் நிலைமையைக் கூறவேண்டுமா! இத்தனை நாட்கள் அசுரன்போல் அக்ரமம் செய்துகொண்டிருந்த திமிரெல் லாம் ஒரு நொடியில் அடங்கிப் பூச்சியாய் ஒடுங்கிவிட்டான்.

'கூண்டோடு கைலாஸம்' என்பது இவ்விடத்தில் சரியாகி விட்டது. அச்சுதன் கம்பீரமான தோற்றத்துடன் மானேஜரை நோக்கி, "சார்! உம்முடைய ஹோட்டலிலுள்ள சகலமான சௌ கரியங்களையும் பார்த்து மிக்க சந்தோஷமடைந்து அதனால் உங் களுக்குச் சரியான வெகுமதியைக் கொடுக்கும்படி மாக்ஷிமை தங்கிய அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்கிறோம். வாருங்கள்.

நீங்கள், தற்போது உங்கள் திருப்பணிக்குச் சிகரம் வைத்தது போல் உதவி புரிந்துவரும் ஹாஸ்டல் தலைவியைப் பார்க்கலாம் வாருங்கள். வாய்திறக்கக்கூடாது. கூட வரவேண்டியது ஒன்று தான்" என்று குத்தலாகக் கூறினர். விதி வலியவந்து தலைமீது ஏறி உட்கார்ந்து தன்னுடைய பலம் பொருந்திய ஆட்சியைச் செலுத்த ஆரம்பித்தபிறகு இனி இவனுடைய ஜம்பம் சாய்வதேது.

வண்ணான் பின்னோடு சுமையைத் தாங்கிச் செல்லும் கர்த்த பத்தைப்போல் குற்றமாகிய சுமையைத் தாங்கிக்கொண்டு தலை குனிந்தவாறு நடந்தான். எல்லோரும் ஹாஸ்டலை அடைந்தார்கள். முதல் கேட்டிலிருக்கும் ப்யூன் கதவு திறக்க முதலில் தலைவியின் உத்திரவு வேண்டுமென்று தூங்கிவழிந்தவாறு சொன்னான்.

பிறகு போலீஸாரைக் கண்டதும் சிம்மத்தைக் கண்டதுபோல் துள்ளிக்குதித்தான். உடனே கதவு திறக்கப்பட்டது. நல்ல நடுநிசி யாதலால் அச்சுதன், இன்ஸ்பெக்டர் ஏகாம்பரம் இரண்டு உடை அணிந்த ஜவான்கள்மட்டும் மானேஜர்சகிதம் உள்ளே சென்றார்கள்.

தலைவியின் அறையில் நடக்கும் சம்பவத்தை ரேடியோவில் கேட்பதுபோல் எல்லோரும் கேட்டுக்கொண்டே நின்றார்கள். அநியாயமாய் ஒரு பெண்ணை இப்படி அடித்துக் கொல்வதற்கு இனியும் இடங் கொடுக்கக்கூடாதென்பதை அறிந்து உடனே கதவிடித்துத் தம் வரவைத் தெரிவித்தார்கள்.

ஐயோ பாவம்! இறுமாப்புப் பிடித்துத் தறிதலையாகவும், எதேச்சாதிகாரியாகவும் ஆட்டம் ஆடிய தலைவி அப்படியே தம் பித்து அலறினாள். மானேஜரை இவள் பார்க்கிறாள்; மானேஜர் இவளைப் பார்க்கிறார். சிறு பசங்கள் "உன்னாலே நான் கெட்டேன். என்னாலே நீ கெட்டே" என்கிற ஆட்டம் ஆடக்கூடிய நிலைமையில் விளங்கினார்கள்.

"அம்மணீ! உயர்தரப் பட்டமாகிய B. A., L. T., பெற்ற மேதாவித் தலைவியவர்களே! உங்களுடைய அருமையானசேவைக்கு சர்க்கார் மகத்தான சந்தோஷத்தையடைந்து தங்களுக்கு அழைப்புப் பத்திரம் கொடுத்திருக்கிறார்கள்" என்று கூறிக் கைதியாக்கினர்.

உள்ளே ஜன்னல் கம்பியில் கட்டப்பட்டுத்துடிக்கும் சுதாவின் உள்ளம் ஆனந்தத்தினால் நிரம்பிப்போய் துள்ளியவாறு "ஸார்! "ஸார்! என்னை அவிழ்த்துவிடுங்கள் உயிர் போகிறது" என்று ஒரு விதமான சுதந்தரமும் நம்பிக்கையும் கூடிய த்வனியில் கூப்பிட்டாள்.

அச்சுதனே நேரில் சென்று சுதாவை அவிழ்த்துவிட்டு அவளைப் பரிதாபமாகப் பார்த்தார். அவளுக்கு என்ன தோன்றியதோ என்னவோ! திடீரென்று அச்சுதனின் காலில் விழுந்து காலைப் பிடித்துக்கொண்டு...'ஸார்! என்னைக் காப்பாற்றவேண்டும். என்னை என் பெற்றோரிடம் சேர்த்துவிட்டால் உங்களுக்கு கோடி புண்ணியமுண்டாகும். இந்த சிறையில் நான் பட்ட துன்பம்போதும். இதோ இக் கடிதத்தை இன்றுதான் நான் தங்களுக்காகவே எழுதி பீட் கான்ஸ்டேபிலிடம் கொடுக்க முயன்றேன். அந்த ரகஸியம் தெரிந்து விட்டதால்தான் என்னை இப்படி தண்டித்திருக்கிறாள். பகவான் ஒருவர் இருக்கிறார் என்பதை நான் நம்பியே துணிந்தேன். அந்த தயாநிதி உங்களை யனுப்பி என் பங்கில் உதவி செய்துவிட்டார். என்னை உடனே என் தாயாரிடம் அனுப்பிவிடுங்கள். அவர்கள் ஆபத்தான நிலைமையிலிருக்கிறார்கள்.நான் உடனேபார்க்கவேண்டும்' என்று கெஞ்சினாள்.

இதற்குமேல் நாம் இதை வளர்த்தவேண்டியதேயில்லை. சட்டப் படி சகலமும் வாக்குமூலம் வாங்கிக்கொண்டு எல்லோரையும் கைதியாக்கிவிட்டார்கள்.

சுதாவின் விவரமறிந்துகொண்டு அச்சுதன் மிகவும் வருத்தப் பட்டார். இந்த அக்ரமத்தில் சம்பந்தப்படாத சுதாவைப்போன்ற பெண்களை தகுந்த பந்தோபஸ்துடன் அவரவர்களின் வீட்டிற்கு

அனுப்ப ஏற்பாடு செய்தார். சுதாவையும் ஒரு சப்-இன்ஸ்பெக்டருடன் கூட்டி அவள் பெற்றோரிடம் சேர்ப்பிக்க உத்திரவிட்டார்.

சுதாவுக்கு ரயிலேறி உட்கார்ந்த பிறகே நம்பிக்கையும் நிம்மதியும் உண்டாயிற்று. தன் தாயாரின் நிலைமை எப்படியிருக்கிறதோ! அவளை கையொடிந்த பரிதாபக் கோலத்தில் எப்படிப் பார்ப்பது என்கிற எண்ணங்களாகிய அலைமோதியபடியே ரயிலின் வேகத்தை விட மனோவேகத்துடன் செல்கிறாள். அன்னையைக் காணவேண்டுமென்கிற ஆவல் துடிக்கிறது. பாழாப்போன ரயில் சீக்கிரம் போகவில்லையே!'' என்று மனது பறக்கிறது.

44

ஒருவருக்கும் பிடிபடாமல் ஆஸ்பத்திரியில் தாறுமாறாக ஓடும் நித்யாவை எத்தனை பேர்கள் துரத்தியும் அடங்கவில்லை. ஆஸ்பத்திரியையே ஒரு கலக்கு கலக்கிவிட்டாள். 'இந்த அதிர்ச்சியில் மூளை கலங்கிவிடுமோ! எங்கே ஹார்டு நின்றுவிடுமோ!' என்று பெரிய டாக்டருக்கு உள்ளூற பயம் நடுங்குகிறது. எதிரில் வருகிறவர்களை அவள் தடுக்கிவிழாதபடி அப்படியே பிடித்துக்கொள்ளும் படிக்குச் சமிக்ஞை செய்தார்.

அப்போதுதான் சுதா வீட்டிற்கு முதலில் வந்து பார்த்தாள். இன்னும் ஆஸ்பத்திரியிலிருந்து வரவில்லை என்று தெரிந்ததும் ஒரே ஓட்டமாக ஆஸ்பத்திரிக்கு ஓடிவந்தாள். அதே சமயந்தான் நித்யா தலைதெறிக்க ஓடுவதைக் கண்டு கட்டுமீறிய துக்கமும் ப்ரேமையும் பொங்கியவளாய் "அம்மா! அம்மா!"...என்று எதிரில் சென்று அவளை அப்படியே கட்டிக்கொண்டாள்.

நித்யா மிகவும் மெலிந்து குச்சிபோலாகியிருக்கும் பரிதாபத்தைக் கண்ணால் காணவே சகிக்காது சுதா 'அம்மா! அம்மா! இதென்ன கோலம்!'' என்று கதறுகிறாள். நித்யா சுதாவைப் பார்த்ததும் அப்படி ஓடுவதை நிறுத்திவிட்டு..."ஹா!...சுதா!....சுதா!...என் கண்மணீ! என் இன்பராணீ! என் செல்வக்கிளியே!...இதோ பார்... இதோ பார்...உன் அம்மா மொண்டி...மொண்டி...கையில்லா மொண்டி!...ஐயையோ!...சுதா!...என் கை மொண்டியாகிவிட்டதடீ!...என் செல்வமே...சுதா!...சுதா!...எப்படி அந்த சிறையிலிருந்து வந்தாய்?''என்றுசரமாரியாய்க்கேட்டு சுதாவைமுகத்தோடு முகம்பதிந்துகொண்டு கண்ணீரால் அவளை ஸ்நானமே செய்வித்தாள்.

சுதா வீட்டில் வந்து வாசலுடன் 'நித்யா எங்கிருக்கிறாள்'என்று விசாரித்துவிட்டு பாட்டியுடனும், பிதாவுடனும் ஒரு பேச்சுக்கூட பேசாமல் போலீஸ்காரனுடன் ஆஸ்பத்திரிக்குச் சென்றதைக்கண்டு

ஒன்றுமே தோன்ருது அலறிக்கொண்டு பிரண்டை பாட்டியும் ஹரி ஹரனும் ஆஸ்பத்திரிக்கு வந்தார்கள்.

அங்கு நடக்கும் சம்பவத்தைப் பார்த்து எல்லோருடைய மனமும் இளகியது. கண்ணீர் உதிர்க்காமல் ஒருவராலும் இருக்க முடியவில்லை. சுதாமதி ஒருத்தி இருப்பதே ஒருவருக்கும் தெரியாது. சுதாவின் புலம்பலை ஒருவராலும் தடுக்கவே முடியவில்லை. நித்யாவை சுதா ஒரு குழந்தையைப்போல் தாவி தூக்கிக்கொண்டு வந்து கட்டிலில் படுக்கவைத்துத் தானும் பக்கத்திலமர்ந்தாள்.

"அம்மா! அம்மா!...நீ அழாதே!...பகவான் சோதனைக்கு இலக்காகித் துடிப்பதற்கே நீ உலகில் பிறந்தாய். கை போனால் போகட்டும். உங்கள் உயிர் இருந்தால் போதும். உங்களை உயிருடன் பார்த்ததே எனக்குப் போதும்" என்று பேசமுடியாமல் பேசினாள்.

நித்யா சோகமும் கோபமும் ப்ரேமையும் ஜ்வலித்தவாறு சுதாவைப் பார்த்து ஒரு விழி விழித்தாள். "சுதா! நீயுமா என்னைப் பார்த்து இப்படிச் சொல்கிருய்? இந்த உலகில் என்னுயிரினும் இனிய பொருள் நீ என்று நான் மதித்திருக்கிறேனே! அத்தகைய நீ கூடவா என் கஷ்டத்தைக் கவனிக்காது பேசுகிருய். நான் ஒரு விதமான ஊனமும் இல்லாதிருக்கையிலேயே பட்ட சிறுமை போதுமே. இனிமேல் மொண்டி, பிறர் கையை சகலத்திற்கும் எதிர் பார்க்கும் மொண்டி. எதற்கு உயிருடனிருக்கவேண்டும்? என்ன விரும்புகிருய்!...சுதா! இனி நான் யாரை அண்டிப் பிழைப்பேன்? என்ன சிறுமைப்படுவேன்?" என்று பெரிதாகக் கதறினாள்.

சுதாவால் இந்த துயரத்தைத் தாங்கவேமுடியாது தத்தளித்தாள். "அம்மா! நீ இம்மாதிரி கவலையே படாதே. இனி என் தலை வெடித்துப் போவதாயினும் சரி. அந்த பிரண்டைப் பாட்டிக்கோ, அவள் அருமைப் புதல்வருக்கோ, பேரனுக்கோ நான் பயப்படப் போவதில்லை. என்னுயிர் இருக்கும் பரியந்தம் உங்களுக்குச் சேவை செய்து இன்புறுவதையே என் வாழ்நாளின் விருதமாகக் கொள்கிறேன். என் முடிவு இதுதான். ஆண்டவன்மீது ஆணையாக நான்சொல்வதை நம்புங்கள். இதைவிட ஆனந்தம் என் ஜன்மத்தில் வேறு கிடையாது. வேண்டுமென்று என்னைச்சிறையிலிட்டுதண்டிப்பதற்குப் பதிலாக கல்விக்கழகம், ஹாஸ்டல் என்கிற கடும் நரகத்தில் தள்ளி வதைத்ததுபோதும். இனி எனக்கு யாரிடமும் பயமில்லை. ஆண்டவனுக்குப் பயந்தால் போதும்...அம்மா....அழாதே....அழாதே...நீ பிழைத்தால் போதும்" என்று தேற்றினாள்.

இவைகளைக் கேட்ட பெரிய டாக்டருக்கு உண்மையில் உள்ளம் உருகியது. "அம்மா! இத்தகைய ஆப்த மனுஷி நீ இருப்பதையே இதுவரையில் யாரும் தெரிவிக்கவில்லையே! இதுபோல் அன்புள்ளவர்கள் அருகிலிருந்து உபசரித்திருந்தால் இந்தம்மாளுக்கு என்றைக்கோ குணமாகி இருக்கும். கலெக்டர் உத்தியோகம் செய்தால்

என்ன, கல் வெட்டினால் என்ன! மனிதனின் குணம் வெறுக்கத் தக்கதாகவிருக்கிறது. இந்தம்மாளின் பரிதாபத்தைக் கண்டு சகிக் கவே முடியவில்லை" என்று வாய்விட்டுக் கூறினர்.

நித்யாவுக்கு இந்த அதிர்ச்சியால் மயக்கம் வந்துவிட்டது. சுதா கண்ணுங்கருத்துமாக அருகிலேயே உட்கார்ந்து கவனிக்கத் தொடங்கினாள்.

இந்த அலங்கோலத்தைக் கண்ட பிரண்டை பாட்டி "அம்மா! சுதா! எப்படி வந்தாயம்மா!...ஒரு கடிதங்கூடப் போடவில்லையே! என்னமோ, போதாக்காலம் நித்யாவுக்கு இந்தமாதிரியாகிவிட்டது" என்று ஆரம்பித்தாள்.

இதுகேட்ட சுதாவுக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டது. பாட்டி யின் முகத்தைக்கூட திரும்பிப் பார்க்கவில்லை. "போதும் போதும். உபசாரங்களெல்லாம் பரிபூர்ணமாய் போதும். இங்கு பேச்சே வேண்டாம். நீ வீட்டுக்குப் போ!"என்று சீறி விழுந்தாள். ஹரிஹர னுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. தலையைக் கவிழ்ந்துகொண்டு வீட்டிற்குச் சென்றான்.

நித்யாவின் அத்தனை அந்தகாரமான விசனத்திலும் ஒரு மின் வெட்டுப்போல் சிறிது சந்தோஷம் சுதாவின் முகத்தைப் பார்த்த உடனே தோன்றியது. சுதா வந்த பிறகு நித்யாவுக்குபடிப்படியாய் குணமாகிக்கொண்டு வந்ததைக்கண்டு டாக்டர்களே வியந்தார்கள்.

சுதாவின் ஹாஸ்டல் விஷயங்கள் மறுதினமே பத்திரிகையில் வெளியானதைக் கண்டு ஹரிஹரன் திடுக்கிட்டான். விவரங்கள் முற்றும் சுதாவாலறிந்து நித்யாவும் வியப்புற்றாள். பின்னும் சில நாட்கள் ஓடி மறைந்தன. சுதா நித்யாவைவிட்டு அரை நிமிஷங்கூட அகலவே இல்லை. நல்ல கதைகள் படிப்பதும் பாட்டுப் பாடுவது மாக நித்யாவின் மனத்திற்கு ஆனந்தத்தைக் கொடுத்துவந்தாள்.

ஆனால் இந்த விபத்து எப்படி உண்டாகியதென்ற உண்மையைச் சொல்லும்படியாக எத்தனையோவிதம் கெஞ்சிக்கேட்டும் நித்யா உண்மையைச் சொல்லவே இல்லை. தான் கீழே விழுந்து அடிபட்ட தாகவே ஸ்தாபித்தாள். சுதா அதற்குமேல் அவளைத் தொந்திரவு செய்ய இஷ்டப்படாமல் பேசாமலிருந்தாள். பிரண்டைபாட்டி யினிடந்தான் சுதாவின் சந்தேகம் பூர்ணமாயிருந்தது. அதனால் பாட்டியின் முகத்தைக்கூட பார்க்கவே இல்லை.

அன்று ஆஸ்பத்திரியிலிருந்து ஓடிவிட்ட யாதவன் அதன் பிறகு வீட்டுப் பக்கமே வருவதில்லை. அவன் என்னவானான் என்றுகூட யாருக்குமேதெரியாது. அவன் சோதா என்பது சுதாவுக்கு நன்றாகத் தெரியுமாதலால் அவனைப்பற்றி இவளும் பேசவில்லை. ஆனால் அவ்வப் போது நித்யா மட்டும் "சுதா! யாதவ் வீட்டிலிருக்கிறானா? உடம்பு ஒன்றுமில்லாதிருக்கிறானா?" என்று விசாரிப்பாள். அதுகூட சுதா வுக்குப் பிடிக்காது வெறுப்பாயிருந்தது.

பின்னும் சில நாட்களாயின. 'நித்யா இனி வீட்டிற்குப் போகலாம்' என்று டாக்டர் கூறினர். உடனே நித்யா சுதாவைப்பார்த்துத் தேம்பித் தேம்பி அழுதாள். சுதா முழு பொறுப்பும் எடுத்துக் கொண்டு நித்யாவைத் தேற்றி வீட்டிற்கு அழைத்துவர ஏற்பாடு செய்தாள். டாக்டர்களுக்கெல்லாம் நித்யா வந்தனங்கூறிக் கண்ணீர் வடித்தாள்.

டாக்டர்களும் தங்கள் அனுதாபத்தைக் காட்டிப் பேசினர்கள். பெரிய டாக்டர் மட்டும் நித்யாவிடம் வெகு அன்புடன் பேசத் தொடங்கி "அம்மணீ! இனியாவது இந்த விபத்தின் உண்மையைக் கூறமாட்டீர்களா! நீங்கள் சொல்கிறபடி நடந்ததென்று நான் நம்பவேமுடியாது. ஏதோ வேறுவிதமான காரணமிருக்கவேண்டும். சொல்லமாட்டீர்களா!" என்று தாழ்ந்த குரலில்கேட்டார்.

நித்யாவின் கண்களில் ஒருவிதமான சாந்தியுடன் கூடிய உணர்ச்சி பிரகாசித்தது. அவள் சடக்கென கைகளைக் கூப்பத் தூக்கினள். தன் ஒரு கை நொண்டியாக விருப்பதை ஒரு வினடி மறந்திருந்து திடீரென்று கையைக் கண்டு மிகவும் அதிர்ச்சியால் துக்கம் பொங்கிப்போய் அப்படியே சுதாவின்மீது கவிழ்ந்தாள். சில வினடிகள் துடித்தாள்.

பிறகு பேசத்தொடங்கி, "ஐயா! தயவுசெய்து எனக்கு விடை கொடுங்கள். நான் சொல்லியதில் நம்பிக்கை இல்லை என்றால் என் வார்த்தை எதில்தான் நம்பிக்கை உண்டாகும். என் விதி என்னை ஆட்டுகிறது என்று மட்டுந்தான் கூறமுடியும். உங்கள் அன்பார்ந்த உதவிக்கு நான் என்ன பிரதி கைம்மாறு செய்யப்போகிறேன்? என்னிதய பூர்வமான வந்தனத்தை ஒத்தைக்கையினல் செய்கிறேன். ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்று கூறும்போது மேலே பேச விடாமல் வாய் அடைத்து பிறகு வீட்டிற்கு வந்து சேர்ந்தாள்.

அந்த வீட்டைப் பார்த்ததும் விபத்து நடந்த பழைய நினைவுகள் முற்றும் குபீரென்று வந்துவிட்டதால் அவள் தேகங் குலுங்கப் புலம்பியபடியே, "சுதா! நான் ஒருவர் கண்ணிலும் படாது என்னை ஒரு தனி அறையில் கொண்டுவிடு...இனி உன்னையும் என்னுடன் பேசவிடாது தடுத்தாலும் தடுக்கலாம். என் பாவம் அப்படியும் நேரும்" என்றாள்.

சுதா:—அம்மா! இனிமேல் இந்திரன் சந்திரன் வந்து என்னைத் திருப்பினாலும்கூட நான் திரும்புகிறவளல்ல. என்னுயிர் போய்விட்டால் என்னவோ! அதுவரையில் உன் காலடியைவிட்டு நான் நகரப் போவதில்லையம்மா! என் ஆண்டவன்மீது ஆணை" என்று ஆவேசத்துடன் கூறினள்.

நித்யா சுதாவைச் சேர்த்துக் கட்டிக்கொண்டபடியே, "என் கண்மணீ! உன்னை நான் பிரியாதிருந்திருந்தால் இந்த கதி வந்தே இருக்காது. என் விதி உன்னைப் பிரித்தது; இக்கதிக்கு ஆளாக்கியது.

உன் தைரியமான வார்த்தைக்கு நான் மெச்சுகிறேன். இருப்பினும் நீ முன்யோசனை இன்றி இம்மாதிரி ஆணையிட்டுப் பேசாதே! நீ ஒரு பெண் குழந்தை. உன்னை யொருவன் மாலையிட்டபின் அவன் வீட்டிற்கு அழைத்துச்செல்லாமல் என்னிடமா விட்டுவைப்பான்?...

என்று கூறி முடிப்பதற்குள் சுதா நித்யாவை ஒருவிதமான ஆவேசத்துடன் பார்த்து அவள் கைகளைப் பிடித்தபடியே பேசத் தொடங்கி, "அம்மா! நீங்களுமா என்னைப் பார்த்து இப்படிப் பேசுவது? எனக்கு இனி கல்யாணமா! ஒரே கல்யாணந்தான். அது தான் என் முடிவு. அம்மா! இனி இம்மாதிரி பேசாதீர்கள். என் மனம் படும் வேதனையை அந்த தயாநிதிதான் அறிவான். என்னுள்ளத்தைப் பறிகொடுத்து நான் அலையும்அலைச்சல் போதாதா! இன்னொரு சனியனை விலைகொடுத்து வாங்கி அடிமையாகவேண்டுமா!" என்று கூறும்போது கண்ணீர் பொங்கியது.

நித்:—கண்மணீ! இன்னுமா உனக்கு அந்த அபாக்யனின் நினைவு மாறவில்லை. ஐயோ! அந்த துர்ப்பாக்ய மனிதன் உயிருடன் இருக்கிறானோ இல்லையோ! அதுவே சந்தேகமாயிற்றே! இன்னும் அவனை நீ நினைப்பதை அறிந்தால் உன் பிதாவின் த்வேஷத்திற்கல்லவா பாத்திரமாவாய்?...பிரபல செல்வவந்தரின் மகனுக்கு உன்னை நிச்சயித்திருக்கிறார்களே! கண்ணா! நீ இப்படி இனி பிடிவாதம் செய்யலாமா! அந்தப் பிச்சைக்காரனை நினைக்கலாமா?

சுதா:—ஐயோ! இந்த பேச்சு எதற்கம்மா! அவரை பிச்சைக்காரக் கோலத்தில் என் கண்ணாரக்கண்டேன். அப்போதும் அவர் என் கண்களுக்கு மன்மதனாகவே காக்ஷியளித்தார்...

நித்:—ஆ!...தாமுவைப் பார்த்தாயா!...என் செல்வனைப் பார்த்தாயா!...தாமு எப்படி இருக்கிறான்?...அப்பா எப்படி இருக்கிறார்?...அம்மா...

சுதா:—அம்மா...ஐயோ!...நான் ஏன் அந்த வார்த்தையை எடுத்தேன்....விஷயம் உங்களுக்குத் தெரியாதா!....

நித்:—சுதா! புரிந்தது...புரிந்தது...என் அன்னை இந்த கர்ம பூமியிலிருந்து கஷ்டங்களைவிட்டுச் சந்தோஷமான புண்ய பூமிக்குச் சேர்ந்துவிட்டாள் என்பதை அறிய என் மனது மட்டிலா மகிழ்ச்சியடைகிறது. சுதா!...நான் விசனப்படுவதாக நினைக்காதே. என் தாயின் விசனம் நீங்கி அவள் நிம்மதியாக இருப்பதையே நான் பெரிதும் விரும்பினேன். என் மனோபீஷ்டம் நிறைவேறியது...அப்பாவுடன் அவன் பிச்சை எடுக்கிறானோ....

சுதாவினால் பதில் பேசவேமுடியாது வருத்தம் மேலிட்டது. நாம் ஏன் சொன்னோம் என்று மனது அலைந்ததால் பேசாமல் நித்யாவின் மடிமீது தன் முகத்தைப் பதித்துப் புலம்பியவாறு, "அம்மா! என் புத்தியீனத்தினால் சொல்லிவிட்டேன். இதை மறந்துவிடுங்கள். இதோடு நிறுத்திவிடுங்கள்" என்றாள்.

அச்சமயம் பிரண்டைபாட்டி அங்கு வந்து "சுதா!...உன்னை உங்கப்பா கூப்பிடுகிறுன். இன்று யாரோ உன்னைப் பார்க்க வரப் போகிறுர்களாம். எழுந்து வா!" என்றுள். இதுகேட்ட சுதாவுக்கு உடம்பே பற்றி எரிவதுபோலிருந்தது. அப்படியே. கிழவியை விழுங்கிவிடுபவள்போல் பார்த்தபடியே, "ஓ! பார்க்க வரப்போகிறுர்களா! நல்லது. இனிமேல் என்னை யாரும் பார்க்கவேண்டாம். வருகிறவர்கள் உன்னையும், உன்னருமை மகனையும் பார்த்துவிட்டுப் போகட்டும். இனி நான் பழய சுதா இல்லே. ஞாபகமிருக்கட்டும்" என்று கடினமான த்வனியில் பேசினுள். இதுகேட்ட கிழவி அப்படியே தம்பித்துப்போனுள். அவள் கண்கள் அசையாது நின்றன.

நித்யா:—சுதா! என்னவிருந்தாலும் நீ சிறுமி. பெரியவர்களேச் சுறுக்கென்று பேசாதே!...அது நமக்குத்தான் ஆகாது—என்று பேசியதைக்கேட்ட பிரண்டைபாட்டியின்மனதுகூட—அசைக்காத மலேயைப்போலிருந்த நெஞ்சங்கூட—சற்று அசைந்துகொடுத்தது.

45

தகப்பனுரின் நிலைமையைக் கண்டு பரிதாபமும் விசனமும் அடைந்த தாமோதரன் சிறிது நேரம் குழம்பினுன். மனது நிலேயில் நிற்காது சுழல்காற்றிலகப்பட்ட துரும்பென அலேந்தது. 'அப்பாவின் ஆசையை நிராசையாகச் செய்துவிட்டால் அது பாபமல்லவா!' என்று ஒருபுறம் தோன்றுகிறது. 'சுதாவுக்குத் துரோகஞ் செய்தால் அதுவும் மகத்தான பாபமல்லவா' என்று மற்றொருபுறம் தோன்றுகிறது. இரண்டுவித சங்கடத்தையும் எப்படி நிவர்த்தி செய்யமுடியும்" என்று சற்று நேரம் தத்தளித்தான்.

இதற்குள் இரண்டடி எடுத்துவைத்துள்ள மூர்த்தி "தாமூ! எங்கிருக்கிறுய்! போகலாம் வா!" என்று கூப்பிட்டான்.

தாமூ:—அப்பா! நான் தெரியாத்தனமாகச் சொல்லிவிட்டேன். நாம் அந்த வீட்டிற்குப் போகலாம் வாருங்கள். நான் அவர்கள் விருப்பப்படியே ஒப்புக்கொள்கிறேன்.

மூர்த்தி:—அப்பனே! தாமூ! நீ ஒப்புக்கொள்வதாகச்சொன்னுல் மட்டும் நான் சம்மதிப்பேனு! முடியாது. உன் அந்தரங்கமறிந்த பிறகு விதி செல்லும் வழியில் விட்டுவிட்டேன். வா! நாம் கண் காணுது போய்விடலாம்—என்று கூறியபடியே முன்னுல் தடியைத் தடவியபடியே நடந்தான்.

பிறகு தாமோதரன் எத்தனை சொல்லியும் கேட்கவில்லே. இருவரும் நடந்து, கால்போக்கில் செல்லவாரம்பித்தார்கள். "பழய குருடி கதவைத்திறவடீ" என்பதுபோல் தெருத்தெருவாய் பிச்சை எடுப்பதும், கிடைத்ததைத் தின்பதுமாகக் காலக்ஷேபம் நடக்கவாரம்பித்தது.

சில நாட்களாயின. வீதியில் போகும் வரும் மோட்டாரின் பக்கத்திலெல்லாம் நின்று 'ஐயா! ஒரு காலணு கொடுங்கள். கண்ணு தெரியாத குருடன் கபோதி நாராயணு' என்று கேட்டுவந்தான்.

காரில் உட்கார்ந்திருந்த ஒருவர் இவர்களைப் பார்த்துத் திடுக்கிட்டு அப்படியே சில நிமிடங்கள் அசைவற்றிருந்தார். பிறகு விசனம் தேங்கிய குரலால் 'தாமோதரா!'...என்று கூப்பிட்டபடியே காரை ஓரமாக நிறுத்திவிட்டு வண்டியிலிருந்து இறங்கி நின்ருர்.

வண்டியிலிருந்து இறங்கிய மனிதரைப் பார்த்ததும் தாமோதரனுக்கு ஆச்சரியமும் அதிர்ச்சியும் உண்டாகி, 'கோபுமாமாவா!... செளக்கியமா! மாமா!....என்னை இக் கேவலமான நிலைமையிலும் அடையாளம் புரிந்துகொண்டீர்களா!...நான் வருகிறேன்'...என்று கூறி வெட்கமும் துக்கமும் பாதித்தவாறு நகரவாரம்பித்தான்.

கோ:—(தாமோதரனை இழுத்து நிறுத்தி தோளில்தட்டியவாறு) தாமூ! இந்த கோலம் எத்தனை காலமாக நடக்கிறது?—என்று கண்ணீர் ததும்பக் கேட்டான்.

தாமூ:—தலைவிதியின் ஆட்சி ஆரம்பகாலம் முதல் நடக்கிறது. உங்களை எனக்கு அடையாளமே தெரியவில்லையே! உடம்பு ஒன்றுமில்லையே!

கோ:—ஒன்றுமில்லை...பெரியவரே செளக்கியமா! என்னைத் தெரிகிறதா?

மூர்:—எனக்குத் தெரியவில்லையே! நான் அந்தகனுயிற்றே!... தாமூ! இவர் யாரப்பா?...சொல்லு...

தாமூ:—நம்ப நித்யாவைத் தான் மணப்பதாக வந்துகேட்டாரே. கோபு என்ற ஒருவர்...அவர்தான்.

மூர்:—(பூரிப்புடன்)...அப்படியா! அப்பனே!...செளக்கியமாயிருக்கிருயா! உனக்கு எத்தனை குழந்தைகள்? இந்த துர்ப்பாக்யப் பிண்டங்களை நினைவு வைத்துக்கொண்டு விசாரிக்கும் உன்னுடைய உத்தம குணத்தழகு என்னை பிரமிக்கச் செய்கிறது. நான் மகா பாவியாகையால் உனக்கு என் நித்யாவைக் கொடுத்து சந்தோஷமாக அவள் வாழ்க்கையைக் காணும் பாக்யம் இல்லாதுபோயிற்று. உம். நடந்ததை எண்ணி வருந்துவதில் பலனென்ன?...என் நித்யாவின் வாழ்க்கையும் அவள் சந்தோஷமும்...

கோ:—ஏன்? அந்தம்மாளுக்கென்ன?...

மூர்:—என்னவா! நான் என்ன சொல்வேனப்பா! அவளுடைய உத்தம குணமும் வாக்கு நாணயமும் சத்தியமும் உனக்குத் தெரியுமே! அந்த த்ரோகி அவளுக்குச் சண்டாளனுகிவிட்டான். அவன் சொல்லியபடி நடக்காது பலவிதத்திலும் பாழ்படுத்திவிட்டான். அவளுடைய அருமையான த்யாகத்தின் மகிமை பகவானுக்கும் தெரியாது போய்விட்டது. என் கண்மணியின் கையும்

உடைந்து மொண்டியாகிவிட்டதாம்...என்று பேசும்போது அவ னால் தாங்கமுடியாது தேம்பித் தேம்பி அழுதுவிட்டான்.

இதைக் கண்டு கோபுவால் தாங்கவே முடியவில்லை. "என்ன! கை போய்விட்டதா!...நித்யாவுக்கா!" என்று அலறினன். உம். விதி யாரை விடுகிறது. புலம்பாதீர்கள்? எல்லாம் அவனருள். இம் மாதிரி அந்த மனிதன் செய்வான் என்று நான் அன்றே நினைத் ததுதான்; அதுவே சரியாயிற்று. பெரியவரே! முதலில் இப்படி காரில் ஏறுங்கள். பிறகு பேசலாம்" என்று மூர்த்தியைப் பிடித்துத் தானே வண்டியில் ஏற்ற முயன்முன்.

மூர்த்தி கோபுவின் கையைத் தடுத்து, "என்ன! நான் காரில் ஏறுவதா! இந்த குருட்டுப் பிச்சைக்காரன் காரின் அருகில் வருவ தற்கு யோக்யதையுண்டா!" என்று கூறியவாறு பின்னடைந்தான்.

கோபு:—தாமூ! ஏறப்பா! பெரியவரே! உங்கள் யோக்யதை களைப்பற்றி இப்போது பேசவில்லை. நீங்கள் ஏறுங்கள்.

மூர்த்தி:—அப்பனே! என்னை மன்னிக்கவேண்டும். நீ இத் தனை ப்ரியத்துடன் இந்த கிழவனை விசாரித்ததே போதும். உன் அன்பிற்காக நான் பெரிதும் பூரிக்கின்றேன். ஏதோ உன் கையால் ஒரு காலணு கொடுத்தால் போதும். இந்தப் பிச்சைக்காரர்களை அழைத்து வந்தால் உன் மனைவி நகைத்து வெறுப்பாள். உன் குழந் தைகள் அசங்கியப்படுவார்கள். நான் வரவில்லை.

இதைக்கேட்ட கோபு கலகலவென்று ஒரு சோகச் சிரிப்பு சிரித்தான்...அச் சிரிப்பு காதில் கேட்டவுடனே மூர்த்தி சற்று பிர மித்தவாறு, "ஐயா! ஏன் சிரிக்கிருய்? பிச்சைச்காரன் உளறுகிறுன் என்று சிரிக்கிருயா?"...என்முன்.

கோ:—பெரியவரே! நீர் கூறியதெல்லாம் எனக்கு சொப் பனத்தில் கூடக் கிடையாது...மனைவியாவது, மக்களாவது? ஆண்டிப் பரதேசிக்கு ஆனந்த வாழ்க்கையா!...

மூர்:—என்ன! ஆண்டிப் பரதேசியா! யார் ஆண்டி! எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே....

கோ:—பெரியவரே! வீண் பழங்கதைகள் ஒன்றும்வேண்டாம். எல்லாம் நான்தான் முதலிலேயே சொன்னேனே. விதியின் வழியே தானே மதியும் செல்லும். என்னுடைய வீட்டில் நான் ஒருவன் தான் இருக்கிறேன். நீங்கள் வாருங்கள்.

மூர்:—அப்பனே! நீ விவாகம் செய்துகொள்ளவில்லையா! ஏன்?....எனக்கு விளங்கச்சொல்லு.

கோ:—பெரியவரே! ஒரு விளக்கமும் வேண்டாம். என் சரித் திரமே வேறு. அன்று அம்மன் சன்னிதியில் உங்கள் பெண்ணைப் பார்த்து என் மனம் லயித்தபிறகு இனி வேறு பெண்களுக்கு என் இதயத்தில் இடமில்லை. அந்த பாக்யம் என்று தவறியதோ, அதோடு என் எண்ணமும் தவறியது. உங்கள் மகளை என் சகோதரிபோல்

அடுத்த நாளே எண்ணிவிட்டேன். என் வாழ்க்கையின் இன்பம் அந்த தயாநிதியைத் தொழுவதுதான். வேறில்லை" என்றான்.

மூர்த்தியின் உள்ளம் உருகியது, கண்கள் பார்வையை இழந்திருக்கிறதேயன்றி உள்ளம் உணர்ச்சியை இழக்கவில்லை. கைகளை நீட்டித் தடவியபடியே கோபுவைச் சேர்த்துக்கட்டிக்கொண்டான். தாமோதரனும் இதுவிஷயம் அறிந்து உள்ளம் உருகினான்.

கோபு இருவரையும் பலவந்தமாகக் காரில் ஏற்றிக்கொண்டு தன் வீட்டிற்குப் போனான். வீட்டில் சமயல்காரன் வேலைக்காரன் இருவரையும் தவிர வேறு யாருமே இல்லை. பெரிய பங்களாவில் தனித்து ஆண்டியைப்போலவே யிருப்பதைக்கண்டு மனது துடித்தது. கோபு இருவரையும் நீராடச்செய்து நல்ல சுத்தமான உடைகளைக் கொடுத்துச் சாப்பாடு போட்டு உபசரித்தான். "பெரியவரே! இனிமேல் நீங்கள் என்னைவிட்டுப் போகவேகூடாது. நான் ஒண்டிக் கட்டையாகக் கிடக்கிறேன். எனக்கும் பொழுதுபோக்காகவும் ஒரு சிறிது மனது ஆறுதலாகவும் இருக்கும். அதோடு தினம் இரவு ஒரு மணிநேரம் ஒரு புராணீகரை வைத்துக் காலக்ஷேபம் சொல்லும்படி ஏற்பாடு செய்திருக்கிறேன். நீங்களும் ஆனந்தமாகக் கேட்டு இன்புறலாம். இதற்கு வேறு ஒரு சாக்கும் சொல்லவேண்டாம். இனி நான் உங்களை விடேன்" என்று கண்டிப்பான த்வனியில் கூறினான்.

வலியவந்த அதிர்ஷ்டம் ஒன்றை தாமோதரன் உதறித்தள்ளியும் அவனுக்குச் சற்று விமோசன காலம் உண்டாகியதால் இன்று கோபு வலிய வந்து அழைத்துவந்தான். எனினும் தம்மால் ஒரு கடுகளவுகூட நன்மையோ, உபகாரமோ இல்லாமல் இருவரும் உட்கார்ந்து சாப்பிடுவதென்றால் அது நியாயமா என்று இருவருக்கும் தோன்றியது. அதை எத்தனை தரம்எடுத்துக்கூறியும் கோபு கேட்கவே மாட்டேனென்று கூறிவிட்டான். அதற்குமேல் தட்டமுடியாது சில தினங்கள் இருப்பதாக ஒப்புக்கொண்டார்கள். கோபுவின் மனமும் குளிர்ந்தது. தாமோதரன் படித்தவனாகையால் கோபுவுக்கு குமாஸ்தாவாக வேலை செய்வதாயும் அதற்குச் சம்மதித்தால்தான் இருக்கமுடியுமென்றும் கூறினான்.

இவர்களைக் காப்பாற்றும்பொருட்டே கோபு அதற்கு இசைந்தான். தாமோதரனும் ஒரு குமாஸ்தாவாக அமர்ந்தான். இதுகாறும் பிச்சைக்காரர்போல் காலந்தள்ளிய மூர்த்தியும், தாமுவும் பழயபடி சிறிது அமரிக்கையான வாழ்க்கை நடத்தவாரம்பித்தார்கள். சில நாட்கள்சென்றன. தினசரிப்பத்திரிகையொன்றைதாமோதரன்படித்துக்கொண்டு வருகையில் சுதா படித்துவந்த ஹாஸ்டல் விஷயங்கள் பூராவும் வந்திருந்ததைக் கண்டவுடனே அப்படியே துள்ளினான்.

இத்தகைய பாழாய்ப்போன ஹாஸ்டலிலா சுதாவைச் சிறைவைப்பதுபோல வைத்தான் அந்த மகா பாவி! அடாடா! சுதா அங்கிருந்து தப்பித்துச் சென்றாளோ! என்னகதியானாளோ! என்கிற

கவலே வந்துவிட்டதால் அதைச் சொல்லவும்கூடாமல் தவித்தான். என்னதான் வைராக்ய பிம்பமாகவிருப்பினும் சுதாவிடம் கொண்டுள்ள பிரேமையை அவனால் மறக்கவேமுடியாது வேதனை செய்ய ஆரம்பித்தது. அந்த ஹாஸ்டலுக்குப்போய் பார்க்கலாமா என்று மனது பதைக்கிறது. அதை வெளியில் சொன்னால் சிரிப்பார்கள் என்ற அச்சமும் பாதிக்கின்றது.

46

நித்யா ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டிற்கு வந்த பிறகு அந்த பங்களாத் தோட்டத்து மத்தியிலுள்ள ஒரு தனியறையில் அவள் சன்யாசினியைப்போலவே தனிவாசம் செய்யவாரம்பித்தாள். சுதாவைத் தவிர வேறு யாருமே அவளிடம் வராதபடி சுதாவே பார்த்துக்கொண்டாள். மற்ற சுற்றுவேலே செய்வதற்குப் பொன்னி ப்ரத்யேகமாக அமர்த்தப்பட்டாள். சாப்பாடுகூட சுதாவே இந்த இடத்திற்குக் கொண்டுவந்து தானே பரிவுடன் பரிமாறவாரம்பித்தாள்.

நித்யாவுக்கு தலே வாருவது, புடவை கட்டுவது முதல் சகலமும் சுதாவே பொறுப்புடன் செய்துவந்தாளேயன்றி வேலேக்காரியிடங்கூட காட்டிக்கொடுக்கவில்லே. நித்யாவின் முகத்தைப் பார்க்கவும் அவளுடன் பேசவும் ஹரிஹரனுக்கு அவனேயறியாது ஒருவிதமான லஜ்ஜையும் விசனமும் உள்ளூறப்பாதித்ததால் நித்யாவின் தனிவாச இடத்திற்கு வரவே அஞ்சினான். அப்படி வந்தாலும் அருகில்சென்று பேசுவதற்கு சங்கோஜமும் விசனமும் பாதித்தன. தூரவிருந்து பார்ப்பதும் உடனே போய்விடுவதுமாகவிருந்தான்.

ஒருதினம் ஹரிஹரன் தூரவிருந்து பார்த்துச் சென்றபோது நித்யா அவன் காது கேட்கும்படி "சுதா! உங்கப்பா ஏன் தூரவிருந்து பார்த்துவிட்டுப் போகிறார்! இந்த நொண்டி மனைவி இனி எதற்கு? வேறு அழகான பெண்ணைப் பார்த்து விவாகம் செய்து கொள்ளலாம் என்று போகிறாரா? சுதா! ஒருவிதமான ஆக்ஷேபனையுமின்றி தாராளமாகச் செய்துகொள்ளச் சொல்லு...இனி இந்த நொண்டி...அவருடைய மனைவி என்று சொன்னால் உலகமே சிரிக்கும்"...என்றாள்.

பழுக்கக் காய்ச்சிய ஈட்டியைக் காதில் சொருகியதுபோல் ஹரிஹரனுக்கு இவ்வார்த்தைகள் பட்டதேயன்றி சாதாரண வார்த்தையாகத் தோன்றவில்லே. சுறுக்கென்று இதயத்தில் தைத்தவுடனே ஒரு விநாடி தள்ளினான். உடனே நித்யாவிடம் ஓட்டமாக ஓடிவந்து அவள் கையைப் பிடித்துக்கொண்டு "நித்யா! இந்த மகாபாவி உன்னெதிரில் வருவதற்கு அஞ்சியே ஒடுகிறேன். எனக்கு இனியும் கல்யாணமா! என்னை நீ என்ன சொன்னாலும் தகும். உன் வயிற்றெரிச்

சல் தீர நன்றாகச் சொல்லு. எதேச்சாதிகாரமாகத்திரியும் கிளியைப் பிடித்துக் கூட்டிலடைத்து அதன் சிறகுகளையும் பிய்த்து அதன் காலையும் ஒரு மகா த்ரோகி, சண்டாளன் உடைத்துவிட்டால் எப்படியோ அப்படியே உன்னை நான் செய்துவிட்டேன். நித்யா!... என் இதயம் அளிந்த புண்ணாகத்தவிப்பதை இனி நான் சொல்லி உபயோகமில்லை. நித்யா! இன்னமும் கேட்கிறேன். அன்று களவுபோனதும், உன்னை இக்கதிக்கு ஆளாக்கியதும்''...என்று முடிப்பதற்குள் நித்யா சுதாவை நோக்கி, ''சுதா!எனக்கு ஏதோ மயக்கமா வருகிறது. அப்பாவை இதுவிஷயம் பேசவேண்டாம் என்று சொல்லு'' என்று கூறிக் குப்புறப் படுத்துவிட்டாள்.

மறுபடியும் எங்கு மயக்கம் வந்துவிடுமோ என்று பயந்துபோய் ஹரிஹரன் ''நித்யா! என்னிடம் நேரில் பதில் சொல்லக்கூடாதா?'' என்று கெஞ்சினான்.

நித்:—பேசக்கூடாத கர்வமா எனக்கு வந்திருக்கிறது? நான் பேசி என்ன ப்ரயோஜனம்? என் பேச்சிற்கு மதிப்பும், செல்வாக்கும் உண்டானால் பேசலாம்.

ஹரி:—ஐயோ! இன்னும் என்னைக் குத்திக் காட்டுகிறாயே!... என் புத்தி பாழாகியதால் உண்டான விபரீதம் போதுமே...நித்யா! நீ என்ன வேண்டுமாயினும் சொல்லு. ஏன் இந்த தியக்கம்?

நித்:—தியக்கமும் இல்லை. மயக்கமும் இல்லை. யாதவ் எங்கு சென்றான். காணவே இல்லையே! அவனைத் தேடி யழைத்து வந்து அவன் கல்யாணத்தை நடத்தவேண்டாமா! அந்த கோவம்தான் அவன் வீட்டிற்கு வரவில்லையோ என்னவோ! இதைக் கவனிக்காமலிருந்தால் ஊரார் சிரிக்கமாட்டார்களா! சுதாவுக்கு ஒரு வரனும், யாதவனுக்கு ஒரு பெண்ணும் தேட ஆரம்பியுங்கள். இதுதான் என் கோரிக்கை. முன்பு கடிதம் எழுதிய ரங்கநாதரின் பெண் விமலாவை நேரில் அழைத்துக்கொண்டு வரச் சொல்லி ஒரு தந்தி யடியுங்கள்.

ஹரி:—முதலில் யாதவனைக் காணவே இல்லையே! அவனில்லாமல் தந்தியடித்து என்ன செய்வது? ''பிள்ளை எங்கே'' என்று கேட்டால் அதற்கென்ன பதில் சொல்வது? எதற்கும் நான் ஆட்களை விட்டுத் தேடச் சொல்கிறேன்''என்று கூறிவிட்டு வெளியே சென்றான்.

நித்யாவை ஆஸ்பத்திரியில் பார்த்துவிட்டு ஓடிய யாதவ் வீட்டு வழியே வரவில்லை. நித்யாவைப்பற்றி அவன் என்ன நினைத்தானோ, அது கடவுளுக்கே அர்ப்பணம். இடையில் எப்படியோ இத்தனை மாதங்கள் உருண்டு போய்விட்டன. பகல் பன்னிரெண்டு மணி இருக்கும். எல்லோரும் சாப்பிட்டுவிட்டு நிச்சப்தமாகவிருந்தது. ஆனால் வெய்யில்மட்டும் மகா உக்ரகத்துடன் காய்ந்துகொண்டிருந்தது. நித்யா சுற்றுகிற நாற்காலியில் உட்கார்ந்திருந்தாள்.

அவளுக்கு மனது ஒருவிதமாக நிலையிடங்கொள்ளாமல் தவித்ததால் எண்ணாததும் எண்ணி ஏங்கிக்கொண்டிருந்தாள். அவள்

தன் கையைப் பார்த்துப் பார்த்து அவளாலேயே சகிக்கமுடியாது கண்ணீர்விட்டுக் கலங்கி, "எனக்கு ஆயுள் சீக்கிரம் முடியாதா! சர்வேசா! என்று புலம்பித் தவிக்கிறாள். "நான் நொண்டியாகியபிறகு கூட பூமியில் இருக்கலாமா! பிராணனை விட்டுவிட்டால்தான் என்ன?" என்றும் தோன்றியது.

ஈசன் தன்னை இப்படியும் ஒரு சோதனைக்குள்ளாக்குவார் என்று நினைக்கவே இல்லையே" என்று கதறும் தருணம் யாதவ் அந்தப் பக்கம் வந்தான்.

ஆஸ்பத்திரியிலிருந்து சென்றபிறகு இது பரியந்தம் அவன் நித்யாவைப் பார்க்கவே இல்லை. அவன் வேறு ஒரு காரியமாக வீட்டிற்குவந்தான். இங்கெல்லாம் சந்தடியே இல்லாததால் வீடு பூராவும் சுற்றினன். நல்ல பகல் வெயிலின் அனுப்பால் எல்லோரும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். தகப்பனுடைய பெட்டியிலிருந்து பணம் திருடுவதற்காக வந்தான்.

தகப்பனரை வீட்டில் காணவில்லை. பிரண்டைப்பாட்டி பிரமாதமான நித்திரையில் ஆழ்ந்திருந்தாள். திருடன்போல் உள்ளே சென்றான். பெட்டியைத் திறந்து பணத்தைத் திருடிக்கொண்டு பின்பக்கத்து வழியால் போவதற்கு வந்தான்.

பின்பக்கத்திலுள்ள ஒரு தனி விடுதி எப்போதும் உதவாத சாமான்களைப்போட்டுப் பூட்டியிருக்கும் வழக்கத்திற்கு விரோதமாய் அன்று திறந்து வைத்திருப்பதைக்கண்டு வியப்புடன் அங்கு என்ன இருக்கிறதென்று எட்டிப் பார்த்தான். நித்யா அங்கு ஒரு புறமாக நாற்காலியில் அமர்ந்து மேற்குறிப்பிட்டவாறு புலம்பிக் கொண்டிருந்ததைக்கண்டான். நித்யாவின் கை வெட்டப்பட்டு முண்டமாயிருப்பதையும் அவள் உருக்குலைந்துபோய் முன்பு பார்த்தவர்களே இப்போது பார்த்தால் அடியோடு அடையாளம் தெரியாது திகைக்கத் தக்க மெலிவுடன் தனது மொண்டிக் கையைப் பார்த்துப் பார்த்து தேகங் குலுங்கப் புலம்புவதைக் கண்டதும் அவன் தலையில் எரிமலையே புரண்டு விழுந்தது போன்ற ஒரு பெருத்த அதிர்ச்சியும் உணர்ச்சியும் உண்டாகி தேகமே கிடுகிடென்று ஆடியது.

"என்ன...நான் காண்பது நித்யாவா!...நித்யாதானு...உண்மையில் நித்யாவா...நித்யாவின் கையையா வெட்டிவிட்டார்கள்? ஐயையோ!...நான் செய்த காரியத்தின் பலனு இது?...இத்தனை தூரம் விபரீதமான ஆபத்தும், அங்க ஊனமும் நேர்ந்த பிறகுகூடவா என்னைக் காட்டிக் கொடுக்காதிருக்கிறார்கள்! ஐயோ! மூளை கலங்கி பைத்தியம் பிடித்துவிட்டது என்றல்லவா சொன்னார்கள். அதனுல் என்கொழுப்பும் அதிகரித்து,இதோடு அச்செய்கை அமுங்கி விட்டது என்று எண்ணினேனே. இத்தகைய சண்டாளச் சதி செய்தவனைக் காட்டிக்கொடுக்காத உத்தமியின் ஸ்வரூபமா இது...

ஐயோ ! என்னை ஏதோ சித்திரவதை செய்கின்றதே....தலைசுழலு கின்றதே...என் கையாலா அவள் கையை உடைத்துவிட்டேன். நானா கையை மொண்டியாக்கினேன்...என் இதயம் துடிக்கின் றதே...ஒன்றுமே தெரியவில்லையே"...என்று ஒரு இமைப்பொழு தில் நரக வேதனையை அனுபவித்துத் துள்ளினான்.

அவனுக்குத்தான் நிற்கும் பூமி அப்படியே சுற்றுவதுபோல் தோன்றியது. தான் திருடியதும், கத்தியால் குத்தியதால் பிறகு அவள் கையைவெட்டும்போது எப்படித் தவித்திருப்பாள் என்பதும் அவன் கண் முன்பு பலவித பயங்கரத் தோற்றத்துடன் தெரிந்ததும் அவனை யறியாமலேயே அவன் இதயத்தில் ஒரு மின்வெட்டுப் போன்ற உணர்ச்சியும், மாறுதலும் உண்டாகிய வேகத்தில் தன்னை மறந்துபோய் "அம்மா !...அம்மா !"...என்று ஆனை வீறிடுவது போல் வீறிட்டவாறு ஓடிவந்து நித்யாவின் காலைக் கட்டிக்கொண்டு அவள் முழங்காலில் தன் தலையைப் பதித்தவாறு, "அம்மா ! என்னை மன்னிப்பாயா! என் புத்தி எங்கேயோ மங்கிப்போய் என்னை மகா பாவி யாக்கிவிட்டது. எனக்கு ஒருவித தீங்கும் செய்யாத உன்னை நான் கொலை செய்வதற்கொப்பாக ஊனம் செய்தும் இந்த மகா பாவியை உனக்கு த்ரோகம் செய்த சண்டாளனை, உன் கையை ஒடித்தப் பாதகனை காட்டிக்கொடுக்காமலிருக்கும் உத்தமி நீயே தயாநிதி...நீயே தயாநிதி. நீயே பொறுமையில் சிறந்த பூமாதேவி. என்னை மன்னிப்பாயா...என்னை க்ஷமிப்பாயா!" என்று பெரிதாகக் கண்ணீர்விட்டுக் கதறினான்.

தன்போக்காகக் கலங்கியவாறு நித்யா உட்கார்ந்திருந்த சமயம் அவள் கனவிலும் எதிர்பாராதவிதமாக வந்து இவ்வாறு கதறு வதைக்கண்டதும் நித்யாவை அப்படியே ஒரு குலுக்கு குலுக்கி தூக்கிவாரிப்போட்டதுடன் அவளால் வர்ணிக்கமுடியாதவிதமான மன வெழுச்சியும், உணர்ச்சியும், இதயக் கிளர்ச்சியும் ஒருங்கே சேர்ந்து அவளைக் கப்பிக்கொண்டன. கண்ணீர்மட்டும் தன்போக் காகப் போய்க்கொண்டே இருக்கிறது. அந்த புதிய உணர்ச்சியின் வேகத்தை அவளால் தாங்கவே முடியவில்லை. "யாரு...யாரு...என் குமாரன் யாதவனா!....யாதவனா!"...என்று தடுமாறி நாக்குழையக் கூறியவாறு தன் ஒருகையால் அவன் தலையை நிமிர்த்திப்பார்த்தாள்.

அவ்வளவுதான். நித்யாவின் இதயக் கொந்தளிப்பும், ஆச்சரிய மும் கரைபுரண்டோடின. "சுதா!...சுதா!...எழுந்திரு...எழுந்திரு... அண்ணா வந்துவிட்டான்....அண்ணா...உன் அண்ணா...நம் யாதவ்... வந்திருக்கிறான்"...என்று தலைகால் தெரியாது கத்தினாள். இந்த குரலைக் கேட்டு சுதா அலறியடித்துக்கொண்டு எழுந்துவந்து, இக் காட்சியைக் கண்டு பிரமித்துப்போய், அப்படியே அசையாக்கல் போல நின்றாள். என்ன பேசுவதென்றே தெரியவில்லை,



இயற்கை யன்னையின் வீர சக்தியால், ஒரு பூகம்பத்தின் வேகத்தில் ப்ரம்மாண்டமாகவிளங்கும் மாட மாளிகையும் கூட கோபுரமும் அடியோடு அழுங்கிப்போவதும், மண்மேடாகவிருக்கும்சாதாரணஇடத்தில் அழிந்து புதைந்துகிடந்த ஒருபுராதன

இடம் மூற்படுவதும் சகஜமல்லவா! அதேபோல் மனித இதயங்களிலும் பல பூகம்பங்கள் உண்டாகி அதன் பலாபலன்களைக் காட்டுவதும் சகஜமே. கடவுளின் விசித்திரமான லீலாவினோதத் தாண்டவ மகிமையை யாராலறியக் கூடும்? ஆட்டுவதும் அவனே! ஒன்று கூட்டுவதும் அவனே! அழிப்பதற்கும், செழிப்பதற்கும் அவன் சித்தமே காரணமன்றோ!

சென்னை-600 008

"அம்மா...என்னை மன்னிப்பீர்களா!...மகாபாவி நான் செய்த அக்ரமங்கள் எல்லாம் போதாமல் இப்போதும் திருடுவதற்கே நெஞ்சழும் கையுந்துணிந்துவந்தேன். திருடியும் இதோ வைத்திருக்கிறேன்...கொடிய பாவியாகிய என்னை க்ஷமிப்பீர்களா?...சுதா... சுதா...நான் உன் அண்ணனல்ல....நம் அன்னையைக் கொலைசெய்ய எண்ணிய கள்வன்....அன்னையின் கையை ஒடித்த பாதகன்... திருடன்...என்னிதயக் கண், இன்று திடீரென்று அன்னையின் கையைப் பார்த்தவுடனே திறந்ததுபோல் அன்றே திறந்திருக்கக் கூடாதா?"

என்று அவன் கதறுவதைக் கேட்ட சுதா அப்படியே தீயை மிதித்தவள்போல் துள்ளினாள். "என்ன...அம்மாவின் கையைக் குத்தியவன் நீயா!...இரும்புப் பெட்டியிலிருந்த நகைகளைக் களவாடியவனும் நீயா!...நீயா...அண்ணா!...உண்மையில் நீயா!"... என்று நெஞ்சு வெடித்துவிடும் வேதனையுடன் கேட்டாள்.

"ஆம் சுதா!...நான்தான். அந்த த்ரோகி நானேதான். என்னை இனி அண்ணா என்று சொல்லாதே...."திருடா!...கொலைக்காரா!" என்று கூப்பிடு. என்னால் இத்தனை பெரிய ஆபத்தையடைந்தும் என்னைக் காட்டிக்கொடுக்காதிருந்த பெருமையை நான் இந்த நிமிஷம் வரையில் உணரவே இல்லை. சுதா!...என்னுடைய ஜென்மமே வியர்த்தமாகிவிட்டது" என்று புலம்புகிறான். நித்யாவோ உணர்ச்சியின் மிகுதியால் வாயே திறக்கவில்லை. அவள் ஆகாயத்தைப் பார்த்தபடியே விம்முகிறாள். தன் ஒரு கையால் அவன் தலையை மட்டும் தடவியவாறு பிரமை பிடித்தவள்போல் கண்ணீர் பெருக, சாந்த தேவதையாய் உட்கார்ந்துவிட்டாள்.

ஹரிஹரன் வெளியே போயிருந்தவன் வந்தவுடனே தன் தாயாரை எழுப்பி 'அம்மா! இன்று சுதாவைப் பார்க்க யாரோ வரப் போகிறார்களாம். நீபோய் சுதாவை அழைத்துவா!' என்றான். கிழவி 'நீயும்கூட வா...நான் மட்டும் போனால் அவள் மசியமாட்டாள். இருவரும் போய் நித்யாவிடமே சொல்லி அவளைச் சரிப்படுத்தலாம்' என்று கூறியவாறு இருவரும் இங்கு வந்தார்கள்.

அறைவாசப்படி யருகில் வரும்போதே யாதவனின் குரலைக் கேட்டு இருவரும் கட்டுமீறிய ப்ரமிப்புடன் பறக்கப்பறக்க உள்ளே வந்தார்கள். யாதவன் நித்யாவின் மடியில் தலைவைத்துக் காலைக் கட்டிக்கொண்டு புலம்பியவாறு, சுதாவைப் பார்த்துச் சொல்லியதையும், நித்யாவிடம் மன்னிப்புக் கேட்பதையும் கேட்ட இவ்விருவரும் இன்னதென்று விவரிக்கமுடியாத வியப்பும் மன அதிர்ச்சியுமடைந்து "என்ன!...யாதவனா!...அவனா இந்த, இத்தகைய விபரீதத்தைச் செய்தான்! அவனா அன்று திருடியது...யாதவனா நித்யாவின் கையில் குத்தியது?...இதென்ன அநியாயம்!" என்று தம் தம் வாய்க்குள் சொல்லிக்கொண்டு அப்படியே தம்பித்து நின்று தம்மை

யறியாது கண்ணீர் பெருக்கினர்கள். பிரண்டைப்பாட்டியின் கல்நெஞ்சங்கூட இளகிக் கலங்குகிறது. மடைதிறந்த கால்வாயைப்போல் நித்யாவின் கண்கள் மழைபொழிகின்றன. சில நிமிஷங்கள் வாயடைத்தப் பதுமைபோல் வீற்றிருந்தாள். பிறகு அவன் தலையைத் தடவியவாறே, “யாதவ்!........ஆண்டவன் உனக்குச் சர்வமங்களத்தையுங் கொடுத்து ரக்ஷிப்பானாக. அவனுடைய கடாக்ஷத்தைப் பெற்று இனியாவது சந்தோஷமாக இரு. அழாதே...இதெல்லாம் என் தலைவிதி. நான் செய்த பாபம். கணக்கற்ற பாபத்தைச் செய்து பிறந்த நான் அவைகளை அனுபவிக்காமல் இருக்கமுடியுமா? யாதவ்! எழுந்திரு....என் செல்வா! எழுந்திரு” என்று அன்பும் தயையும், சாந்தமும் த்வனித்த குரலில் கூறினாள்.

இவைகளைக் கேட்ட ஹரிஹரனுக்கு இன்னதென்று விவரிக்க முடியாத சங்கடம் செய்கிறது...பிரண்டைப்பாட்டிக்கும் தன் பேரனா இப்படிச் செய்தான் என்பதை நினைக்கும்போது குடல் குழம்பியது. தடதடவென்று அருகில் வந்து ஆத்திரத்துடன் “ஐயையோ! அடேய் யாதவா!...நீயாடா இம்மாதிரி காரியம் செய்வது? என்னால் இந்த அவமானத்தைத் தாங்கமுடியவில்லையே! என் மனக்கோட்டையை எல்லாம் இடித்துத் தகர்த்துப் பொடியாக்கிவிட்டாயேடா! இதென்ன பரிபவம்? இப்படியாடா உன் புத்தி கெட்டது?” என்றுகூறி லபோதிபோ என்று அடித்துக்கொண்டாள்.

ஹரிஹரனுக்கு இன்னது பேசுவதென்றே தெரியவில்லை. “நித்யாவின் ஆழ்ந்த பிடிவாதத்தின் மர்மம் இப்போதல்லவா தெரிகிறது. என்ன அக்ரமம்! இவ்வளவு கொடிய பயங்கரமான காரியத்தைச் செய்த மனிதனைக் காட்டிக்கொடுக்காதிருந்த உத்தமியின் பெருமை யறியாது இந்த நிமிடம் வரையில் இவள் உடந்தையாகவிருந்து தாமோதரனுக்குத்தான் திருடிக் கொடுத்துவிட்டதாக ஊர்ஜிதம் செய்துகொண்டிருந்தோமே...என் தாயாரின் உபதேசமும் அதற்கனுகூலமாயிருந்ததால் அவனை அன்று அடித்துக் கொன்றுவிட்டேனே. பழியோரிடம் பாவமோரிடமாகிவிட்டதே! தன் தம்பி எங்கு பிடிபட்டுத் தண்டனையாகிவிடுவானோ என்றுதான் உண்மையைச் சொல்லமறுக்கிறாள் என்று நான் நினைத்த த்ரோகம் என் வயிற்றில் பிறந்த பிள்ளையே கள்ளனென்றும், த்ரோகி என்றும் ஆய்விட்டதே” என்று எண்ணித் தவித்து நித்யாவைப் பார்த்து, “நித்யா!”....என்றான் ஆனால் மேலே வாயிலிருந்து ஒரு வார்த்தைகூடக் கிளம்பாது, வாய் அடைத்தது. நித்யா ஹரிஹரனை ஒரு சோகப்பார்வை பார்த்து கலகலவென்று பெரிதாக நகைத்தாள். அந்த நகைப்பில் த்வனித்த பலவித உணர்ச்சிகளின் ரகஸியத்தை மூர்க்கனான ஹரிஹரன் எப்படி உணர முடியும்? ஆந்தையைப்போல் விழித்தான். இதயம் ஆயிரம் மைல் வேகத்தில் அடித்துக்கொள்கிறது. நித்யாவின் சிரித்த ஒலி அந்த சிறிய கட்டிடம் பூராவும் எதிரொலியுடன் ரீங்காரம் செய்தது.

பத்திரிகையில் வந்த விஷயங்களைப் படித்துவிட்டுக் கதிகலங்கிய தாமோதரன் அதைப் பிறரிடம் சொல்லாதிருக்கவும் முடியாது தவித்தான்; பிறகு ஒருவாறு மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு கோபுவிடமே பத்திரிகையைக்காட்டி "இதென்ன விஷயம் சார்!" என்முன்.

கோபு நகைத்துக்கொண்டு "அப்படிக்கேளு ராஜா! உன்னருமை சுதா அங்கு படிப்பதால் உனக்குக் கவலை வந்திருக்கிறது. அதானே பயப்படாதே தம்பி! பயப்படாதே. சுதா மகா கெட்டிக்காரி; வீரமும், எடுத்ததைச் சாதிக்கும் தீரமும் படைத்த பெண்மணியாகையால் அவளே தக்க சமயத்தில் ஹாஸ்டலின் ஊழலை வெளியிட்டுத் தலைவியைக் காட்டிக்கொடுத்துவிட்டாளாம். அதையும் இதே பத்திரிகையில் இன்னொரு பக்கத்தில் போட்டிருக்கிறூர்கள். படித்துப் பாரு. உன் சுதா நல்ல கவுரவமான போலீஸ் பந்தோபஸ்துடன் தன் தாயாரிடம் போய்ச் சேர்ந்துவிட்டாள்.

இந்த ஹாஸ்டல் ஊழல் சாமானியமானதல்ல. திவான்பகதூர் அச்சுதன் அவர்களிடம் இந்த ஆபாஸம் கிடைத்த பிறகு இதை அவர் லேசில் விடமாட்டார். தர்ம ஸம்ரக்ஷணார்த்தம் ஹாஸ்டல் வைத்துப் பெண்களை பாதுகாப்பதாகப் பறைசாற்றி வந்த ஸ்ரீமதி தலைவியவர்களுக்குச் சரியாகத் நீட்டி விடுவார் தெரியுமா! இனிமேல் எந்த விடத்திலும் இத்தகைய ஊழல்கள் நடக்காதபடியும் பார்த்துக் கொள்வார். ஆகையால் நீ கவலைப்படாதே. உன் சுதாவையும், நித்யாவையும் பார்க்கவேண்டுமானுல்சொல்லு.நான் நேரிலேயேஅழைத்துக்கொண்டு போகிறேன். என்ன சொல்கிறுய்?" என்முன்.

இதைக்கேட்ட தாமோதரனுக்கு அவர்களைப் பார்க்கவேண்டுமென்கிற ஆசையும் கடுமையாக எழுந்தது. சுதாவின் பிம்பம் மின்வெட்டுப்போல் கண் முன்பு பளிச் பளிச்சென்று தெரியவாரம்பித்தது. நித்யா மனவைராக்யமும் வெறுப்புங்கொண்டு தன்னை வரவேண்டாமென்று கண்டிப்பாய் சொல்லியிருக்கும்போது தான் அவள் மனத்திற்கு விரோதமாகச் செல்வது சரியல்லவென்றும் தோன்றியது. என்ன செய்வான் பாவம்!

எத்தனைதான் சுதாவை மறக்க அவன் ப்ரம்ம ப்ரயத்தனம் செய்தாலும் அது அடியோடு பலனற்றதாக ஆய்விட்டது. இந்த ஹாஸ்டல் விஷயங்களைப்பற்றி பார்த்த பிறகு பின்னும் அதிகரித்த பைத்தியமாகச் செய்துவிட்டதேயன்றி மனத்தை மாற்றவே முடியவில்லை. அங்கு போவதற்கும் மனது துணியவில்லை. எண்ணெயில் விழுந்த ஈயைப்போல் குழம்பித் தவித்தான்.

வெய்யிலில் தவித்தவனுக்குத்தான் நிழலின் அருமை தெரியும். பசித்துப் புசிப்பவனுக்குத்தான் உணவின் ருசியும் இனிமையும் தெரி

யும். அதுபோல் கோபுவின் இதயத்துடிப்பின் கண்ணுடியில்தாமுவின் துடிப்பை அவன் உள்ளம் நன்கறியுமாதலால் தாமுவின் விஷயத்தில் கோபுவுக்கு மிகவும் அனுதாபம் உண்டாகியது. எனினும் அவன் என்ன செய்யமுடியும்?

"மலைக்கும் மடுவுக்குமான வித்தியாசமுள்ள இடத்தில் நான் ப்ரேமை கொள்வது என்ருல் அது சாத்யமாகுமா! என் இப்படி என் மனத்தில் இத்தகைய ஒரு சோதனையை உண்டாக்கிக் கடவுள் ஆட்டவேண்டும்!" என்று தன்னைத் தானே தாமோதரன் நொந்து கொண்டான்.

"இதேபோல் சுதா நம்மை நினைத்திருக்கிருளா?" என்றும் ஒரு எண்ணம் உதித்தது. சுதாவின் நிலைமை அவனுக்கெப்படி தெரியும்? இரவு பகல் தன்னிதயக் கோயிலிலேயே அவனை வைத்துப் பூஜிப்பதும் அவனுக்காகக் கண்ணீர் உதிர்ப்பதும், அன்னுகாரமின்றித் தவிப்பதும் அவளைப் படைத்த ஆண்டவனையன்றி வேறு யாரா லறியக்கூடும். இதுவிஷயத்தை நித்யாவிடங்கூட அதிகமாகப் பேசுவது கிடையாது. அவனைப்பற்றிப் பேச்சை எடுக்கும்போதெல்லாம் நித்யா கண்ணீர் விட்டுக் கலங்குவதால் அவள் மனத்தை நோகச் செய்யக்கூடாது என்பதே அவளுடைய நோக்கம்.

அதனுல் நித்யாவின் மனப்படி பேசி அவளை இன்புறுத்தி வருவதே தனது இன்பமாகக் கொண்டாள். தன்னை வேறு ஒருவனுக்கு மணஞ் செய்ய ஏற்பாடாவதை அவள் மனது அடியோடு வெறுத்த தோடு, தான் கல்யாணமே செய்துகொள்வதில்லை என்கிற ப்ரதிக்ஞையும் செய்துகொண்டாள்.

48

இதே எண்ணத்துடன் படுத்திருந்த சமயம் யாதவ் வந்திருப்பதை யறிந்து எழுந்து வந்ததும் அவளுடைய சந்தோஷம் கரை கடந்தது. அவனுக்கும் இத்தகைய நல்ல புத்தி பிறக்கும் நற்காலம் வந்ததை எண்ணி உள்ளம் பூரித்தாள். யாதவனே நித்யாவின் காலைக் கட்டிக்கொண்டு அழுதவன் எழுந்திருக்கவே இல்லை. புலம்பிப் புலம்பி முகம் முற்றும் வீங்கிவிட்டது. நித்யாவின் உணர்ச்சி மிகுதியில் மௌனம் அதிகமாகத் தாண்டவமாடியதேயன்றி பேச முடியவில்லை. தன் கணவன் கூப்பிட்டதற்கு ஒரு சோகச் சிரிப்பு சிரித்தவள் அதோடு மீண்டும் மௌனங்கொண்டாள்.

ஆச்சரியமும் பிரமிப்புமடைந்த ஹரிஹரன் சற்று சமாளித்துக் கொண்டு "நித்யா! இந்தப் பாதகனை இதுபரியந்தம் காட்டிக்கொடாதிருந்ததுவன்?" என்று ஆரம்பித்து முடிவதற்குள், "இனி இது பற்றி

பேச்சே வேண்டாம். உங்கள் பற்களே உங்கள் நாக்கைக் கடித்து விட்டதென்றால் பல்லைப் பிடுங்கி எறிந்துவிடுவீர்களா! உங்கள் விரலே உங்கள் கண்களைக் குத்திவிட்டதென்றால் கையைவெட்டிவிடு வீர்களா! இதெல்லாம் ஒரு கனவின் தோற்றம். மின்வெட்டுப் போல் தோன்றி மறைந்த மாயமாக நினைக்கவேண்டும்.

இனி இதைப்பற்றிப் பேச்சே எடுக்கக்கூடாது. வீட்டு வேலைக் காரர்களுக்குக்கூட தெரியவேண்டாம். மல்லாக்கப்படுத்தவாறு எச்சிலை உமிழ்ந்தால் மார்மேல்தான் விழும். அது கீழே விழாது. என் கை போனதினால்தான் அவன் புத்தி திருந்தி நல்வழி உண்டாகியது. உலகத்தில் ஒன்று பிரகாசிப்பதற்கு மற்றொன்று மங்குவது சகஜந் தான். ஆகையால் மனத்தை நோக வைக்கவேண்டாம்.

யாராகட்டும் தான் செய்த தவறுதலை உணர்ந்து வருந்தினால் அவர்களைக் கைத் தூக்கிவிடுவதுதான் தர்மமாகும். அனாவசிய மாய்ப் பேசவேண்டாம்'' என்று கூறிப் பின் "யாதவ்!...யாதவ்!.... புலம்பாதே! எழுந்திரு...நீ இப்போது தூங்கி விழித்துவிட்டாய். நீ தூக்கத்தில் கண்ட கனவுகளை மறந்துவிடு. என்னைப்பற்றி நான் கவலைப்படவில்லை. உன் புத்தி திருந்தி நீயும் உலகத்தவர்களைப்போல் வாழவேண்டுமே என்றுதான் நான் இரவு பகல் தபஞ்செய்தேன். என் தவத்தைஆண்டவன் ஏற்றுக்கொண்டது என் பாக்யமாயிற்று. யாதவ்!...இன்னும் அழுகிறாயே!''என்று அன்பு ததும்பக் கூறினாள்.

தயையே உருவாய்க்கூறிய வார்த்தையைக்கேட்ட யாருடைய மனதுதான் இளகாது. நித்யாவின் பரிசுத்தமான புத்திரவாத்ஸல்யத் தையும், பிரமிக்கத்தக்க பொறுமையையும் கண்டு பிரண்டைப்பாட் டியின்வியப்பும்பிரமிப்பும்அவளாலேயேதாங்க முடியவில்லை."நித்யா! உனக்காகத்தான் உலகத்தில் மழை பெய்கிறது. இதில் சந்தேகமே இல்லை'' என்று துக்கத்தினால் பொருமிக்கொண்டே கூறினாள்.

யாதவனோ தலையைத் தூக்கவே இல்லை. சுதாவுக்கு ஒருபுறம் சந்தோஷமும் ஒருபுறம் ஆத்திரமும் பொங்கியது. "அண்ணா! கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வதென்கிற பழமொழியை உனக்காகவேதான் உண்டாக்கினார்கள்போலிருக்கிறது. உன் வீட் டிலேயே நீ திருடியதும், உன் தாயாரின் கையைக் குத்தியதும், எந்த தெய்வத்திற்குத்தான் சகிக்கும்? உன் புத்தி கெட்டுத் திருடத் தான் திருடினாயே, இப்படியா குத்தவேண்டும்? திருடிய சொத்துக் களை எந்த நாற்றக் குப்பைத் தொட்டியில் தொலைத்தாய்'' என்று வெடுக் கெனக் கூறினாள்.

நித்:—சுதா! ஆத்திரப் படாதே. ஒருவன் சரணாகதி என்று காலில் விழுந்திருக்கும்போது அவனைக் கைகொடுத்துத் தூக்கி விடவேண்டுமேயன்றி கழுத்து சமீபத்தில் அகப்பட்டிருக்கிற தென்று கெட்டியாய்ப் பிடித்துவிடுவது தர்மமல்ல. சாக்ஷாத் லோக மாதாவாகிய சீதா பிராட்டிக்கு மகத்தான அபசாரத்தைச் செய்து

விட்ட காகாசுரனிடம் கூட தனது ஒப்புயர்வற்ற தயையைக்காட்டி ரக்ஷிக்கும்படி அதே லோகமாதாவாகிய அன்னை பகவானை வேண்டிக்கொண்ட பெருமையை மறந்தாயா! நாம் அவளது இனத்தில் பிறந்ததற்கு அதில் ஆயிரத்தில் ஒரு பங்கு தயையாவது காட்ட வேண்டாமா! போனது போகட்டும்: சுறுக்கென்று இனிமேல் பேசாதே. மனிதர்களின் இதயம் தயையால் நிரம்பிய கேணி என்பதை மறக்காதே" என்று கூறிப் பின் "யாதவ்! எழுந்திரு. இதோபார். என் முகத்தைப் பாரு" என்று மெல்ல கூறி அவன் முகத்தை நிமிர்த்தினாள். அருவி பாய்வதுபோல் கண்களில் நீர் தாரைதாரையாகப் பெருக யாதவ் நித்யாவைப் பார்த்தான். அவனுக்கு கட்டுக்கடங்காத துக்கம் பொங்கியது. "அம்மா! என்னை மன்னிப்பீர்களா!.... உங்கள் முகத்தைப் பார்க்கமுடியவில்லையே! என்னை ஏதோ சித்திரவதை செய்கிறதே. என்னால் சகிக்கமுடியவில்லையே!" என்று கதறினான்.

"பேசாமலிரு. யாதவ்! நான் உன் தாய். என்றைக்கும் நான் இதே வார்த்தைகள்தான் சொல்லிவருகிறேன். இன்றும் அதே வார்த்தைதான். என்றும் அதே வார்த்தைதான். எழுந்திரு. உன் மீது குற்றமே இல்லை. உன்னை ஆதியிலிருந்தே சரியான முறையில் வளர்க்காமல் விட்ட உன் பாட்டியின்மீதும் உன் தகப்பனாரின் மீதுந்தான் குற்றம். அதையும் சொல்லிப் பயனில்லை. சத்சங்கத்தில் உன்னைப் பழக்காமலும், அக்ரமமான லஞ்சம் வாங்கும் கைங்கர்யத்தில் உன்னை உன் பாட்டி உபயோகித்ததுந்தான் உன்னை இக்கதிக்கு ஆளாக்கியது. பகவான் உன்னைக் காப்பாற்றுவார். இனியாவது அசத்து சகவாஸத்தை ஒழித்து நல்ல மார்க்கத்தில் பழகு. என் பீடை என்னோடு போகட்டும்" என்று பிறண்டைப் பாட்டிக்கும் ஒரு டோஸ் சுடச்சுடக் கொடுத்தாள்.

"அம்மா! இனி ஆண்டவன்மீது ஆணையாக நான் துன்மார்க்கத்தில் ப்ரவேசிப்பதில்லை. என் புத்தி கெட்டு சிற்றின்பத்தில் மூழ்கியதன் பலனாக இத்தகைய விபரீதங்கள் நேர்ந்தன. திருடினேன். கொலை செய்வதற்கொப்ப உன்னை இக்கதிக்கு ஆளாக்கினேன். அந்த நகைகளை அந்தப் பெண்ணிடம் கொடுத்தேன். அவள் என்னை 'மதம்விட்டு மதம் மாறினால்தான் மணக்கமுடியும்!' என்றாள். அதற்காகச் சற்று குழம்பினேன். பிறகு அதற்கும் துணிந்தேன்.

கையில் பணமில்லை. திருடுவதற்காகவே இன்று வந்தேன். இதுகாறும் நான் ஊரிலேயே இல்லை. இதோ திருடிய பணம். "வைரத்தை வைரங் கொண்டுதான் அறுக்கவேண்டும். நல்ல பாம்பு விஷத்திற்கு மாற்று இன்னொரு விஷத்தைத்தான் கொடுக்கவேண்டும்" என்று கூறக் கேட்டிருக்கிறேன். மகா விபரீத புத்தியுடன் அந்த வழியில் சென்ற என்னை இந்த பரிதாபகரமான காக்ஷி ஒரு இமைப்பொழுதில் மாற்றியதுகாண எனக்கே வியப்பாகவிருக்கிறது. இனி நான் எது சொல்லி என்ன பலன்? என்னால் விளைந்த துன்பங்கள்

ஒன்றிரண்டில்லை. இப்போது அவைகளை நினைக்கவே பயமாகவிருக்கிறது" என்று தன்போக்காக மனம் உடைந்து பேசுவதைக் கேட்ட எல்லோரும் ப்ரமித்தார்கள்.

பிறகு நித்யா ஒருவாறு எல்லோரையும் தேற்றிச் சமாதானம் செய்தாள். ஒவ்வொருவருடைய மனப் புயலும் ஒரு சிறிது தணிந்தது. நித்யாவின் சந்தோஷந்தான் கூறவே திறமில்லை. உள்ளுக்குள் பூரித்துப் புலகிதமடைந்தாள்.

49

மறுதினம் காலையில் யாதவ் தன்னிடம் வருவான் என்று நித்யா எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். ஆனால் 'அவன் விடியற் காலையிலேயே படுக்கையில் காணவில்லை' என்று தர்மாம்பாள் கூறினாள். 'எங்கேனும் வெளியே சென்றிருக்கலாம்' என்று நினைத்தாள். இவள் எண்ணத்தில் ஏமாற்றமே புகுந்ததுபோல் ஒன்று, இரண்டு, மூன்று என்று நாட்கள் கடந்துவிட்டன. யாதவனை வீட்டிலேயே காணவில்லை. இதென்னவேடிக்கை! இத்தனை தூரம் ஒழுங்கானமுறையில் நடப்பதாகச் சத்தியங்கூடச்செய்து சென்ற மனிதன் பழயபடி வாராததால் எல்லோருக்கும் பலத்த சந்தேகமும், அவன் அன்று ஆடிய ஆட்டமெல்லாம் வெறும் நாடகம் என்ற எண்ணமும் உண்டாயிற்று. நித்யாவுக்கும் ஆச்சரியமும் சந்தேகமும் அதிகரித்தன.

"அவனாவது திருந்துவதாவது? இதெல்லாம் வெறும் வேஷம் என்றுதான் நான் நினைத்தேன். அப்படியே ஆயிற்று" என்றான் ஹரிஹரன். அதற்குத் தாளம் போட்டுப் பேசினாள் பிறண்டைப் பாட்டி. "இனி அவனைப்பற்றி மனத்தால்கூட நான் நினைக்கப்போவதில்லை. அவனால்அடைந்த லாபம் போதும்" என்று ஹரிஹரன் கர்ஜித்தான்.

அச்சமயம் யாதவன் அலையக்குலைய மூச்சுத் திணற ஓடிவந்து, "அம்மா! இதோ பாரு...இதோ யார் வந்திருக்கிறார்கள் பாரு" என்று கூறினான். ஆவலே வடிவாய் தாமோதரன் ஓடிவந்து, "அக்கா!" என்று கூவி அவளைச் சேர்த்துக் கட்டிக்கொண்டான். "அம்மா நித்யா! விஷயங்கள் முற்றும் எனக்குத் தெரியும். உன் பரிதாபத்தைப் பார்க்காதிருந்ததுபற்றி இப்போது சந்தோஷமடைகிறேன். ஆண்டவன் அருள்புரியட்டும்" என்று மூர்த்தி தத்துவமாகவே பேசி நித்யாவைத் தடவிக்கொடுத்தான்.

இம்மாதிரி ஒரு சந்திப்பு வரும் என்று அவள் கனவில்கூட நினைக்கவில்லையாதலால் அவளுக்கு ஒரே பிரமிப்பும் திகைப்புமாகி விட்டன..."தாமுவா...தாமுவா....அப்பாவா...அப்பா....தாமு...... மொண்டியைப் பார்க்கவந்தீர்களா! மகா புண்ணியத்தைச் செய்து

என் தாயார் இவ்வுலகைவிட்டுப் பிரிந்தார்கள். எனக்குத்தான் வேளை வரவில்லை. நீங்கள் எங்கிருக்கிறீர்கள்?...எப்படி வந்தீர்கள்? தாமூ! நீ பிச்சை எடுப்பதாகக் கேள்விப்பட்டேனே!''....

என்று படபடப்பாகக் கூறி முடிப்பதற்குள் தாமோதரன் பேசத் தொடங்கி, "அக்கா! உலகத்திலுள்ள துன்பங்கள் எத்தனை உண்டோ, அத்தனையும் அனுபவித்தாகிவிட்டன. இதோ இந்த மகானுபாவனின் தயவில் இப்போது சுக ஜீவிகளாகக்காலங்கடத்து கிறோம். நேற்று யாதவன் வந்து சகல விஷயங்களையும் கூறி எங்களை அழைத்தான். வருவதற்கு மறுத்தோம். அப்படிச் செய்தால், தான் ஊருக்குத் திரும்பிப் போகமுடியாதென்றும், அங்கேயே தற் கொலை செய்துகொள்வதாயும் கூறினன். உலகத்தில் எல்லாவற் றையும்விட பொறுமையும், க்ஷமா குணமுந்தான் பெரியவை என் பதை எண்ணி இப்போது வந்தோம்'' என்றான்.

கோபு நித்யாவைப் பார்த்தவுடனே சகிக்கமுடியாத வேதனை உண்டாகியதால் ஒரு ஓரமாகச் சுவற்றில் சாய்ந்தான். சுதாவுக்குத் தன் ஜீவாதாரத்தைக் கண்டவுடனே இன்னதென்று விவரிக்கமுடி யாத சந்தோஷமும், கரைபுரண்ட ஆனந்தமும் ஒருங்குகூடிக் குதித்தாள். மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினள். "மாமா! சௌக்யமா!'' என்று கேட்டு மலர்ந்த முகத்துடன் அவனையும் மூர்த்தியையும் வணங்கினள். தாமோதரனின் உள்ளமும்பூரித்துப் புலகிதமடைந்தது. அதை அடக்கவோ மறைக்கவோ அவனல் முடியவே இல்லை. சுதாவை அப்படியே அள்ளி விழுங்கிவிடுபவன்போல் பார்த்தான்.

அன்று தன் மகனைப் பார்த்தபோது எத்தனை உணர்ச்சியும் சந் தோஷமும் பொங்கியதோ, அதேபோல் இன்றும் நித்யாவை மீறிய ஆனந்தப் பெருக்கு எடுத்துவிட்டது. தகப்பனரைப்போய்த் தடவிக் கொடுத்தாள். அப்பா வருத்தப்படாதீர்கள். எல்லாம் அவன் செயல். உங்களை நான் மீண்டும் பார்க்கவேபோவதில்லை என்று நினைத்தேன். இன்று திடீரென்று பார்க்கும் பாக்யத்தைக் கொடுக் கும்போது அளப்பரிய ஆனந்தத்தை அடையும் உள்ளம், துன்பம் வரும்போதும் அனுபவித்துத்தானே ஆகவேண்டும். உலகத்தி லுள்ள சுக துக்கங்களை சமமாக அனுபவிப்பதற்குத்தானே நாம் எல்லோரும் பிறந்திருக்கிறோம். அழாதீர்கள்'' என்றாள்.

கோபுவை அவள் கல்யாணத்திற்கு முதல் நாள் பார்த்தவள் தான்; பிறகு பார்த்ததேயில்லையாதலால் முதலில் பிரமித்தாள். பிறகு தாமோதரனல் விஷயமறிந்து விசனித்து அனுதாபத்துடன் அவனைப் பார்த்தாள். "ஐயா! என் தம்பியையும், தகப்பனரையும், நீங்கள் இதுகாறும் காப்பாற்றியதற்காக எனது மனப்பூர்வமான வந்தனத் தைச் செலுத்துகிறேன். என்னுடைய சக்தியில் அதைத் தவிர நான் சொல்லக்கூடியது ஒன்றுமில்லை'' என்றாள்.

கோபு பதிலே சொல்லவில்லை. "தாமூ! நான் போகிறேன். நீங்கள் பிறகு வாருங்கள்" என்றான். இதற்குள் யாதவ் கோபுவின் கையைப் பிடித்து இழுத்து நிறுத்தி "மாமா! நீங்கள் போகவே கூடாது. நேற்று இரவு பூராவும் நாம் பேசியதை மறந்தீர்களா! நீங்கள்தான் பிள்ளைவீட்டுக்காரர் என்று நீங்கள் சொல்லியதையே நீங்கள் மறக்கலாமா! உங்கள் காரியத்தை முடித்துவிட்டுப் போங்கள்?" என்று கட்டாயப்படுத்தினான்.

'இவர்களை நீ எங்கே பார்த்தாயப்பா! ஏன் அழைத்துவந்தாய்?' என்று நித்யா யாதவனை நோக்கிக் கேட்டாள். யாதவன் தன் தந்தையையும், தாயாரையும் வணங்கிப் பின் "அப்பா! நான் செய்த மகத்தான கொடிய பயங்கர பாதகத்திற்கு என்னவிதமான பரி காரம் தேடலாம் என்று அன்று இரவு பூராவும் என்னிதயம் தத்த ளித்தது. ஒன்றுமே தோன்றாது புரண்டேன். நானே சதிசெய்து நானே பிரித்துவைத்த அன்பு மயமான ஆத்மாக்களைச் சேர்த்துப் பிணைத்துவைத்துக் கடைசி காலத்திலாவது கிழவர் தம் மகளுடன் சந்தோஷமாகவிருக்கும்படிக்குச் செய்தால் ஒரு சிறிது மனச் சாந்தி ஏற்படும்போல் தோன்றியது. அதனால் ஒருவரிடமும் சொல் லாது நானே தேடிக்கொண்டுசென்றேன். நானும் அந்த கிருஸ்துவப் பெண்ணும் வெளியூருக்குச் சென்றிருக்கையில் கோபுவினிடமே இவர்கள் வந்து சேர்ந்திருப்பதாக நம்ம கிராமத்து மணிய காரர்மூலம் அறிந்தேன். உடனே நேரே அங்குபோய், நான் செய்த பாதகங்களை நானே நேரில் சொல்லி அவர்களிடம் மன்னிப்புப் பெற்று கெஞ்சிக் காலில் விழுந்து அழைத்து வந்தேன். இனி எவ் விதமான தாமதமும் வேண்டாம். சுதாவை நாம் செய்த சித்திர வதைபோதும். அவள் இதயம் குளிர அவளை அவள் அன்பனிடம் தத்தம் செய்துவிடுங்கள்" என்று மூச்சுவிடாது கூறினான்.

ஹரிஹரன் மூளையே கலங்கியவன்போல் அப்படியே அசை வற்றுக் கல்லுபோல் உட்கார்ந்திருந்தான். கிழவரின் காலில்விழுந்து வணங்கி "சகலத்தையும் மறந்துவிடவேண்டும். வாக்கு நாணய மற்றப் பாவி நான் செய்த கொடுமைகள் ஒன்றிரண்டல்ல. எல்லாம் இனி சொல்லி உபயோகமில்லை. போதாக் காலத்தின் வேளையின் பலன் சுற்றியடித்தது. மூளையும் கலங்கிச் சிதறியது.....தாமூ! என்னை மன்னித்துவிடு...பெரியவரே! என்னை க்ஷமிக்கவேண்டும்... தாமூ! நான் செய்த கொடுமைக்கு ப்ராயச்சித்தம் உங்களிடம் மன்னிப்புக் கேட்பதைவிட வேறு ஒன்றுமில்லை. அதற்குப்பரிகாரம் என் சுதாவை அங்கீகரித்து என்னையும் மன்னியுங்கள்" என்று நாக் குழற உளறியவாறு கூறினான்.

பிரண்டைப் பாட்டி மட்டும் இச் சந்தர்ப்பத்தை வெறுமனே விட்டு விடுவாளோ! "உம். என்னமோ! கண் திருஷ்டியே இந்த

குடும்பத்தைப் பிடித்து ஆட்டியது. ஞானமும் இருந்து, இந்த கல்யாண காரியம் நடந்திருந்தால் எத்தனையோ சந்தோஷமாயிருக்கும். எல்லாம் கொடுத்துவைத்தவரைக்குந்தானே நடக்கும். யாரிட்ட சாபமோ! யார் செய்த பாபமோ! இப்படியெல்லாம் ஒரு சோதனை நடந்தது. சாக்ஷாத் கிருஷ்ணபரமாத்மாவையே துணையாகக்கொண்டிருந்தும் பாண்டவர்களும் த்ரௌபதியும் படாத கஷ்டங்களையும் பட்டிருக்கையில் நாம் எந்த மூலை? அந்த பாழாப்போன கிளப்பிலே நான் மெம்பராகச்சேர்ந்திராமலிருந்திருந்தால் என்யாதவனின் புத்தி கெட்டே இருக்காது. உம்...எல்லாம் வேளையின் பலன். போனது போகட்டும். பகவானே பார்த்து முடிபோட்டிருக்கும் காரியத்தை மனுஷ்யாளால் மாற்றமுடியாது என்பது இப்பதான் தெரிகிறது. அப்பா! தாமூ! எல்லாத்தையும் மறந்துவிடுப்பா! ஏதோ கனாக்கண்டதாக எண்ணிக்கொள்ளு...சம்மந்தி ஸ்வாமீ! பெண்ணைக் கொடுத்ததுபோல், பெண்ணை வாங்கிக்கொண்டு எங்களை மன்னிக்கவேண்டும்" என்று ஒருமட்டாக மூச்சுப் பிடித்துக்கொண்டு பேசினாள்.

இதைக்கேட்ட நித்யாவின் இதயம் மகிழ்ச்சி மயமாக மாறி ஆனந்தக்கண்ணீராகப் பெருகியது. அந்த சந்தோஷமிகுதியால் சுதாவையும் தாமோதரனையும்சேர்த்துக் கட்டிக்கொண்டு தன் மொண்டிக்கையின் தோற்றத்தையும் மறந்து குதித்தாள். "அப்பா! இதோ பாருங்கள். இதோ உங்கள் ரத்தினங்கள், விலையிலாத மாணிக்கங்கள்" என்று கூறியவாறு அந்தகனின் கையால் இருவரையும் தடவிப் பார்க்கச் செய்தாள். இந்தக் காக்ஷியைக்கண்ட வாஹரானின் இதயமும் பொங்கிப் பூரித்துக் கண்ணீர் பெருகியது. ஆனந்தக் கண்ணீர் பெருகாதவர்கள் இல்லை.

50

பின்னும் இரண்டு மாதங்கள் ஓடி மறைந்தன. ஹரிஹரன் தன் தொழிலாகிய லஞ்சம் வாங்குவதை அடியோடு விட்டுவிட்டான். சம்சாரபாசமும் அதிகமாகிவிட்டது. புதிய மருமகளும், மருமகனும் சம்மந்திகளும் வந்துவிட்டதால் அதற்குத் தக்கபடி மரியாதைகளுடன் நடக்கப் பழகிவிட்டான். பிரண்டைபாட்டி பெட்டிப் பாம்பாக அடங்கியதோடு, நித்யாவிடமே பெருதனத்தை விட்டுவிட்டு, ஜபமாலையும் கையுமாக உட்கார்ந்து சதா ஜபம் செய்துகொண்டிருப்பதை தர்மராஜனும், தர்மாம்பாளும் வேடிக்கை பார்த்துச் சிரிக்கவும் தொடங்கினார்கள். ஆனால், சுதா இதை என் பார்க்கப்போகிறாள்? தன் கணவனின் தரிசனம் எப்போதுகிடைக்குமென்று எதிர்பார்ப்பாள். ஒரு தினம் அவன் பின்புறமாக வந்து

அணைத்தவாறு, 'இனி விடமாட்டேன்; முன்போல் எழுந்து ஓட மாட்டாயே! இனி நீ என் சொத்துதானே' என்று கொஞ்சினன்.

கலகலவென்று சிரித்தபடியே, "இம்மாதிரி பின்புறமாக வந்து பயங்காட்டவேண்டாமென்றால் கேட்பதில்லையே! அப்படியே தூக்கிவாரிப்போட்டது" என்றாள். 'அடாடா! தூக்கிவாரிப்போட்டதா! இதோ பயத்திற்கு மந்திரிக்கிறேன்...கண்ட, மண்ட, பண்டித, சண்டித, கலாதரி, பலாதரி, ஓம் க்ராளி! வீர காளி! சூர காளி! பத்ரகாளி!...ஹூம்...ஹூம்'...என்று அவள் முகத்திற்கு நேரே ஊதினன். சுதா கொல்லென்று சிரித்ததைப் பார்த்த நித்யாவும் கலகல வென்று சிரித்தாள். இவைகளெல்லாவற்றையும் மற்றொரு புறத்தி லிருந்து பார்த்துப் பேரானந்தமடைந்த ஹரிஹரனும் நகைத்தான். அன்று சித்திரை வருஷப் பிறப்பு தினமாகையினல் நித்யாவுக்குத் தன் ஆதிகாலத்து நிகழ்ச்சிகளெல்லாம் மனக் கண்முன்பு தோன்றி பேரானந்தத்தைக் கொடுத்தன. அதே சமயம் சுதா தன் கணவன் விருப்பப்படி,

உலகெல்லாம் வாழ்கவே!
மலைபோன்ற துன்பம் எல்லாம்
பனிபோன்று நீங்கவே...

1 ஆனந்த நுபவின் அருள்மாரி பெய்யவே
க்ஷேமம் செழிக்கவே செல்வங்கள் தழைக்கவே, (உ)

2 விஜயங்கள் ஓங்கவும் விசனங்கள் நீங்கவும்
விஜய ரதஸாரதி வியனருள் தேங்கவும். (உ)

என்கிற வருஷப் பிறப்பு வாழ்த்துப் பாடலை வெகு இனிமை யாகப் பாடினுள். "ஆஹா...என்ன அற்புதம்! என்ன ஆனந்தம்! இத்தகைய கானத்தைக் கேட்பதிலும் உல்லாசக் காக்ஷியைக் காண்பதிலும் உள்ள நித்யகல்யாண வைபவ சுகமும் மங்களகரமான மனோகரமகிழ்ச்சியும் தவிர வேறு என்னதான் இருக்கிறது? எல்லோருடைய உள்ளங்களும் பூரித்துப் புலகிதமடைந்தன. நித்யாவின் ஆனந்தம் எல்லை கடந்தது. அப்படியே சந்தோஷப் பதுமைபோலானாள். அவள் ஆயுள் காலத்தில் என்றுமே கண்டறியாத சுகானந்தத்தில் அவள் இதயம் ஆழ்ந்து எல்லையற்ற இன்பவாரிதியில் மிதந்தது. கண்களில் ப்ரகாசம் ஜ்வலித்தது. முகத்தில் புன்முறுவல் தாண்டவமாடியது. எல்லோரும் தீர்க்காயுளாயிருக்கவேண்டுமென்று அவளது தூய இதயம் பரிபூரண அன்புடன் வாழ்த்தியது. சுபம்!

1. ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்கு
பொன்றுந் துணையும் புகழ்

2. இன்னாசெய்தாரை யொறுத்தலவர் நாண
நன்னயஞ் செய்துவிடல்

—திருக்குறள்.

போங்கும் மங்களம் எங்கும் தங்குக.

நேயர்களுக்கு முக்கிய அறிவிப்பு

இந்த பக்கத்திலும், க்ஷேமலாபத்திலும் உள்ள விஷயங்களைக் கவனமாகப் படிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

15-வது ஆண்டிலிருந்து இதுவரை சந்தா நேயரா ?

1941 டிசம்பர் 31உ வரையில்தான் !

அதன்பிறகு கிடையாதென்பதை கவனிக்கவும்

"வானக்குயில்" ஆரம்பம் முதல் சந்தாதாரராய்ச் சேர்ந்து, தொடர்ச்சியாக ஆதரித்து, புது வருஷ சந்தாவை 31—12—41 தேதிக்குள் அனுப்புகிறவர்களுக்கு

தனிப்பரிசு ரூ. 2 விலையுள்ள நாவல்

19-வது ஆண்டுச் சந்தாவை அனுப்புகையில், உங்களது சந்தாநம்பரைக் குறித்து, நமது நாவல்களில் முழு விலை ரூ. 2 (சந்தா நேயர்களுக்குக் குறைந்தவிலையல்ல.) பெறுமான நாவல் அல்லது நாவல்களின் பெயரை எழுதி இனாமாகப் பெற்றுக்கொள்ளுங்கள். ரூ. 2-க்கு மேற்பட்ட விலையுள்ள நாவல்கள் வேண்டுமாயின், அதிகமாகும் பணத்தை அனுப்பவேண்டும். இனாம்நாவல்களின் தபாற்செலவுக்காக உள்நாட்டினர் அணா ஆறும், வெளிநாட்டினர் அணா எட்டும் சேர்த்து அனுப்பவும்.

அப்படியாயின்

குறிப்பு:—15, 16, 17, 18-வதாண்டுகளில் இனாம் நாவல் பெற்றவர்கள் மறுபடியும் 19-வதாண்டுக்கும் பெற முடியாதென்பதைக் கவனிக்கவும்.

19-வது ஆண்டுப் பரிசுகளின் விவரம்

முதல் பரிசு ரூ. 20	புது வருஷச்சந்தாவை டிசம்பர் மாதம் 26-ந் தேதிக்குள் அனுப்பும் சந்தாநேயர்களுடைய நம்பர்களைக் குலுக்கிப் போட்டு 6பிரைஸ் சீட்டுகளை எடுத்து அவற்றிற்கு இதிற் கண்டபரிசுகள் நமது நாவல்களாகக் கொடுக்கப்படும்.	3-வது பரிசு ரூ. 10
2-வது பரிசு ரூ. 15		3 பரிசுகள் ரூ. 5 விகிதம்

ஒரு வருஷ சஞ்சிகை இனாம்

3 புது சந்தாதாரர்களைச் சேர்த்துக்கொடுக்கும் சந்தா நேயர்கட்கு, 19-வது ஆண்டின் சஞ்சிகையை இனாமாக அனுப்புவதுடன் அவர்களும் ஷை பரிசுப் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

சந்தாநேயர்களுக்கு ஒரு அபூர்வ சந்தர்ப்பம்

உடனே முந்துங்கள். எத்தனை புதிய சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புகிறீர்களோ, அத்தனை எட்டணா விலையுள்ள நாவல்களை இனாமாகக் கொடுப்பதுடன், உங்களுடைய நம்பர்களும் சீட்டுக் குலுக்குவதில் சேர்த்துக்கொள்ளப்படும். பணம் அனுப்புகையில் வேண்டிய நாவல்களின் பெயரைத் தெரிவித்து, 8 அணா நாவலுக்கு ஒரு அணா வீதம் (வெளிநாட்டினர் 1½ அணா) தபாற்செலவுக்காக சேர்த்து அனுப்பவும்.

பேபர் பஞ்சம்

இதுவரை ஒவ்வொரு ஆண்டின் முதல் இதழை நமது பழைய சந்தாநேயர்களுக்கு இனாமாக அனுப்பினோம். யுத்த காரணமாக பேபர் அகப்படுவது மிகவும் கஷ்டமாகவிருப்பதால் புது வருஷ சந்தாவை முன்னதாக செலுத்தியவர்களுக்கு மாத்திரமே முதல் இதழை அனுப்ப முடியுமாதலால், டிசம்பர் 26-ந் தேதிக்குள் எல்லா நேயர்களும் சந்தாவை அனுப்பிப் பரிசுப்போட்டியிலும் ந்துகொள்ளக் கோருகிறோம்.

குறிப்பு:—விலாசம் மாறுபவர்க ன் தெரிவிக்காததால் சஞ்சிகை தவறிவிடின் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல. அவர்கள் சஞ்சிகையின் விலைக்காக (உ ணா ஸ்டாம்பு(வெளிநாடு) ஒரு போஸ்டல் கூபன் அனுப்பவேண்டும்.